# HARTI



# நிருவாக அறிக்கை

## 2015

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்
இலக்கம் 114, விஜேராம மாவத்தை,
கொழும்பு 07.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தாபிப்பு | 1 - 2 |
| பணிப்பாளர்கள் சபை | 3 - 5 |
| பொதுவான கண்கோட்டம் | 6 |
| விவசாய வள முகாமைத்துவம் | 07-14 |
| சுற்றாடல் நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு | 15-16 |
| சூழல், நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு | 17-20 |
| சந்தைப்படுத்தல் உணவு சார் கொள்கை விவசாய வர்த்தகப் பிரிவு | 21-29 |
| மனித வளங்கள் நிறுவன சார் அபிவிருத்திப் பிரிவு | 30-37 |
| ஏனைய செயற்பாடுகள் | 38-39 |
| தரவுகள் தகவல் முகாமைத்துவப் பிரிவு | 40-41 |
| நூலகம் | 42-43 |
| நிறுவனசார் சம்பாத்தியங்கள் | 44 |
| வெளியீட்டுப் பிரிவு | 45-46 |
| 2015 திசம்பர் 31 இற்கான ஆளணி நிலை பற்றிய விபரம் | 47-49 |
| பதவியணி அபிவிருத்தி | 50-51 |
| நிதிசார் கணக்குகள் | 52-63 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை -14(2)(இ) | 64-87 |

# தாபனம்

1972இன் 5ஆம் இலக்க கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் கீழ் 1972இன் நியதியாக்க உறுப்பொன்றாக ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம் (ஹெ.க.ஆ.ப.நி.) தாபிக்கப்பட்டது. இது கமத்தொழில் அமைச்சின் கீழ் நியதியாக்க உறுப்பொன்றாகத் தொழிற்படுகின்றது. கமநல மற்றும் கிராமியத் துறையின் கொள்கை முனைப்பிலான ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் தேவைகளை மேம்படுத்துவதற்காக பிரதானமாகத் தாபிக்கப்பட்டது. அது 1972இல் நாட்டில் கமநல ஆராய்ச்சியின் முன்னோடியொன்றாகத் தாபிக்கப்பட்டது முதல் சமூக-பொருளாதார ஆராய்ச்சியையும், பயிற்சியையும் நடத்துவதிலும், கமநலத் துறை அபிவிருத்திக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்காக தகவலை வழங்குவதிலும் நாற்பது வருடங்களுக்கு மேற்பட்ட வளமிக்க அனுபவங்களை ஹெ.க.ஆ.ப.நி. கொண்டுள்ளது.

**ஆணை:**

மேற்படி சட்டத்தின் பிரிவு 3(1)இன் ஏற்பாடுகளின் கீழ், நிறுவகத்தின் பொதுவான கடப்பாட்டிலான நோக்கங்கள் வருமாறு:

i. கமநல ஆராய்ச்சியில் பேணுதல், உதவியளித்தல், ஊக்கமளித்தல் அத்துடன் ஒத்துழைத்தல்;

ii. அரசாங்கத் திணைக்களங்கள், உள்ளூராட்சிச் சபைகள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், மற்றும் வேறு நிறுவனங்கள் ஆகியவற்றினால் பொறுப்பேற்கப்பட்ட கமநல ஆராய்ச்சியை ஒருங்கிணைத்தல்;

iii. கமத்தொழிலின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் நிறுவனரீதியான காரணிகள் தொடர்பில் ஆய்வுகளையும், ஆராய்ச்சியையும் மேற்கொள்ளுதல்;

iv. கமத்தொழில் நோக்கங்களுக்காக காணியின் பொருளாதார உபயோகம் தொடர்பில் ஆய்வுகளையும், ஆராய்ச்சியையும் மற்றும் கற்கைகளையும் பொறுப்பேற்றல்;

v. கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பில் சமூக-பொருளாதார ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்;

vi. கமநல ஆராய்ச்சி தொடர்பாக பயிற்சி வசதிகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒன்றில் தனியாக, அல்லது இலங்கையில், அல்லது வெளிநாடுகளில் உள்ள வேறு நிறுவனங்களுடன் இணைந்து வழங்குதல் அல்லது அமுல்செய்தல். அத்துடன் இவை தொடர்பில் டிப்ளோமாக்கள், பட்டங்கள், பரிசுகள், அதிவிசேட சித்திகள் ஆகியவற்றை வழங்குதல்.

vii. உள்ளூர், பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் மகாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றுக்கு ஆதரவளித்தலும், நடத்துதலும்;

viii. ஆசிய நாடுகளின் பிராந்தியத் தேவைகளுக்கு சேவையாற்றுவதற்காக அவற்றின் ஒத்துழைப்புடன் கமநலக் கட்டமைப்பின் பிரச்சனைகள் தொடர்பில் இத்தகைய ஆராய்ச்சியை மேற்கொள்ளுதலும், கமநலப் பிரச்சனைகள் மீது தகவலைச் சேகரிப்பதற்கும், பரப்புவதற்கும் நிலையமொன்றை வழங்குதலும்;

ix. இத்தகைய ஆராய்ச்சியை விசேட மேற்கோளுடன் இலங்கைக்கும், பொதுவாக ஆசிய நாடுகளுக்கும் கமநல அபிவிருத்தியுடனும், நவீனமயப்படுத்தலுடனும் தொடர்பான பிரச்சனைகளுக்கு தொடர்புபடுத்தல்.

**நோக்கு:**

நிலைத்திக்கத்தக்க கமநல மற்றும் கிராமிய அபிவிருத்திக்கு அறிவைத் தோற்றுவிப்பதற்கும், பரப்புவதற்கும் தலைமைப் பதவியை வகித்தல்.

**செயற்பணி:**

ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகளை நடத்துவதன் மூலம் கமநல மற்றும் கிராமியத் துறையைப் பலப்படுத்துதல்

**குறிக்கோள்கள்:**

i. கமநல பிரச்சனைகள் தொடர்பில் சமூக-பொருளாதார ஆராய்ச்சியில் திறமையின் நிலையமொன்றாக விளங்குதல்;

ii. அரசாங்க, வியாபார மற்றும் ஆராய்ச்சி சனசமூகங்களில் திட்டமிடலாளர்களுடனும், கொள்கை வகுப்போருடனும் நெருக்கமாக இணைந்திருத்தல்;

iii. அறிவைத் தோற்றுவிப்பதன் மூலமும், நேர காலத்திற்கு பரப்புவதன் மூலமும் கொள்கை நடைமுறையை அதிகளவு செயற்றிறனாக்குதல்;

iv. தேசிய கொள்கைப் பிரச்சனைகள் மீது சுதந்திரமான மதிப்பீடுகளை வழங்குவதன் மூலம் பொது மக்களுக்கு அறிவித்தல்;

v. அதன் பணியாளரின் ஆற்றலளவுகளிலும், நிறுவனத்தின் அறிவுத் தளத்திலும் மூலதனமிடுவதன் மூலம் சமூக-பொருளாதாரக் கொள்கைக்கான ஆற்றலளவைப் பலப்படுத்துதல்;

vi. பயிற்சியின் ஊடாக கிராமிய அபிவிருத்திப் பங்குதாரர்களின் ஆற்றலளவை அதிகரித்தல்.

## ஆளுனர் சபை

| | | | |
|---|---|---|---|
| திரு.பீ.விஜேரத்ன | தலைவர் | - | செயலாளர், கமத்தொழில் அமைச்சு மற்றும் ஆளுனர் சபைத் தலைவர் |
| திரு.இ.எம்.அபேரத்ன | பணிப்பாளர் | - | பணிப்பாளர், ஹெ.க.ஆ.ப.நி. (மார்ச் வரை) |
| திரு.ஹபுதந்திரி தர்மசேன | பணிப்பாளர் | - | பணிப்பாளர், ஹெ.க.ஆ.ப.நி. (ஏப்ரல் முதல்) |
| திரு.என்.பி.வி.வி.பியதிலக | சபை உறுப்பினர் | - | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்), கமத்தொழில் அமைச்சு |
| திரு.எல்.பீ.எஸ்.பீ.தயாரத்ன | -அதே- | - | மேலதிகச் செயலாளர் (காணிகள்), காணிகள் அமைச்சு |
| திரு.எம்.ஆர்.வி.ஆர்.மீபுர | -அதே- | - | பணிப்பாளர், பொது வியாபார முயற்சிகள் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு |
| திருமதி கே.பியரத்ன | -அதே- | - | மேலதிகச் செயலாளர் (மீள் ஒழுங்கமைப்பு), கைத்தொழில்கள், வர்த்தக அமைச்சு |
| திருமதி கே.என்.கே.சோமரத்ன | -அதே- | - | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்), பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு |
| திரு.எம்.சி.கமகே | -அதே- | - | பணிப்பாளர், பாரம்பரிய கைத்தொழில்கள், சிறிய வியாபார முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு |
| திருமதி அனோஜா பி.குருகே | -அதே- | - | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) கல்வி அமைச்சு |
| திருமதி ஜி.எல்.டி.தஹநாயக்க | -அதே- | - | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி), உணவுப் பாதுகாப்பு அமைச்சு (மார்ச் முதல்) |
| கலாநிதி (திருமதி) வை.எம்.இந்திரரத்ன | -அதே- | - | மேலதிகப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி |
| பேராசிரியர் கே.சமரசிங்க | -அதே- | - | பீடாதிபதி, கமத்தொழில் பீடம், பேராதனை பல்கலைக்கழகம் |

| | | | |
|---|---|---|---|
| கலாநிதி ஆர்.ஆர்.எ.விஜேகோன் | -அதே- | - | கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் |
| திரு.ஆர்.பி.ஆர்.ராஜபக்ஷ | -அதே- | - | காணி ஆணையாளர் நாயகம் |
| திரு.எம்.எ.எஸ்.வீரசிங்க | -அதே- | - | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் |
| எந்திர.திரு.வை.அப்துல் மஜீத் | -அதே- | - | பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனம் |
| திரு.உபுல் ஷாந்த டீ அல்விஸ் | -அதே- | - | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் |
| திருமதி டி.என்.ஹெட்டிஆரச்சி | } | - | பதில் செயலாளர், ஆளுனர் சபை (மே 11 வரை) |
| திரு.டி.சி.சிறிபத்தன | } | - | பதில் செயலாளர், ஆளுனர் சபை (மே 12 முதல்) |

## ஆளுனர் சபையின் கூட்டங்கள்

| கூட்டத்தின் திகதி | | பங்கெடுத்த உறுப்பினர்களின் எண். |
|---|---|---|
| 1. | 31 மார்ச் 2015 | 09 |
| 2. | 5 ஜூன் 2015 | 10 |
| 3. | 29 ஜூலை 2015 | 10 |
| 4. | 22 டிசம்பர் 2015 | 10 |

## கணக்காய்வு, முகாமைத்துவக் குழு

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.ஆர்.வி.ஆர். மீபுர (தலைவர்) | - | பணிப்பாளர், பொது வியாபார முயற்சிகள் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு |
| 2. | திரு.எ.எல்.எ.அசோக சிறிவர்தன (உறுப்பினர்) | - | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்), கமத்தொழில் அமைச்சு |
| 3. | திரு.எம்.சி.கமகே (உறுப்பினர்) | - | பணிப்பாளர், பாரம்பரிய கைத்தொழில்கள், சிறிய வியாபார முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு |
| 4. | திருமதி எம்.ஐ.புஷ்பா ஹேமமாலி (அவதானிப்பாளர்) | - | கணக்காய்வு அத்தியட்சகர் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் திணைக்களம் |
| 5. | திரு.என்.பி.வி.சி.பியதிலக (உறுப்பினர்) | - | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்), கமத்தொழில் அமைச்சு |
| 6. | செல்வி கே.என்.கே.சோமரத்ன (உறுப்பினர்) | - | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்), பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு |
| 7. | செல்வி ஜி.எச்.ஐ. விந்தியா (அவதானிப்பாளர்) | - | கணக்காய்வு அத்தியட்சகர் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் திணைக்களம் |
| 8. | திரு.பி.எல்.நமசேன | - | பிரதம உள்ளக கணக்காய்வாளர், கமத்தொழில் அமைச்சு |

## கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள்

| கூட்டத்தின் திகதி | பங்கெடுத்த உறுப்பினர்களின் எண். |
|---|---|
| 02.01.2015 | 04 |
| 13.07.2015 | 05 |
| 21.10.2015 | 04 |
| 28.12.2015 | 04 |

# கண்ணோட்டம்

இலங்கையின் பொருளாதாரத்தின் பாரிய துறையொன்றாக கமத்தொழில் இன்னும் விளங்குவதுடன், இது மொ.உ.உற்பத்தியின் சுமார் 10%க்கும், தொழில் படையின் 30%க்கும் கணக்கு காட்டுகின்றது. உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முனையிலிருந்தும், உணவுகளின் இறக்குமதி மீது செலவழிக்கப்படும் பாரிய செலவினத்தைக் குறைப்பதிலிருந்தும், கமத்தொழிலின் முன்னேற்றமானது அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தெடுக்கும் பாரிய துறையாக விளங்குகின்றது.

கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி ஆகியன தொடர்பில், புதிய சவால்கள் தோன்றியுள்ளன. அவற்றின் உற்பத்தித்திறனின் குறைவு மற்றும் தேக்கநிலை, குறைந்த இலாபம் மற்றும் வருமானம், உயர்ந்த உற்பத்தி ஆகுசெலவு, சரீரஉழைப்புக்கான பற்றாக்குறை, நிலையற்ற சந்தை விலைகள், மறுதலையான காலநிலை நிலைமைகளிலிருந்து சடுதியான பயிர்ச் சேதங்கள் அத்துடன் தோதான விஸ்தரிப்பு ஆலோசனையைப் பெறுவதில் கஷ்டங்கள் ஆகியன சிலவாகும்.

கமத்தொழில் முன்னேற்றத்திற்கு முறைமையான கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கு வீரியத்துடன் பணியாற்றும் அதேவேளை, கமத்தொழில் தொடர்பான வருமானம் மற்றும் தொழில் ஆகிய இரண்டினையும் உயர்த்தும் நோக்கத்துடன் இச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான புதிய மூலோபாயங்களைப் பின்பற்றுவதற்கு புதிய அரசாங்கம் பேரார்வங்களைக் கொண்டுள்ளது.

கமநல மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான பிரச்சனைகள் மீது கொள்கை முனைப்பிலான ஆய்வுகளில் ஈடுபடுகின்ற நிறுவனமொன்றாக ஹெ.க.ஆ.ப.நிறுவனமானது கொள்கைப் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக அதிகளவு பகுப்பாய்வு அவசியப்படுத்தும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய பிரச்சனைகள் மீதான அடிப்படையிலான ஆய்வுகளைப் பொறுப்பேற்றது. மேலதிகமாக, பாரிய அபிவிருத்தித் நிகழ்ச்சித்திட்டங்களைக் சுருதி மெருகூட்டுவதற்கான முக்கியமான வழிகாட்டல்களை வழங்குவதற்காக கமத்தொழில் அமைச்சின் இத் நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பாய்வதற்காக ஒரு தொகையிலான ஆய்வுகளை நிறுவகம் பொறுப்பேற்றது.

மேலே விளக்கப்பட்டுள்ளவாறு, அமைச்சின் முன்னுரிமை வேண்டுகோள்களின் மீது கரிசனையிலான ஆண்டின் போது 16 ஆராய்ச்சி ஆய்வுகளையும், 84 பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துவதற்கு நிறுவனம் திட்டமிட்டிருந்தது. இந்த மதிப்பாய்வு அப்பியாசங்களில் இரண்டு அமைச்சு தொடர்பானவையாகும்: ஒன்று *அவரே அஹவராய்* வீட்டுத் தோட்டச் செய்கைத் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பாய்வு அப்பியாசமாகும். ஏனையவை வர்த்தக பண்ணைத் நிகழ்ச்சித்திட்டத்தினதும், இளைஞர் கம-தொழில் வாண்மைத் நிகழ்ச்சித்திட்டங்களினதும் மதிப்பாய்வாகும். இன்னோர் ஆய்வு கமத்தொழில் திணைக்களத்தின் பருவ காலம் சாராத பெரிய வெங்காய உற்பத்தித் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பானதாகும். நெல் துறையின் சரீரஉழைப்பு பயன்பாடு மீதான இயந்திரவாக்கத்தின் தாக்கம் மீதும், மானாவாரி கமக்காரர்கள் மீதான வரட்சியினதும், நெல் உற்பத்தியில் பூச்சிநாசினியின் உபயோகம் மீதான தாக்கம் மீதுமான ஆய்வுகள் தோன்றிவரும் பிரச்சனைகளாகும். சில ஆய்வுகள் வேறு அமைச்சுக்களினதும், நிறுவனங்களினதும் வேண்டுகோள்களினாலானவையாகும். சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மீதான ஆய்வு பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்காக நடத்தப்படுவதுடன், வேறு இரு நிகழ்ச்சித்திட்டங்கள் (மலர்ச்செடி வளர்ப்புக்கும், குடித்தன வருமான அதிகரிப்பு வழி முறைகளுக்கும் தொடர்பானவை) நுவரெலியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டச் செயலகங்களுக்காக நடத்தப்பட்டன. ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோள் மீது புகையிலைச் செய்கையின் சர்ச்சைக்குரிய பிரச்சனை பற்றி ஓர் ஆய்வு நடத்தப்பட்டது.

திட்டமிடப்பட்ட 84 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில், 59 நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. ஆரோக்கிய நிலையைப் பேணுவதற்காகவும், சூழல் மூலவளங்களைப் பாதுகாப்பதற்காகவும் CKDU பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கமக்காரர்களை அறிவூட்டுவதற்காக CKDU குறைபாடு உள்ள பகுதிகளில் கமக்காரர்களுக்காக ஆரோக்கியமான சந்ததியொன்றுக்கான கமத்தொழில் என தலைப்பிடப்பட்ட ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டம் விசேடமாக வடிவமைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 39 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. விழிப்பியலை உருவாக்குவதற்காக இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் ஒரு வீடியோவும் உருவாக்கப்பட்டது.

**ஹேப்புதந்திரி தர்மசேன**
**பணிப்பாளர்**

## கமத்தொழில் கொள்கை, கருத்திட்ட மதிப்பாய்வுப் பிரிவு

**முடிக்கப்பட்ட ஆய்வுகள்**

1. **பருவமற்ற காலத்தின் போது மரக்கறிகளை உற்பத்தி செய்வதற்கு கமத்தொழில் அமைச்சினால் நிறைவேற்றப்பட்ட *அவரே அஹவராய்* என்ற திட்டத்தின் மதிப்பாய்வு**

**ஆராய்ச்சிக் குழாம்:** கலாநிதி டபிள்யு.எ.ஆர்.விக்ரமசிங்க - இணைப்பாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
மரக்கறி பருவமற்ற காலமான மே, ஜுன் மற்றும் ஜுலை மாதங்களின் போது குடித்தனங்களுக்கு மரக்கறிகளின் கிட்டுந்தன்மையை அதிகரிப்பதற்காக கமத்தொழில் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட முன்னோடிக் கருத்திட்டமொன்றே *அவரே அஹவராய்* ஆகும். க.சே.நிலையங்களின் ஊடாக நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன், அடிமட்ட மட்டத்தின் அலுவலர்களாக ARPAக்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். மரக்கறித் தாவரங்களை விநியோகிப்பதில் கமத்தொழில் போதனாசிரியர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். எனவே, இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதில் கமத்தொழில் திணைக்களமும், கமநல சேவைகள் திணைக்களமுமே சம்பந்தப்பட்டிருந்த தாபனங்களாகும். நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதில் 50 பயனாளிகளுக்கு மரக்கறித் தாவரங்களை வழங்குவதற்கு ஒவ்வொரு ARPA எதிர்பார்க்கப்பட்டது. ஒவ்வொரு பயனாளிக்கும் 7 மரக்கறிகளைக் கொண்ட 30 தாவரங்களின் தொகுதியொன்று வழங்கப்பட்டது. பயனாளி ஒருவருக்கு வழங்கப்பட்ட சாடியிலான 30 மரக்கறித் தாவரங்களின் தொகுதியொன்று 6 பச்சை மிளகாய் தாவரங்களையும், 6 கறிமிளகாய் தாவரங்களையும், 6 கத்தரி தாவரங்களையும், 6 தக்காளி தாவரங்களையும், 2 சிறகு அவரைத் தாவரங்களையும், 2 வெள்ளரித் தாவரங்களையும் கொண்டிருந்தது. 30 தாவரங்களைக் கொண்ட தொகுதியொன்று ரூ.150 ஆகுசெலவைக் கொண்டதுடன், தாவரங்களை வாங்கும் போது இத் தொகையை பயனாளி ஒருவர் கொடுப்பனவு செய்தார்.

தற்போதைய திட்டத்தை திருத்தியமைப்பதற்கும், எதிர்காலத் திட்டத்தை வகுத்தமைப்பதற்கும் இத் திட்டத்தின் அமுலாக்கத்தின் நடைமுறையின் வெற்றிகள், தோல்விகள் மற்றும் பற்றாக்குறைகள் ஆகியன அடையாளங் காணப்படவேண்டும். இத் திட்டத்தின் அமுலாக்கத்தின் நடைமுறையைப் பரீட்சிப்பது, பயனாளிகள் மீது இத் திட்டத்தின் தாக்கங்களை மதிப்பிடுவது மற்றும் இத் திட்டம் பற்றிய பயனாளிகளின் ஒருமைப்பாட்டினைப் புரிந்துகொள்ளுதல் ஆகிய மூன்று திட்டவட்டமான நோக்கங்கள் இருந்தன.

**முடிவுகள்:**
தாவரங்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட குறைந்த தரத்திலான விதையின் காரணமாக, தாவரங்கள் தரத்தில் சிறந்தவையாக விளங்கவில்லை என 75%க்கு மேற்பட்ட DO தெரிவித்தனர். பாகற்காய், சிறகு அவரை மற்றும் வெள்ளரி போன்ற கொடி வகைகள் சாடியில் நாட்டப்பட்டிருந்ததுடன், பயனாளிகளின் குடித்தனங்களுக்கு ஏற்றிஇறக்கும் போது நன்கு வளர்ந்திருந்த தாவரங்கள் சேதமடைந்தன. இப்பாகமுவ க.சே.நிலையத்தைச் சேர்ந்த ARPAக்களின் கூற்றுப்படி, மரக்கறித் தாவரங்களை நாட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட சாடிகள் அவசியமான போஷாக்குகளைக் கொண்டிருக்கவில்லை. எனவே, தாவரங்கள் பலவீனமடைந்ததுடன், க.சே.நிலையத்திற்கு ஏற்றிஇறக்கிய உடனேயே வாடிப்போயின.

தமது பிரிவுகளிலிருந்து பயனாளிகளை ARPAக்கள் தெரிவுசெய்து, தாவரங்களை விற்பனை செய்தனர். தாவரங்களுக்கு மக்கள் கொடுப்பனவு செய்ய வேண்டும் என்பதால், அவற்றை வாங்குவதற்கு அவர்கள் தயங்கினார்கள். எனவே, தமக்கு நெருக்கமானவர்களை பெரிதுமே கமக்காரர்களை பயனாளிகளாக ARPAக்கள் தெரிவுசெய்தனர். பெருமளவு ARPAக்கள் தாவரங்களின் 50 தொகுதிகளில் பெறுமதிக்குரிய தொகையை பகுதியளவில் அல்லது முழுமையாக கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சில க.சே.நிலையங்களுக்கு தாவரங்கள்

வழங்கப்படவில்லை. சில பகுதிகளில், விசேடமாக வட மாகாணத்தில் வர்த்தக மட்டத்தில் மரக்கறிகளைச் செய்கைபண்ணும் கமக்காரர்களுக்கு தாவரங்கள் வழங்கப்பட்டன.

அடிமட்டத்தில் பணியாற்றும் அலுவலர்களின் கருத்துக்களைப் பொறுப்புக்கு எடுக்காமல் இந்த வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. முன்னைய வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில், பயிரிடல் தாவரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. எனவே, சம்பந்தப்பட்டவர்களால் வழங்கப்பட்ட எதையாவது மக்கள் சேகரித்தார்கள். முன்னைய வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மீது நடத்தப்பட்ட மதிப்பாய்வுகளின் பிரகாரம், இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து கணிசமானளவு வெற்றி பற்றி அறிக்கையிடப்படவில்லை. பயனாளி குடித்தனங்கள் மீது இந்த நிகழ்ச்சித்திட்டத்தினால் செய்யப்பட்ட தாக்கங்கள் அற்பமானவை என்பதனால் இந்த நிகழ்ச்சித்திட்டமும் வெற்றிகரமானதல்ல. எனவே, தமது குடித்தனப் பொருளாதாரங்களின் குறிப்பிடத்தக்க மாற்றமொன்றை நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளாததினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் அதிகளவு முக்கியமானது என பெரும்பான்மையிலான பயனாளிகள் எண்ணவில்லை.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முழுமையான முன்னேற்றத்தைக் கரிசனைக்கெடுத்தால், இது வெற்றிகரமானதல்ல. இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நன்மைகளை எடுத்துள்ள சில பயனாளிகள் பெரிதுமே வர்த்தக மட்டத்தில் மரக்கறிகளைச் செய்கைபண்ணுவதும், வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்வதில் அக்கறையைக் கொண்டதுமான கமக்காரர்களாவர். இந்த நிகழ்ச்சித்திட்டம் தமக்கு முக்கியமானதல்ல என கமக்காரர்கள் நினைக்கவில்லை. எனினும், தமது நுகர்வுக்காக பயிர்களை வளர்ப்பதில் அக்கறையைக் கொண்டுள்ள மக்கள் ஏதேனும் நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்படும் ஏதேனும் ஊக்குவிப்பு இன்றி பயிர்களை வளர்க்கின்றனர்.

வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிடும் போது, மரக்கறிகளை வளர்ப்பதில் சுய-செயல் நோக்கத்துடனான மக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு ஆதரவு அளிக்கப்பட வேண்டும்.

**பரிந்துரைகள்:**
அயலவர்களுக்கும், வேறு மக்களுக்கும் மாதிரி வீட்டுத் தோட்டமாக அவர்களது வீட்டுத் தோட்டங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். ARPAக்களின் கூற்றுப்படி, ஒவ்வொரு கிராமமும் சுய-செயல் நோக்கத்திலான மக்களைக் கொண்டுள்ளது.

## 2. மகாவலி பகுதியில் பண்ணை-சாரா தொழில்களின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலப் பெறுபேறு

**ஆராய்ச்சிக் குழாம்:** கலாநிதி டபிள்யு.எ.ஆர்.விக்ரமசிங்க - இணைப்பாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
இரண்டாவது மற்றும் மூன்றாவது சந்ததிகளின் பின், மகாவலி பகுதிகள் தொடர்பில் சில சமூக-பொருளாதாரப் பிரச்சனைகள் தோன்றியுள்ளதாகத் தெரியவருகின்றது. மகாவலி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட காணிகளை குடியேற்றவாசிகள் சட்டப்படி பிரிக்க முடியாத போதிலும், ஒவ்வொரு வழித்தோன்றலும் செய்கைபண்ணக்கூடியவராக இருப்பார் என்பதற்காக சிறிய துண்டுகளாக வழித் தோன்றல்கள் மத்தியில் மூலத்திலான காணியின் விஸ்தீரணத்தை அவர்கள் முறைசாராதரீதியில் பிரித்துள்ளனர். எனவே, மகாவலிப் பகுதியில் மறைந்துள்ள காணி துண்டாக்கப்படுதல் உள்ளதுடன், இது வாழ்வதற்கு அவர்களது தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு குறைந்த மட்டங்களிலான வருமானங்களை விளைவித்துள்ளது.[1] ஆனால், அவர்கள் எதிர்நோக்குகின்ற வாழ்வாதாரப் பிரச்சனைகளை மகாவலியில் உள்ள மக்கள் இன்னுமே சமாளிக்கக்கூடியவர்களாக விளங்குகின்றார்கள்.[2] எனினும், இந்தப் போக்கு மேலும் நிலவினால், நாட்டின் அபிவிருத்திக்கு

---

[1] திரு. வேலப்பிலி, பணிப்பாளர், திட்டமிடல், கண்காணிப்பு அலகு, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, தனிப்பட்ட தொடர்பாடல்

[2] _______________ , தனிப்பட்ட தொடர்பாடல்

பங்களிப்பதற்குப் பதிலாக நாட்டின் வறுமைக்கு மகாவலிப் பகுதிகள் பங்களிக்கும். இவ்வாறாக, வாழ்வதற்காக சந்தர்ப்பங்களை மென்மேலும் மகாவலித் திட்டம் வழங்காவிட்டால், என்றோ ஒரு நாள் பிரதான நகரங்களில் சிறந்த வாய்ப்புக்களை நாடி மகாவலிப் பகுதிகளில் உள்ள குடியேற்றவாசிகள் செல்வார்கள் என அனுமானிக்கப்பட முடியும். மேலதிகமாக, மகாவலி குடியேற்றத் திட்டங்களில் அதிகரித்து வரும் மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆற்றலளவொன்றைக் கொண்டிருப்பதனால் அது அபிவிருத்தி நடைமுறைகளில் பங்கெடுப்பதிலிருந்து எதிர்காலச் சந்ததிகளை தூரத்தில் வைத்திருக்கும். இது மறுபுறத்தில் மக்களின் அபிவிருத்தி ஆற்றலளவை மேம்படுத்துவதற்கு அவசியமான ஆற்றலளவுகளைப் பலப்படுத்துவதற்கு அவசியமான வாய்ப்புக்களை மட்டுப்படுத்தும் (சென், 1999). எனவே, குடியேற்றவாசிகளின் வாழ்வாதாரத்தை எந்த அளவுக்கு மகாவலித் திட்டம் ஆதரவளிக்க முடியும் என்றொரு கேள்வி உள்ளது. எனவே, தற்போது மகாவலி கமக்காரர்கள் பின்பற்றுகின்ற வாழ்வாதார மூலோபாயங்களின் வகைகள், இந்த வாழ்வாதார மூலோபாயங்களின் நிலைத்திருக்கும்தன்மை மற்றும் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு மகாவலித் திட்டத்தின் ஆற்றலளவு ஆகியன மீதான தகவல் அபிவிருத்தித் திட்டமிடலையும், கொள்கையையும் வகுத்தமைப்பதற்கு முக்கியமானதாகும்.

மகாவலிப் பகுதியில் தற்போதைய தொழில் வாய்ப்புக்களையும், மகாவலிப் பகுதியில் பண்ணை சாரா தொழில் வாய்ப்புக்களை விஸ்தரிப்பதில் அவற்றின் நிலைத்திருக்கும் தன்மைகளையும் மற்றும் ஆற்றலளவுகளையும் பரீட்சிப்பதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

(i) மகாவலிப் பகுதிகளில் நடைமுறையிலான தொழில்களின் வகைகளையும், எண்ணிக்கையையும் அடையாளங் காணுதல்.
(ii) மகாவலிப் பகுதியில் தொழில் தோற்றுவிப்புக்கும், குடித்தன வருமானத்திற்கும் பண்ணை சாரா துறையில் பங்களிப்பினை மதிப்பிடுதல்.
(iii) மகாவலிப் பகுதியில் பண்ணை-சாராத் தொழில் வாய்ப்புக்களில் குடியேற்றவாசிகளின் குடித்தன சம்பந்தத்தைப் பாதிக்கும் காரணிகளை அடையாளங் காணுதல்.
(iv) மகாவலிப் பகுதியில் பண்ணை-சாராத் தொழில் வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கு ஆற்றலளவுகளையும், தடைகளையும் ஆய்தல்.

**முடிவுகள்:**

வழித்தோன்றலுக்கு காணி உரிமையைக் கைமாற்றும் சட்ட ஏற்பாடு தவிர, நாட்டில் வேறு பகுதிகளில் உள்ளதைப் போன்றே மகாவலிப் பகுதிகளும் விளங்குகின்றன. சில பயனாளிக் குடித்தனங்கள் தொடர்பில் வேறு சமூகப் பிரச்சனைகளை இக் கொள்கை தோற்றுவித்துள்ளதால், சிறந்த தீர்வொன்றுக்காக இக் கொள்கை மீள்-பரிசீலிக்கப்பட வேண்டும்.

மகாவலிப் பகுதிகளில் குடிதனங்களுக்கான பண்ணை-சாராத் தொழில் வாய்ப்புக்களின் கிட்டுந்தன்மை வேறு பகுதிகளை ஒத்திருக்கின்றது. எதிர்காலச் சந்ததிகளுடன் மகாவலி பகுதிகளில் சனத்தொகை செறிந்திருக்கும் போது, அவர்களது வாழ்வாதாரங்களுக்கான மூலவளங்களின் பற்றாக்குறை இன்னொரு பிரச்சனையாகும். இது மகாவலியின் அதிகாரத்தின் கீழ் வராத பகுதிகளுக்கு ஒத்ததாகும். ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய குறைந்த அபிவிருத்தியடைந்த நாடுகளில் கைத்தொழில் முன்னேற்றம் அவதானிக்கப்படவில்லை (ஹொசெயனி, 2012). மகாவலித் திட்டம் தொடர்பிலும், மகாவலிப் பகுதிகளிலிருந்து அதிகரித்துவரும் சரீரஉழைப்பு விநியோகத்தை உறிஞ்சுவதற்காக கைத்தொழில் அல்லது பண்ணை-சாரா துறையின் விஸ்தரிப்பு புறநீங்கலாக கமத்தொழில் அபிவிருத்தி இடம்பெற்றுள்ளது.

மகாவலிப் பகுதிகளுக்கு பண்ணை-சாரா துறையின் முன்னேற்றம் பிரத்தியேகமாக தொடர்பானதல்ல என்பதுடன், இது நாட்டின் முழுப் பொருளாதாரத்துடன் தொடர்பினைக் கொண்டுள்ளது எனத் தெரியவருகின்றது. மகாவலிப் பகுதிகளில் உள்ள சில குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியொன்றை வழங்கியுள்ளதுடன், இதனால் வேறு பகுதிகளில் அவர்கள் பண்ணை-சாராத் துறையில் ஈடுபடுகின்றனர் எனவும் தெரியவருகின்றது. மகாவலித் திட்டம் 30 வருடங்களுக்கு மேற்பட்டது என்பதுடன், மகாவலி அதிகாரசபையில் பணியாற்றும் பெரும்பான்மையான அலுவலர்கள் மகாவலிப் பகுதிகளில் உள்ள பயனாளிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அல்லர்.

திட்டம் B, திட்டம் C மற்றும் திட்டம் G போன்ற பெருமளவு மகாவலிப் பகுதிகள் பொலன்னறுவை, சீகிரிய, மஹியங்கனை போன்ற வரலாற்றுரீதியில் புகழ்வாய்ந்த நகரங்களுக்கு கிட்டியதாகும். திட்டம் H அனுராதபுரத்திற்கு கிட்டியதாகும். வளவைப் பகுதி கதிர்காமத்திற்குக் கிட்டியதாகும். இவ்வாறாக, சகல பகுதிகளும் வீதி, நீர் விநியோகம், மின்சாரம் போன்ற சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளன.

**பரிந்துரைகள்:**
மகாவலிப் பகுதிகளில் பண்ணை-சாரா தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு மட்டும் கவனம் செலுத்தப்படக்கூடாது. ஆனால், வேறு பகுதிகளில் தொழில்களைக் கண்டறிவதற்கு மகாவலிப் பகுதிகளில் பயனாளிக் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி மட்டத்தை உயர்த்துவதற்கு அதிகளவு கல்வி வசதிகளை வழங்குவதற்கும் கவனம் செலுத்தவேண்டும்.

உல்லாசப்பயணக் கைத்தொழிலுக்கு அப்பகுதிகளை உள்ளடக்குவதற்கான ஆற்றலளவுகள் உள்ளதாகத் தெரிகின்றது. அவற்றின் உல்லாசப்பயணப் பொதிகளுக்கு கம-உல்லாசப்பயணச் செயற்பாடுகளை உள்ளடக்குவதற்கு ஹொட்டேல் துறை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

### 3. இலங்கையில் வாசனைத்திரவியங்களின் பிரச்சனைகள் மற்றும் எதிர்கால வாய்ப்புக்கள்

**ஆராய்ச்சிக் குழாம்:** திரு.ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ - இணைப்பாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லை:**
இலங்கை பலதரப்பட்ட வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்வதுடன், பாரியளவாக மிளகு, கறுவா, ஏலம், கராம்பு, சாதிக்காய் மற்றும் ஜாதிபத்திரி ஆகியன விளங்குகின்றன. இந்த உற்பத்திப்பொருட்களில் 90%க்கு மேற்பட்டவை சுவையூட்டி, மணமூட்டி மற்றும் ஔடத கைத்தொழில்கள் போன்ற பிரதான முடிவிலான உபயோகிப்பாளர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனினும், மிளகைப் பொறுத்தளவில் உலகிலேயே முன்னணிவாய்ந்த மிளகு உற்பத்தியாளர்களில் ஒன்றாக இலங்கை விளங்குகின்றது. தற்போது, நாட்டின் மிளகுச் செய்கையின் காணி விஸ்தீரணம் 30,000 ஹெக்டாருக்கு மேற்பட்டதாகும். வேறு வாசனைத்திரவியங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் கைத்தொழிலொன்றாக மேலும் விருத்திசெய்யப்படுவதற்கான பாரிய ஆற்றலளவொன்றை மிளகு கொண்டுள்ளது. இக் கைத்தொழிலானது கிராமிய பயிர்ச்செய்கைத் துறைக்கும், நகரப் பொருளாதாரத்திற்கும் அதிகளவு சமூக-பொருளாதார நன்மைகளைத் தோற்றுவித்துள்ளது. இருந்த போதிலும், இப் பயிர்த் துறையில் அதிகளவு பிரச்சனைகளும், மட்டுப்படுத்தல்களும் நிலவுகின்றன. மிளகு உபபிரிவின் இந்த உண்மைநிலையைப் புரிந்துகொள்வதற்காக இந்த ஆய்வு நடத்தப்பட்டது. மிளகு கமக்காரர்களின் சமூக-பொருளாதார அந்தஸ்து, காணி விஸ்தீரணம், பயிர்ச்செய்கை முறைகள் போன்ற பயிர்ச்செய்கைத் தகவல் ஆகியன ஆராயப்பட்டால் கருத்திட்டத்தின் விரிவெல்லை பாரியதாகும். பயிர் பராமரிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் கமக்காரர்களினால் முகங்கொடுக்கப்படும் சந்தைப்படுத்தல் வழிமுறைப் பிரச்சனைகள் மற்றும் இந்தப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான அவர்களின் ஆலோசனைகள் ஆகியன ஆயப்பட்டன.

**ஆய்வின் பாரிய முடிவுகள்**

- முறைமையற்ற பயிர் முகாமைத்துவத்தை ஆய்வின் பகுப்பாய்வொன்று அவதானித்ததுடன், அதன் காரணமாக குறைந்த உற்பத்தித்திறனும், குறைந்த வருமானமும் அவதானிக்கப்பட்டன.
- மிளகின் உற்பத்தி ஏற்ற இறக்கத்திற்கு சூழல் தாக்கங்களே முக்கிய காரணிகளாகும். பிரச்சனைக்கு எவ்வாறு வெற்றிகரமாக முகங்கொடுப்பது என பெருமளவு கமக்காரர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.
- காலநிலை மாற்றம் மீது சிறந்த புரிந்துணர்வை கமக்காரர்கள் கொண்டிருக்கவில்லை என்பதுடன், இதன் விளைவாக பயிர் உற்பத்தி குறைவானது என்பதுடன், கமக்காரர்கள் கஷ்டமான சூழ்நிலையொன்றிலும் இருந்தனர்.

- இத் துறையின் கமக்காரர்களில் பெரும்பான்மையானோர் 50 வயதுக்கு மேற்பட்டவர்களாவர் என்பதுடன், எனவே எதிர்காலத்தில் இக் கைத்தொழில் பாரதூரமான சரீரஉழைப்பு பற்றாககுறைக்கு முகங்கொடுக்கும்.
- அறுவடைப் பருவமொன்றில் பாரிய தொகைகளில் உற்பத்திப்பொருள் உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும், ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன் பெறுமதி சேர்ப்பு செய்யப்படுவதில்லை.
- உற்பத்தியில் கிராம மட்டமானது ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையை அடைய முடியாமல் இருக்கின்றது. ஆனால், இத்தருணத்தில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியிலான சந்தை நிலைமையொன்று அவதானிக்கப்பட முடியும்.
- மிளகு அடிப்படையிலான கைத்தொழில்கள் மீது பெறுமதி சேர்ப்பிலான உற்பத்திப் பொருள்களுக்கு முக்கியமான பிரச்சனை தனியார் முதலீடு இன்மையாகும்.
- உயிரக முறைமையில் உற்பத்தி செய்யப்பட்டால் உயர்வான விலையொன்று பெறலாம் என்பதுடன், வேறு நன்மைகளும் கிட்டும் என்ற போதிலும், உயிரக உணவு உற்பத்தித் துறையின் உறுப்பினர்களாக கமக்காரர்கள் விளங்கவில்லை.
- உற்பத்திப் பகுதியில் மிளகுச் செய்கை அடிப்படையிலான கமக்காரர் தாபனங்கள் தாபிக்கப்படவில்லை. எனவே, பயிர் முகாமைத்துவம், அறுவடைக்குப் பிந்திய சந்தைப்படுத்தல் ஆகியன மீது முன்னேற்றம் தெரியவில்லை.

**பரிந்துரைகள்**

- புதிய தொழில்நுட்பத்துடனும், பயிர்ச்செய்கை முறைகளுடனும் கமக்காரர் சங்கமொன்றைப் பராமரித்தல்.
- மண் பேணல் முறைகளுக்கும், உரத்தின் பிரயோகத்திற்கும், சிறந்த பண்ணை முறைகளுக்கும் மிளகுக் கமக்காரர்களை ஊக்குவிப்பதற்கான நிதியமொன்று அமைக்கப்படுவது அவசியமாகும்.
- மான்யத் திட்டமொன்றைத் தாபிப்பதன் மூலம், வாசனைத்திரவிய அடிப்படையிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு தனியார் துறை ஊக்குவிக்கப்படுவது அவசியமாகும்.
- உயிரக உற்பத்தி பயிர்ச்செய்கைத் துறைக்கு கமக்காரர்களைக் கவர்வதற்காக அவர்களை அறிவூட்டுவதுடன், வசதிகளையும் வழங்குதல்.

**4. யாழ்ப்பாணம் கடலேரியினால் வழங்கப்படும் சூழல்முறைமைகள் சேவைகளின் பெறுமதி மற்றும் அயல்புற கிராமவாசிகளின் வாழ்வாதரங்களுக்கு கடலேரியின் பங்களிப்பு**

**ஆராய்ச்சிக் குழாம்:** கலாநிதி டபிள்யு.எ.ஆர்.விக்ரமசிங்க - இணைப்பாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** IUCN

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
சூழல்முறைமைச் சேவைகளின் நிலைத்திருக்கும்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், அத்துடன் மக்களின் வாழ்வாதார நிலைமையை உயர்த்துவதற்கும் யாழ்ப்பாணம் கடலேரி சூழல்முறைமைகளின் முகாமைத்துவம் அவசியமானதாகும். மனித முகாமைத்துவத்திற்கான (கடலேரி மீது தங்கியுள்ள மக்கள்) அம்சமொன்றை கடலேரி முகாமைத்துவத் நிகழ்ச்சித்திட்டமொன்று கொண்டிருக்க வேண்டும். எனவே, ஒன்றிணைந்த அல்லது முற்றுமுழுதான அணுகுமுறையொன்றை கடலேரி சூழல்முறைமைகளின் முகாமைத்துவம் வேண்டுகின்றது.

தற்போதைய சூழ்நிலையின் தரவுகளினதும், தகவலினதும் மீது மூலவள முகாமைத்துவத்தை அமைப்பதற்கு முன்நிபந்தனை அடிப்படையைக் கொண்டுள்ளதுடன், இது நடைமுறையிலான கடலேரியின் வகை மற்றும் அளவு (கடலேரியின் பயன்கள்), தற்போதைய பயன்பாடுகளின்

நிலைத்திருக்கும்தன்மை, சூழல்முறைமைகளினதும், தங்கியிருக்கும் சனசமூகங்களின் சேமநலனினதும் நிலைத்திருக்கும்தன்மை மீதான தற்போதைய உபயோகங்களின் தாக்கங்கள் நடைமுறையிலான சூழல்முறைமை முகாமைத்துவம் மற்றும் மூலவள ஆட்சி முறைமை ஆகியனவற்றை உள்ளடக்குகின்றது. எனினும், இலக்கியத்தின் பிரகாரம் (அருட்பிரகாசம், 1974; ஹொப்மன், 1982 மற்றும் 1985; அர்போவிக்ஸ், 1985; பவள் 1984b; சச்சிதானந்தன், 1969; சச்சிதானந்தன் மற்றும் பெரேரா, 1970; செல்வராஜா மற்றும் கொஸ்தா, 1978) கடலேரி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அவசியமான நிகழ்ச்சித்திட்டம் பற்றாக்குறையாகவே உள்ளது.

கடலேரியின் சூழல் முறைமையையும் மற்றும் தங்கியிருக்கும் சனசமூகங்களின் சமூக-பொருளாதாரப் புறவரைவையும் விருத்திசெய்வதும், ஆவணப்படுத்துவதுமே ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

**முடிவுகள்:**
யாழ்ப்பாணம் கடலேரியின் சூழல்முறைமைகளின் சேவைகள், அச்சேவைகளின் சந்தை மற்றும் சந்தை-சாராப் பெறுமதிகள் மீதான அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. மீன் உற்பத்தி, ஆழ்கடல் மீன்பிடித்தல், படகுகளுக்கு நங்கூரமிடுவதற்கு கடலேரியினால் வழங்கப்படும துறைமுக வசதிகள் மற்றும் தும்பு உற்பத்திக்காக கடலேரியைப் பயன்படுத்துதல் ஆகியனவே யாழ்ப்பாணம் கடலேரியினால் வழங்கப்படும் பிரதான அடையாளங் காணப்பட்ட சேவைகளாகும். சந்தைப் பெறுமதிகள் மீதான அடிப்படையில் இப் பெறுமதிகளை அளவிடக்கூடியதாக இருந்தது. மீன் உற்பத்தியைப் பொறுத்தளவில் உற்பத்தியாளர் மேன்மிகையை மட்டுமே மதிப்பிடப்பட்ட பெறுமதி உள்ளடக்குகின்றது. வழங்கப்பட்ட நேர காலமொன்றில் கடலேரி மீன் உற்பத்திக்கான பாவனையாளர் மேன்மிகைகளை மதிப்பிடுவதில் உள்ள கஷ்டங்களின் காரணமாக, உற்பத்தியாளர் மேன்மிகை மதிப்பிடப்பட்டது. எனவே, மீன் உற்பத்தியின் பெறுமதி குறைத்து மதிப்பிடப்படுவதுடன், மறுபுறத்தில் இந்த ஆய்வினால் யாழ்ப்பாணம் கடலேரியின் மதிப்பிடப்பட்ட மொத்தப் பொருளாதாரப் பெறுமதியும் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கண்டல் தாவரங்களினால் காபன் பிரிகை, மீன் உற்பத்திக்கும், கண்டல்தாவரங்களுக்கும் அத்துடன் சேற்றுத் தட்டைகளுக்கும் இடையிலான உயிரியல் தொடர்பு மற்றும் உயிரகப் பன்னிலையாக்கத்தின் வகிபங்கு போன்ற வேறு சூழல்முறைமைச் சேவைகளின் விஞ்ஞானரீதியிலான தகவலின் பற்றாக்குறையானது யாழ்ப்பாணம் கடலேரியின் மதிப்பீட்டுக் குறைப்பினை விளைவித்துள்ளது.

பெரும்பான்மையிலான கடலேரி மீனவர்களின் பிரதான வாழ்வாதாரச் செயல்பாடு கடலேரியில் மீன் பிடிப்பதாகும். எனவே, சுற்றுவட்டார கிராமவாசிகளுக்கு மிகவும் முக்கியமான இயற்கையான சொத்தாக யாழ்ப்பாணம் கடலேரியின் சூழல்முறைமைகள் விளங்குகின்றன. இதன் கருத்து என்னவெனில், கடலேரியில் மீன்பிடித்தலிலிருந்து வருமானம் வாழ்வாதாரத்திற்கு போதுமானதல்ல.

## நடைமுறையிலான ஆய்வுகள்

### 1. வாழ்வாதாரம் மீது இயந்திரவாக்கம் மற்றும் அதன் தாக்கம் மற்றும் உலர் வலயப் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் நெல் துறையில் உற்பத்தியின் ஆகுசெலவு

**ஆராய்ச்சிக் குழாம்:** செல்வி பீ.எ.டி.எஸ்.பமுனுஆரச்சி - இணைப்பாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
ஏதேனும் வேறு பண்டத்தை விட அரசாங்கத்தின் அதிகளவு நேரடியிலான தலையீட்டினை கவர்ந்துள்ள மிகவும் அரசியல்ரீதியில் கூருணர்விலான பயிராக நெல் விளங்குவதுடன், உற்பத்தியின் மொத்த ஆகுசெலவின் குறிப்பிடத்தக்க சதவீதமொன்றுக்கு கணக்கு காட்டும் சரீரஉழைப்பு தீவிரத்தன்மையிலான பயிராக அறியப்படுகின்றது. மொத்த வேலைப்படையில் (அண்ணளவாக 30%) இரண்டாவது மிகப்பாரிய பங்குக்கு கமத்தொழில் துறை தற்போது கணக்கு காட்டுகின்ற போதிலும், முழுமையான மொ.உ.உற்பத்திக்கு அதன் பங்களிப்பு 10.8 சதவீதம் மட்டுமே என்பதுடன், இது சரீரஉழைப்பு உற்பத்தித்திறனின் குறைந்த மட்டமொன்றைப் பிரதிபலிக்கின்றது. மேலும், மொ.உ. உற்பத்திக்கு அரிசித் துறையின் சார்புரீதியிலான பங்களிப்பு

1.6 சதவீதம் மட்டுமேயாகும் (இலங்கை மத்திய வங்கி, 2013). அதே வேளை, மொத்த கமத்தொழிலில் தொழிலாற்றும் மக்களில் அண்ணளவாக அரைவாசிப் பேர் அரிசித் துறை ஊடாகவே தமது வாழ்வாதாரத்தை நேரடியாக அல்லது மறைமுகமாக மேற்கொள்கின்றார்கள். மூலவளப் பயன்பாட்டில் உள்ள இந்த கட்டமைப்பிலான குறைபாடு அதிகரிக்கப்பட்ட இயந்திரவாக்கத்தின் ஊடாக கவனத்திற்கெடுக்கப்படுவதும், தோதான கல்வி மற்றும் பயிற்சி ஆகியன ஊடாக அதிகளவு உற்பத்தித்திறனிலான துறைகளுக்கு கமத்தொழில் துறையிலிருந்து நகர்வதற்கு மேலதிகமான வேலைப்படையை அறிவுறுத்துவதும் அவசியம் ஆகும் (இலங்கை மத்திய வங்கி, 2013). இலங்கையின் அரிசித் துறை மீது ஆராய்ச்சியின் விசாலமான உறுப்பொன்று இருந்த போதிலும், இயந்திரவாக்கம் தொடர்பில் உலர் வலயப் பயிர்ச்செய்கை சனசமூகத்தின் அண்மைய வாழ்வாதார பாங்குக்கு போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. ஏககாலத்தில் நெல் சரீரஉழைப்பு பயன்பாடு மிகவும் செயற்றிறனாகவும், உற்பத்தித்திறனாகவும் இருக்க வேண்டும் என்பதுடன், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு கிராமிய வறுமையைக் குறைப்பதற்கு உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படவும் வேண்டும். அத்துடன், உற்பத்தியின் ஆகுசெலவு குறைந்தபட்சமாக்கப்படவும் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையின் கீழ், இலங்கையில் வர்த்தக நெல் துறையில் சரீரஉழைப்பு பயன்பாட்டினதும், வாழ்வாதாரப் பாங்கினதும் மீது இயந்திரவாக்கத்தினதும், உற்பத்தியின் விளைவினதும், ஆகுசெலவினதும் தாக்கத்தின் ஆழமான மதிப்பீடொன்றை இந்த ஆராய்ச்சி வழங்குகின்றது.

ஆய்வின் திட்டவட்டமான குறிக்கோள்கள் வருமாறு:

- அ) வர்த்தக நெல் துறையில் இயந்திரவாக்கத்தின் காரணமாக வாழ்வாதாரப் பாங்கு (பெண்கள் மற்றும் இளைஞர்) மீது தாக்கத்தை அடையாளம் காணுதல்
- ஆ) உற்பத்தியினதும், உற்பத்தித்திறனினதும் மீது இயந்திரவாக்கத்தினைக் கண்டறிதல்
- இ) நெல்லின் உற்பத்தியின் ஆகுசெலவு மீது இயந்திரவாக்கத்தினைக் கண்டறிதல்
- ஈ) கொள்கைப் பரிந்துரைகளை முன்மொழிதல்

தரவுச் சேகரிப்பு (மாதிரி அளவீடு, நோக்குக் குழு கருத்துரையாடல்கள் மற்றும் முக்கிய தகவலளிப்பவர் நேர்முகங்காணல்கள்) முடிக்கப்பட்டுள்ளது. கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்துகளைப் பயன்படுத்தி பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் அம்பாறை போன்ற பாரிய வர்த்தகரீதியிலான நெற்செய்கை மாவட்டங்களின் 382 நெற் கமக்காரர்களிடமிருந்து ஆரம்பநிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. தரவுப் பகுப்பாய்வும், அறிக்கை எழுதுதலும் நடந்துகொண்டிருக்கின்றன.

## 2. நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் பாரிய மற்றும் சிறிய அளவிலான மலர்ச்செடிவளர்ப்போரின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புவளம்

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி எம்.டி.சுசீலா லூர்து - இணைப்பாளர்
திருமதி ஆர்.என்.கே.ரம்புக்வெல - இணை-ஆராய்ச்சியாளர்
திரு.ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கங்களின் நோக்கெல்லை:**
சமகால மலர்ச்செடிவளர்ப்பினதும் மற்றும் தொடர்பான கைத்தொழிலின் கவர்ச்சிநிலையின் காரணமாக மலர்ச்செடிவளர்ப்பு கைத்தொழிலுக்கு தொழிலற்ற இளைஞரையும், கிராமிய மட்டப் பெண் சரீரஉழைப்பையும் உறிஞ்சும் சாத்தியக்கூறு உயர்ந்த மட்டமொன்றில் உள்ளது. எனவே, கைத்தொழிலுக்கு உயர்ந்த ஆற்றலளவொன்று உள்ள நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் சிறிய மற்றும் பாரிய அளவிலான மலர்ச்செடிவளர்ப்போர்களினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகளையும், விவகாரங்களையும் ஆய்வுசெய்வதன் மூலம் மலர்ச்செடிவளர்ப்பினை மேம்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**திட்டவட்டமான நோக்கங்கள்**

01. நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் சிறிய மற்றும் பாரிய அளவிலான மலர்ச்செடி வளர்ப்போரின் சமூக-பொருளாதார நிலையை ஆய்வுசெய்தல்
02. பகுதிக்கு தொடர்பான மலர்ச்செடிவளர்ப்பின் தன்மையையும், உற்பத்தியையும், சந்தைப்படுத்தல் முறைமையையும் பரீட்சித்தல்.
03. மலர்ச்செடிவளர்ப்போரினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகளையும், மட்டுப்படுத்தல்களையும் அடையாளங் காணுதல்.
04. கைத்தொழிலை விருத்திசெய்வதற்கு மலர்ச்செடிவளர்ப்போரின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் ஆய்வுசெய்தல்

**தற்போதைய முன்னேற்றம்:** பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மலர்ச்செடி வளர்ப்போரின் மாதிரி அளவீடு நடத்தப்பட்டது. தரவுப் பகுப்பாய்வும், அறிக்கை எழுதுதலும் நடந்துகொண்டிருக்கின்றன.

# கமத்தொழில் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

## நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்

### 1. ஈர வலய நெற்காணி தரவில் முரண்பாடுகளை நிர்ணயித்தல்

| | | | |
|---|---|---|---|
| **ஆராய்ச்சிக் குழாம்:** | திரு.எஸ்.அபாசிங்க | - | இணைப்பாளர் |
| | திருமதி ரேணுகா வீரக்கொடி | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| | திருமதி ஷாமினி கே.குமார | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
பயனுறுதிவாய்ந்த கொள்கைக்கும், நிகழ்ச்சித்திட்டத்தின் திட்டமிடலுக்கும் தரவுகளின் செம்மைத்தன்மை ஒரு முன்தேவைப்பாடாகும். எனினும், தரவு முரண்பாடுகளின் காரணமாக திட்டமிடுதலும், மூலவள ஒதுக்கீடும் பயனுறுதியற்றதாக வந்துள்ள பெருமளவு தருணங்கள் இருந்துள்ளன. இலங்கையில் நெற்காணி தரவின் பெருமளவு முரண்பாட்டிலான மூலங்களின் பிரசன்னமானது அத்தகையதொரு தருணமாகும். இது திட்டமிடல் நடைமுறையில் கஷ்டங்களை விளைவித்துள்ளது. கமக்காரரினால் காணி உரித்துரிமையை வலியுறுத்தும் ஆவணமான உரித்துறுதி, *'பிம் சவிய'* என அழைக்கப்பட்ட காணி உரித்துப் பதிவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட உரித்துரிமையின் சான்றுப்பத்திரம், மான்யத்திலான உரங்களை விநியோகிப்பதற்காக கமத்தொழில் ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரினால் பயன்படுத்தப்படும் கமக்காரர் விபரங்களின் பட்டியல், குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் P1 பதிவேடு ஆகியனவே காணிகளின் விஸ்தீரணத்தில் ஒத்திருக்காததன்மை கண்கூடாக உள்ள போதிலும், வேறுபட்ட மூலங்களிலும், அளவுகளிலும் திட்டமிடல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. எனவே, எந்தளவு தூரத்திற்கு மூலவள உபயோக செயற்றிறனை பாதித்துள்ளன என்பதை அடையாளங்காண்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இந்த தரவுத் தொகுதிகளில் முரண்பாடுகளின் மட்டத்தை நிர்ணயிப்பதற்கு இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. காலி, மாத்தளை, கம்பஹா, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு மற்றும் களுத்துறை ஆகியன உட்பட காணி உரித்துரிமைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற ஈர வலய மாவட்டங்களில் ஆய்வு நடத்தப்பட்டது.

**நோக்கங்கள்:**
வேறுபட்ட மூலங்கள் மத்தியில் மிகவும் செம்மையான மூலம் என அனுமானித்த *'பிம் சவிய'* சான்றுபத்திரத்துடன் வேறுபட்ட தரவு மூலங்களில் நெற்காணி விஸ்தீரணங்களை ஒப்பிடுவதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

**திட்டவட்டமான நோக்கங்கள்:**
1. நெற் காணிகள் மீது தரவின் ஒவ்வொரு மூலத்திலும் நடைமுறையிலான தரவு முரண்பாடுகளை அடையாளம் காணுதல்.
2. தரவு மூலங்களுக்கு இடையில் நிலவும் வேறுபாடுகளின் மட்டத்தை மதிப்பிடுதல்.
3. நடைமுறையிலான வேறுபாடுகளுக்கு பின்னாலுள்ள காரணகாரியத் தொடர்பை அடையாளம் காணுதல்.
4. நெற்காணிகள் தொடர்பில் அபிவிருத்தித் நிகழ்ச்சித்திட்டங்களில் (உர மான்யத் திட்டம்) மூலவள உபயோகச் செயற்றிறனை நிர்ணயித்தல்.
5. நெற்காணிகளிலிருந்து வருமானத்தை (வரி) தோற்றுவிப்பதில் செயற்றிறனின்மைகளை நிர்ணயித்தல்.

**தற்போதைய நிலை:**
இந்த ஆய்வின் தரவுப் பகுப்பாய்வு நடந்துகொண்டிருக்கிறது.

2. **இலங்கையில் கலப்பின விதைகள் மற்றும் மரக்கறிச் செய்கை: உள்நாடு எதிர் இறக்குமதி செய்யப்பட்ட**

**ஆராய்ச்சிக் குழாம்:** திரு.பிரசன்ன விஜேசிங்க - இணைப்பாளர்
திருமதி ரஸீகா விஜேசிங்க - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
இறக்குமதி செய்யப்பட்ட கலப்பின வகைகளின் உபயோகத்தில் மரக்கறி கமக்காரர்களின் ஒரேயொரு கரிசனையாக விளங்குவது உள்நாட்டு இனங்களுடன் ஒப்பிடுகையில் உயர்வான விளைச்சல்களாகும். எனினும், கலப்பின விதைகளின் உபயோகத்தில் ஒரு தொகையிலான தடைக்காரணிகள் அதாவது மோசமான சுவை, அல்லது அனேகமாக சுவையின்மை, விதையின் உயர்ந்த ஆகுசெலவு, பாரிய பூச்சிகளுக்கும், நோய்களுக்கும் பாதிக்கப்படுதல் மற்றும் விஸ்தரிப்புப் பற்றாக்குறை ஆகியன விளங்குகின்றன. கலப்பின விதைகளின் உபயோகத்தில் மேலதிகமாக, பெருமளவு மரக்கறி கமக்காரர்கள் பயிரைச் செய்கைபண்ணுவதில் உள்ள நிகர வருமானத்தைக் கரிசனைக்கு எடுக்கவில்லை. இதில் பயிர்ச்செய்கையின் மொத்த வருமானமே ஒரேயொரு கரிசனையாகும். பணம் சாராத ஆகுசெலவு உட்பட உண்மையான ஆகசெலவைக் கணக்கிடுவது கஷ்டம் என்பதே காரணமாகும். ஏனெனில் கமக்காரர்களின் மோசமான பதிவை வைத்திருக்கும் தன்மையாகும். கலப்பின விதைகளின் உபயோகத்தில் இன்றியமையாததாக விளங்கும் இரசாயனக் கமத்தொழிலின் சுகாதார மற்றும் சூழல் தாக்கங்களின் பிரச்சனைகளும், விவகாரங்களும் மனிதருக்கும், காணிக்கும் சூழல் மற்றும் சுகாதார பிரச்சனைகளை விளைவிப்பதாகத் தெரிகின்றது. கலப்பின விதை வகைகளின் உபயோகத்தில் ஏற்படுகின்ற நீண்ட காலச் சேதங்கள் குறுகிய கால ஆதாயங்களை மிஞ்சுகின்றன. எனவே, உள்நாட்டு இனங்களுக்கு மேலாக இறக்குமதி செய்யப்படும் மரக்கறி இனங்களுக்கு கமக்காரர்களின் விருப்புக்கான காரணிகளை அடையாளம் காண்பதற்கு இந்த ஆய்வு முயல்வதுடன், இலங்கையில் மரக்கறி விதை விநியோகத் துறையைப் பலப்படுத்துவதற்கு மூலோபாயங்களைச் சுட்டிச்சொல்கின்றது.

**திட்டவட்டமான நோக்கங்கள்**

I. இறக்குமதி செய்யப்படும் இனங்களுக்கான கமக்காரர்களின் விருப்பின் நிர்ணயக்கூறுகளை பரீட்சித்தல் (உள்நாட்டு இனங்களுக்கு குறைந்தளவு விருப்பு).
II. உள்நாட்டு இனங்களுக்கு எதிராக இறக்குமதி செய்யப்படும் இனங்களைச் செய்கை பண்ணுவதிலுள்ள ஆகுசெலவையும், நன்மைகளையும் ஒப்பிடுதல்.
III. இலங்கையில் மரக்கறி விதை விநியோகத் துறையைப் பலப்படுத்துவதற்கு மூலோபாயங்களைச் சுட்டிச்சொல்லுதல்

பிரதிநிதித்துவ மாதிரியுடன் அனுராதபுரம், குருநாகல், பதுளை, நுவரெலியா, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆரம்பநிலைத் தரவு சேகரிக்கப்பட்டது. முன்னூற்றி இருபது கமக்காரர்களே மாதிரி அளவாகும். மாதிரிப்படுத்தல் வரைச்சட்டம் தொடர்பில் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களிலிருந்து பீர்க்கு, பாகற்காய், பூசணி மற்றும் தக்காளி ஆகிய தெரிவுசெய்யப்பட்ட பயிர்களைச் செய்கைபண்ணும் கமக்காரர்களிடமிருந்து தரவு சேகரிக்கப்பட்டது.

**தற்போதைய முன்னேற்றம்**
ஆரம்பநிலை தரவுச் சேகரிப்பு முடிவடைந்துள்ளது. தரவைப் பகுப்பாய்தலும், அறிக்கை எழுதுதலும் நடந்துகொண்டிருக்கின்றன.

## சூழல், நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

### முடிக்கப்பட்ட ஆய்வுகள்

**1. வர்த்தகப் பண்ணைத் நிகழ்ச்சித்திட்டத்தினதும், இளைஞர் கம-வியாபார முயற்சிநிகழ்ச்சித்திட்டத்தினதும் மதிப்பாய்வு**

**ஆராய்ச்சிக் குழாம்:** திரு.டபிள்யு.எச்.எ.ஷாந்த - இணைப்பாளர்
திருமதி ஜி.ஜி.டீ. எல். டபிள்யு.சமரசிங்க - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை:**
நாட்டின் கமத்தொழில் பிரதான நீரோட்டத்தையும், அதன் துணைத் துறைகளையும் மேற்பார்வை செய்யும் பிரதான அரசாங்க உறுப்பாக கமத்தொழில் அமைச்சு நேரகாலத்திற்கான இரட்டைத் நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது: (i) வர்த்தக கமத்தொழில் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் (ii) இளைஞர் கம-வியாபார முயற்சித் நிகழ்ச்சித்திட்டம். ஐந்து வருட தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களாக 2013ஆம் ஆண்டில் இவ்விரு நிகழ்ச்சித்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மாவட்டப் பணிப்பாளரின் (கமத்தொழில்) மேற்பார்வையின் கீழ் மாவட்ட மட்டத்தில் அமுலாக்கப்பட்டுள்ளன. நடைமுறையிலான கமக்காரர்களின் பிரச்சனைகளையே வர்த்தகக் கமத்தொழில் நிகழ்ச்சித்திட்டம் பிரதானமாக கவனத்திற்கெடுப்பதுடன், வர்த்தக மட்டத்திற்கு தமது கமத்தொழில் செயற்பாடுகளை விருத்திசெய்வதற்கும் அத்தகைய கமக்காரர்களுக்கு அது உதவியளிக்கின்றது. வியாபார முயற்சியாளர்களாக இளைஞர்கள் பிரகாசிப்பதற்காக அவர்களைச் செயல்நோக்கமளிப்பதன் மூலமும், வசதிப்படுத்துவதன் மூலமும் கமத்தொழிலுக்குள் அதிகளவு இளைஞரைக் கவர்வதை இளைஞர் கம-வியாபார முயற்சி நிகழ்ச்சித்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

திருப்திகரமான மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னேற்றமடைகின்ற அதேவேளை, நிகழ்ச்சித்திட்டங்களுக்கு புதிய அம்சங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும், நடைமுறையிலான நியதிகளையும், நிபந்தனைகளையும் மீளவாய்வதன் மூலமும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்றிறனையும், செயல்விளைவினையும் அதிகரிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் உறுப்பான கமத்தொழில் அமைச்சின் அபிவிருத்தி பிரிவு எதிர்பார்க்கின்றது. இரட்டை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு புதிய சேர்ப்புக்களை வகுத்தமைக்குமுகமாக, 2013 மற்றும் 2014 நிதிசார் ஆண்டுகளில் நிகழ்ச்சித்திட்டத்தின் பயனாளிகள் மீது மதிப்பாய்வொன்றை நடத்துவதன் ஊடாக பாடங்களைக் கற்பதற்கு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் முகவராண்மை எதிர்பார்க்கின்றது. இந்த மதிப்பாய்வு நடைமுறையின் பொறுப்பு ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்திடம் (ஹெ.க.ஆ.ப.நி.) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**மதிப்பாய்வின் நோக்கங்கள்:**
பண்ணை நிலங்களிலும், பண்ணைக் குடித்தனங்களிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் தலையீடுகளினால் செய்யப்பட்ட தாக்கத்தை அடையாளம்காணும் நோக்கத்துடன் இரு நிகழ்ச்சித்திட்டங்களும் மதிப்பாயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மதிப்பாய்வின் திட்டவட்டமான நோக்கங்கள் வருமாறு:

- நிகழ்ச்சித்திட்டத்தின் தலையீடுகளாக நிகழ்ச்சித்திட்டம் செய்துள்ள கமத்தொழிலில் உள்ள துணை-துறைகளை அடையாளங்காணுதல்.
- வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டங்களில் பயனாளிக் கமக்காரர்களினாலும், அமுல்படுத்தும் அலுவலர்களினாலும் அனுபவிக்கப்பட்ட பிரச்சனைகளை அடையாளம் காணுதல்
- கமக்காரர் குடித்தனங்கள் மீது நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவுகளையும், தாக்கங்களையும் அடையாளம் காணுதல்

- நிகழ்ச்சித்திட்டம் அதிகளவு விளைவுடனும், செயற்றிறனாகவும் விளங்குவதற்கு கற்கப்பட்ட பாடங்கள் ஊடாக சம்பந்தப்பட்ட பரிந்துரைகளைச் செய்தல்.

**முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்:**

- இரட்டைத் நிகழ்ச்சித்திட்டத்தினதும், அதன் அமுலாக்கல் நடைமுறையினதும் மீது பொதுவான கமக்காரர்களின் விழிப்பியல் மிகவும் மோசமாக இருந்ததினால், பயனாளிகளில் பெரும்பான்மையானோர் கமத்தொழில் துறையில் உள்ள அலுவலர்களின் தொடர்பு கமக்காரர்களாவர். எனவே, கமத்தொழில் அமைச்சைச் சேர்ந்த அபிவிருத்தி அலுவலர்கள், கமத்தொழில் போதனாசிரியர்கள், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் விழிப்பியலை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் போன்ற பயனுறுதிவாய்ந்த தொடர்பாடல் வழிமுறைகள் கிராமத்திற்குச் செய்தியைக் கொண்டு வருவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

- நிதிசார் மற்றும் நிறுவனரீதியிலான நடைமுறைகளில் தாமதங்களின் காரணமாக பொருத்தமற்ற நேரத்தில் நிகழ்ச்சித்திட்டத்தில் தலையீடுகள் செய்யப்படுவதனால் மூலத்திலான கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து கமக்காரர்கள் வழிபிறழ்வதற்கு முனைகின்றார்கள். எனவே, முதலாவது காலாண்டில் கருத்திட்ட முன்மொழிவும், வரவு-செலவுத்திட்ட அங்கீகாரமும் முடிக்கப்படுகின்ற வேளை 2ஆவது மற்றும் 3ஆவது காலாண்டுகளினுள் நிகழ்ச்சித்திட்ட நன்மைகளை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.

- உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் பண்ணை வருமானம் ஆகியவற்றை அதிகரிப்பதற்கு கமக்காரர்களுக்கு நிகழ்ச்சித்திட்டம் அளப்பரிய விதத்தில் நன்மையளித்துள்ளது. தமது கமத்தொழில் செயற்பாடுகளை நீடிப்பதற்கும், அதிகரிப்பதற்கும் சில கமக்காரர்களுக்கு மேலும் உதவி அவசியமானதாகும். எனவே, நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து அவர்கள் நன்மைகளைப் பெற்றவுடன், அவர்களை தகுதி இழக்கச்செய்வதற்குப் பதிலாக ரூபா 500,000 கொண்ட தொகை வரை, அவர்கள் நிதிசார் பலத்தைப் பொறுத்து, படிப்படியாக வறிய கமக்காரர்களுக்கு உதவி வழங்கப்பட வேண்டும்.

- நிகழ்ச்சித்திட்டத் தலையீட்டின் வெற்றியற்ற விடயங்களைப் பொறுத்தளவில், சம்பந்தப்பட்ட பயிரில்/பயிர்களில் கமக்காரர்களின் பின்னணியையும் மற்றும் நிதிசார் பலத்தையும மதிப்பிடாமல் நன்மைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. எனவே, நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியைப் பாதிக்கும் சகல அம்சங்களிலும் முழுமையான ஆய்வொன்றைக் கொண்டிருப்பதற்கு விதந்துரைக்கப்படுகின்றது.

- கமத்தொழில் விஸ்தரிப்பு, உள்ளீடு விநியோகத்தை வசதிப்படுத்தல் மற்றும் கமக்காரர்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளார்கள் அல்லது கைவிடப்பட்டுள்ளார்கள் என அவர்கள் உணர்வதை அனுமதிக்காமல் சந்தைப்படுத்தல் போன்ற வேறு உதவியை வழங்குகின்ற அதேவேளை, அபிவிருத்தி அலுவலர்களினால் கிரமமான வருகைதரல்கள் ஊடாக பயனாளிக் கமக்காரர்களின் தொடர்ச்சியான கண்காணித்தலும், மதிப்பாய்வும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்**

1. **மானாவாரி கமக்காரர்கள் மீது வரட்சியின் தாக்கத்தையும் மற்றும் ஊறுபடுந்தன்மையையும் குறைந்தபட்சமாக்குவதற்கான உத்தேசமான மூலோபாயங்கள்: மானாவாரி மற்றும் பருவகாலக் குளங்களின் கீழ் செய்கை பண்ணும் கமக்காரர்களின் விடயத்தில்**

**ஆராய்ச்சிக் குழாம்:** திரு.எச்.ஜே.சி.ஜயசூரிய - இணைப்பாளர்
திரு. டபிள்யு.எ.ஆர்.விக்ரமசிங்க - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
இலங்கையில் மானாவாரிக் கமக்காரர்கள் மீது வரட்சியின் ஊறுபடுந்தன்மையும், தாக்கமும் இதுவரை விரிவாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. அவ்வாறாக பயனுறுதிவாய்ந்த அனுசரிப்புப் பரிந்துரைகள் திருப்திகரமாகவும் விளங்கவில்லை.

மானாவாரி மற்றும் பருவகால குள முறைமையின் கீழ் தொழிற்படும் பயிர்ச்செய்கை சனசமூகத்தின் வாழ்வாதாரங்களின் நிலைத்திருக்கும்தன்மை மீது வரட்சியின் தாக்கத்தைப் புரிந்து கொள்வதற்காகவும், அதேவேளை அவர்களின் மீளும்தன்மையிலான ஆற்றலளவை மேம்படுத்துவதில் இடைவெளிகளை ஒடுக்குவதுடன், ஒத்துபோகின்ற வழிகளையும், வழிவகைகளையும் அடையாளம்கண்பதற்காகவும் இந்த ஆய்வு நட்ததப்பட்டது.

இதைச் சாதிக்குமுகமாக, திட்டவட்டமான நோக்கங்கள் வருமாறு:

- வரட்சிக்கு மானாவாரி மற்றும் பருவகாலக் குளங்களின் கீழ் கமக்காரர் குடித்தனங்களின் ஊறுபடுந்தன்மையின் மட்டத்தைக் கண்டறிதல். மானாவாரி மற்றும் பருவகாலக் குளங்களின் கீழ் கமக்காரர்களின் வாழ்வாதாரங்களின் நிலைத்திருக்கும்தன்மை மீது வரட்சியின் தாக்கங்களைப் புரிந்துகொள்ளுதல்.
- வரட்சி தொடர்பான அதிர்ச்சிகளுடன் ஒத்துப்போவதற்கு குறிப்பிட்ட பயிர்ச்செய்கைச் சனசமூகத்தினால் பின்பற்றப்படும் மூலோபாயங்களை அடையாளம்காணுதல்
- வரட்சியின் பின்விளைவுகளுக்கு அனுசரிப்பதற்கு மானாவாரி மற்றும் பருவகாலக் குளங்களின் கீழ் கமக்காரர்களின் மீளும்தன்மையிலான ஆற்றலளவை மேம்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை அடையாளம்காணுதல்.
- ஆய்வுக்கு அவசியமான ஆரம்பநிலைத் தரவின் சேகரிப்பு முடிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது தரவுப் பகுப்பாய்வும், அறிக்கை எழுதுதலும் மேற்கொள்ளப்படுகின்றன.

2. **இலங்கையில் அரிசி உற்பத்தி முறைமைகளில் பூச்சிநாசினிக்கான கமக்காரர் மனவுணர்வு மற்றும் கிராக்கி**

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி திலனி பத்மாஜனி முனவீரகே - இணைப்பாளர்
திருமதி ஜே.எ.யு.பி.ஜயசிங்க - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
நவீன கமத்தொழிலில் முக்கியமான வகிபங்கொன்றை கம-இரசாயனம் ஆற்றுகின்றது. எனினும், நாடு பூராவும் பூச்சிநாசினியின் தவறான பிரயோகத்துடன் இணைந்துள்ள மறுதலையிலான வெளிப்புறக்காரணிகளுடன் இலங்கையில் பயிர்ச்செய்கை முறைமைகளின் நிலைத்திருக்கும் தன்மை தொடர்பில் பாரதூரமான கரிசனைகள் எழுப்பப்பட்டன. அதிகளவு இரசாயனம் சாராத

பயிர்ச்செய்கையை நோக்கி நகர்வதற்கான அவசியத்துடன், ஏதேனும் கொள்கையை வகுத்தமைப்பதற்கு பூச்சிநாசினிகளை நோக்கி அபாய மனவுணர்வு, கமக்காரர்களின் நடத்தை மற்றும் மனோநிலை ஆகியன மீது தெளிவான புரிந்துணர்வைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமாகும். எனவே, பூச்சிநாசினிகளின் கெடுதியிலான தாக்கங்கள் மீது நெல் கமக்காரர்களின் மனவுணர்வினை நிர்ணயிப்பதற்கும், அவர்களது நடைமுறைகளுக்கு பொருள் விளக்கமளிப்பதற்கு மனவுணர்வினை மதிப்பாய்வதற்கும் அத்துடன் இலங்கையின் அரிசி உற்பத்தி முறைமைகளில் பூச்சிநாசினி உபயோகத்தின் நிர்ணயக் கூறுகளை மதிப்பிடுவதற்கும் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

**பொதுவான நோக்கம்:**

- இலங்கையின் அரிசித் துறையில், பூச்சிநாசினியின் உபயோகத்தையும், கமக்காரர் மனவுணர்வினையும் மதிப்பிடுதல்.

**திட்டமான நோக்கங்கள்:**

- அரிசி உற்பத்தியில் பூச்சிநாசினிப் பாவனையின் அளவை மதிப்பிடுதல்.
- பூச்சிநாசினிகளின் தாக்கங்கள் மீது கமக்காரர்களின் மனவுணர்வினை நிர்ணயித்தல்.
- பூச்சிநாசினி உபயோகத்தின் அளவின் பாரிய நிர்ணயக்கூறுகளைக் கண்டறிதல்.

ஒவ்வொரு கம-சூழலியல் வலயத்தைப் பிரதிநிதிப்படுத்தும் அம்பாறை, குருநாகல், மாத்தறை மற்றும் அனுராதபுரம் ஆகிய தெரிவுசெய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில் வெளிக்கள தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், தரவுப் பகுப்பாய்வும், அறிக்கை எழுதுதலும் நடந்துகொண்டிருக்கின்றன.

## சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை கம-வியாபாரப் பிரிவு

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தின் (ஹெ.க.ஆ.ப.நி.) சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை கம-வியாபாரப் பிரிவு (ச.உ.கொ.க.பி) என அறியப்பட்ட சந்தை ஆராய்ச்சி அலகு 1979இல் USAIDஇன் உதவியுடன் தாபிக்கப்பட்டது. அதன் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்காக 1993 - 1997இன் காலத்தின் போது UNDP/FAOஇனால் மேலும் உதவி வழங்கப்பட்டது. அரசாங்கக் கொள்கை வகுப்போர்களுக்கும், கமக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், நூற்கல்வியாளர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் சந்தைப் புள்ளிவிபரங்களின் சேகரிப்பையும், தொகுப்பையும், பகுப்பாய்வையும் மற்றும் பரப்புதலையும் செய்வதே பிரிவின் பிரதான வகிபங்காகும். வாழ்க்கைச் செலவு மதிப்பாய்வு மீதான அமைச்சுரீதியான உப குழுவுக்கும், மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் அமைந்துள்ள தேசிய உணவுப் பாதுகாப்புக் குழுவுக்கும் சந்தை தகவலை ச.உ.கொ.க.பி. பிரதானமாக வழங்குகின்றது. சந்தை விலைகளை ஸ்திரப்படுத்துவதற்காக கொள்கைகளை வகுத்தமைப்பதில் கமத்தொழில், வர்த்தக, வாணிப மற்றும் பாவனையாளர் அலுவல்கள், சுகாதாரம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்களினதும், இலங்கை மத்திய வங்கியினதும் கொள்கை வகுப்பாளர்களுக்கு சந்தைத் தகவலை ச.உ.கொ.க.பி. வழங்குகின்றது.

மேலதிகமாக, தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் உள்ள அரசாங்கத் திணைக்களங்களுக்கும், வேறு நிறுவனங்களுக்கும், அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கும், வெளிநாட்டு நன்கொடை முகவராண்மைகளுக்கும் மற்றும் வேறு நிறுவனங்களுக்கும், தூதுவராலயங்களுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும், தனியார் வர்த்தக நிறுவனங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் தனியார் வர்த்தகர்களுக்கும், அரச சார்பற்ற தாபனங்களுக்கும், ஊடக முகவராண்மைகளுக்கும் மற்றும் கமக்காரர்களுக்கும் சந்தைத் தரவுகளையும், தகவலையும் பிரிவு வழங்குகின்றது. கமக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், விஸ்தரிப்பு சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கும் கமத்தொழில் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி ஆய்வுகளையும், பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துவது போன்ற ஒரு தொகையிலான வேறு செயற்பாடுகள் ச.உ.கொ.க.பி.இனால் அமுல்படுத்தப்படுகின்றது.

### 1. உணவுத் தகவல் மற்றும் சந்தை நுண்ணாய்வுக் கருத்திட்டம்: தற்போதைய கிரமமான வேலை நிகழ்ச்சித்திட்டம்

வாராந்த “உணவுப் பண்டங்கள் திரட்டு” (ஆங்கிலம் மற்றும் சிங்களம்), மற்றும் மாதாந்த “உணவுத் தகவல் திரட்டு” (ஆங்கிலம் மற்றும் சிங்களம்) ஆகியனவே ச.உ.கொ.க.பி.இனால் தயாரிக்கப்படும் இரு பாரிய பருவகால வெளியீடுகளாகும். இவை அரசாங்கத்திற்கும், கமக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் விலைப் புள்ளிவிபரங்களையும், சந்தைத் தகவலையும் வழங்குகின்றன. இந்த திரட்டுக்கள் வளங்களின் ஒதுக்கீட்டிலும், கொடுக்கல் வாங்கல் ஆகுசெலவைக் குறைப்பதிலும், கமக்காரர்களின் பேரம்பேசும் நிலையினை மேம்படுத்துவதிலும், முழுமையான சந்தை நிலைமைகளின் விழிப்பியலை உயர்த்துவதிலும், பேரம்பேசுவதற்கு பாவனையாளர்களுக்கு ஆதரவளிப்பதிலும், உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக உணவுக் கையிருப்புக்களைப் பராமரிப்பதில் கணக்குக்கு எடுப்பதற்காக கொள்கை வகுப்போர்களுக்கு பெறுமதிமிக்க புள்ளிவிபரங்களை வழங்குவதிலும் பாரிய வகிபங்கொன்றை ஆற்றுகின்றன.

கொழும்பிலுள்ள ஒன்பது சில்லறைச் சந்தைகளிலிருந்தும், புறக்கோட்டை, பாலத்துறை, தெமட்டகொடை, பொரளை, வெள்ளவத்தை, கிருலப்பனை, நுகேகொடை, கடவத்தை, மற்றும் கிரிபத்கொடை போன்ற அயல்புறங்களிலிருந்தும் மற்றும் புறக்கோட்டை (கொழும்பு) மொத்த விற்பனைச் சந்தையிலிருந்தும் உணவுப் பண்டங்களின் விலைகளும், சம்பந்தப்பட்ட சந்தைத் தகவலும் சேகரிக்கப்படுகின்றன. மேலும், பாரிய உணவு உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலும் மற்றும் உணவை நுகர்கின்ற மாவட்டங்களிலும் உள்ள 30 சந்தைகளிலிருந்து தரவும் சேகரிக்கப்பட்டன.

2015ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்ட வெளியிடத்திலான சந்தைகள் வருமாறு: குருநாகல், நிக்கவரட்டிய, தம்புள்ள, அனுராதபுரம், தம்புத்தேகம, பொலன்னறுவை, நுவரெலியா, கண்டி, பதுளை, கெப்பிட்டிபொல, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய, ஹம்பாந்தோட்டை, திஸ்ஸமஹரகம, முல்லைத்தீவு, மாத்தறை, காலி, களுத்துறை, மொனராகலை, தெகியத்தகண்டிய, புத்தளம்,

மீகொட, மரதன்கஹமுல்ல, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு. புறக்கோட்டை, கண்டி, தம்புத்தேகம, கெப்பிட்டிபொல, தம்புள்ள, நுரைச்சோலை, மரதன்கடமுல்ல மற்றும் மீகொட ஆகிய சந்தைகளிலிருந்து உணவுப் பண்டங்களின் மொத்த விலைகள் நாளாந்த அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. நேரகாலத்திற்கு பிரதான மொத்த விற்பனைச் சந்தைகளில் பண்டங்களின் விலைகளை உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் அறிந்துகொள்வதை இயலச் செய்வதற்காக இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக இந்தத் தரவுகள் நாளாந்தம் பரப்பப்பட்டன.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்று விநியோகிக்கப்படும் வாராந்த உணவுப் பண்டங்கள் திரட்டானது பாரிய உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் உற்பத்தியாளர் விலைகளுடன் சேர்த்து கொழும்பிலும், வெளியிடங்களிலுள்ள சந்தைகளிலும் உள்ள மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகளைக் கொண்டுள்ளது. அரிசி, மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, மரக்கறிகள், பழங்கள், முட்டை, மீன் மற்றும் கருவாடு ஆகியனவே சேகரிக்கப்பட்ட பிரதான பண்டங்களின் விலைகளாகும். மேலதிகமாக, வீச்செல்லைகளின் புள்ளிவிபர விவரணத்தையும், கடந்த வாரத்துடனும், ஆண்டுடனும் ஒப்பிட்டு சராசரிகளையும் மற்றும் விலைகளையும் திரட்டு வழங்குகின்றது.

பிரிவின் இன்னொரு பாரிய பங்களிப்பான மாதாந்த உணவு தகவல் திரட்டு கடந்த மாதத்தின் முக்கிய காட்டிகளினதும், விலைகளினதும் உற்பத்தியினதும், பயிர் சூழ்நிலையினதும் மற்றும் உணவு கையிருப்புக்களினதும் சுருக்கமான சாராம்சமொன்றை வழங்குகின்றது. சராசரிகள், சில்லறை விலைகள், மொத்த விற்பனை விலைகள், பாரிய பயிர்ப் பகுதிகளில் உற்பத்தியாளர் விலைகள் மற்றும் உணவு இறக்குமதிகளின் அளவு மற்றும் அவற்றின் பெறுமதிகள் ஆகியவற்றுடன் நாட்டின் முழுமையான உணவு சந்தைப்படுத்தல் சூழ்நிலையை பொது மக்களுக்கு அது வழங்குகின்றது. மேலும், பாரிய உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில், பயிர்களின் கட்டம், பயிர்ச்செய்கை விஸ்தீரணங்கள் மற்றும் இலக்குப்படுத்தப்பட்ட பயிர் வளர்ப்பு விஸ்தீரணங்கள், உண்மையான பயிர் விஸ்தீரணங்கள், சாதனைகள், பாரிய நீர்ப்பாசன குளங்களின் நீர் மட்டங்கள், மழை வீச்சுக்கள் மற்றும் காலநிலை நிலைமைகள் மற்றும் வரட்சி, வெள்ளங்கள் போன்ற இயற்கையான காரணிகள் ஆகியன மீதான தகவலே முக்கிய காட்டிகளாகவும், தகவலாகவும் விளங்குகின்றன.

மூன்று புள்ளிவிபர அலுவலர்கள், 10 புள்ளிவிபர உதவியாளர்கள் மற்றும் 19 சமயாசமய ஆய்வாளர்கள் ஆகியோரினால் கிரமமான வேலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவியளிக்கப்பட்டது. 7 புள்ளிவிபர உதவியாளர்களையும், ஒரு புள்ளிவிபர அலுவலரையும் குழாம் கொண்டுள்ளதுடன், வெளிக்களத்தில் தரவுகளைச் சேகரிப்பதற்காக 22 சமயாசமய ஆய்வாளர்கள் குறித்தொதுக்கப்பட்டனர்.

## 2. ஆரம்பக் கட்டத்தில் ஹெ.க.ஆ.ப.நி. விநியோகங்கள் MIS

- நாடுபூராவும் பாரிய சந்தைகளில் மரக்கறிகளினதும், பழங்களினதும் மொத்த விற்பனை, சில்லறை மற்றும் பண்ணையிலான விலைகள் அத்துடன் அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார நிலையங்களில் விலைகள்
- இனங்கள், சந்தைகள் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார நிலையங்களுடன் 08 மொத்த விற்பனை சந்தைகளில் 50 இனங்களின் நாளாந்த தரவுச் சேகரிப்பு விபரங்கள் http://www.harti.gov.lk/images/download/market_information/2016/january/daily_16-02-2016.pdf
  வாராந்த தரவுச் சேகரிப்பின் அமைவிடங்கள், இனங்கள் மற்றும் விலைகள் ஆகியவற்றின் விபரங்கள் (பார்க்க பின்னிணைப்பு 01)
  http://www.harti.gov.lk/images/download/market_information/Weekly_Price_list/weekly-042016.pdf

இதற்கு மேலதிகமாக, மொபிரெல் ஊடாக தற்போதைய MIS பரப்புதல் நிகழ்ச்சித்திட்டத்தின் விபரங்கள் வருமாறு:

**மொபிரெல் “6666” கம விலை தகவல் காட்டி**

புறக்கோட்டை, கண்டி, தம்புள்ள, மீகொட, நுரைச்சோலை, தம்புத்தேகம, நுவரெலியா மற்றும் கெப்பிட்டிபொல ஆகிய சந்தைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட நாளாந்த மொத்த விற்பனை விலைகளின் தகவலை ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் வழங்குகின்றது. ஹெ.க.ஆ.ப.நி.இனால் தகவல் முழுமையாக சரிபார்க்கப்பட்டு, செல்லுபடியாக்கப்பட்டு சந்தைக்கும், உற்பத்தியின் கிட்டும்தன்மைக்கும் ஏற்ப முறைமையினுள் பதிவுசெய்யப்படுகின்றது.

பாவனையாளர்கள் IVRக்குள் தொடர்புகொள்ள 6666 என்ற எண்ணை சுழற்றுவது அவசியம் என்பதுடன், இது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கிட்டுகின்றது. உற்பத்திரீதியாக அல்லது சந்தைரீதியாக தகவலைப் பெற முடியும். உற்பத்திரீதியாக தெரிவுசெய்யப்பட்ட அவசியப்படும் உற்பத்திக் குறியீடு பதிவுசெய்யப்படுவது அவசியமாகும். தவறான குறியீடொன்று பதிவுசெய்யப்படும் விடயத்தில் உற்பத்திப்பொருட்களின் பட்டியல் வாடிக்கையாளர்களுக்கு வாசிக்கப்படும். சந்தை மூலம் தெரிவுசெய்வதற்கு பாவனையாளர் விரும்பினால் புறக்கோட்டை, கண்டி, தம்புள்ள, மீகொட, நுரைச்சோலை, தம்புத்தேகம, நுவரெலியா மற்றும் கெப்பிட்டிபொல ஆகியவற்றின் சகல உற்பத்திப்பொருட்களையும் அவர்கள் பெற முடியும்.

**2015ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம்:**

i. வாராந்த உணவுப் பண்டங்கள் திரட்டு – 52 திரட்டுக்கள் வெளியிடப்பட்டன (ஆங்கிலம் மற்றும், சிங்களம்)
ii. மாதாந்த உணவுத் தகவல் திரட்டு - 12 திரட்டுக்கள் வெளியிடப்பட்டன (ஆங்கிலம் மற்றும், சிங்களம்)
iii. நேரகாலத்திற்கு தமிழ் சந்தைப் பங்கெடுப்பாளர்களுக்கும், ஊடகங்களுக்கும் நாளாந்த மற்றும் வாராந்த உணவு விலைகள் வழங்கப்பட்டன.
iv. ஆண்டு முழுவதும் வேண்டுகோளின் பேரில் அரசாங்கத்திற்கும், சம்பந்தப்பட்ட தனியார் துறை முகவராண்மைகளுக்கும் நாளாந்த விலைத் தரவும், வேறு சந்தைத் தகவலும் வழங்கப்பட்டன.
v ஆண்டு முழுவதும் ஜனாதிபதி செயலகத்தின் கீழுள்ள “உணவுக் கொள்வனவு, கண்காணித்தல் அலகுக்கு” புதுப்பிக்கபப்ட்ட உணவுப் பண்ட விலைகள் வழங்கப்பட்டன.

## முடிக்கப்பட்ட ஆய்வுகள்

**1. இலங்கையில் நெல் சந்தைப்படுத்தலில் அரசாங்கத் தலையீடு: கொள்வனவிலும், கையிருப்புக்குப் பிந்திய முகாமைத்துவத்திலும் பிரச்சனைகள்**

| | | | |
|---|---|---|---|
| **ஆராய்ச்சிக் குழாம்:** | திரு.டபிள்யு.எ.என்.விஜேசூரிய | - | இணைப்பாளர் |
| | திருமதி ஆர்.பி.விதானபத்திரன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| | திரு.டபிள்யு.எச்.டி.பிரியதர்ஷன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| | திருமதி பி.எ.ஜே.ஷம்பிக | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**

ஆசியாவில் பெருமளவு அரிசி உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் சந்தையை ஸ்திரப்படுத்தும்முகமாக நெல்/அரிசி சந்தைப்படுத்தல் முறைமையில் அரசாங்கத் தலையீடு பொதுவானதாகும். கமக்காரர்களுக்கு ஆதரவு விலைகளின் அமைப்பிலும், பாவனையாளர்களுக்கு உணவு தானியங்களின் பங்கீட்டுக்கான விலைகளில் வழங்குவதிலும்

தலையீட்டின் வகை வேறுபடுகின்றது. உத்தரவாத விலையில் கொள்வனவு செய்வதினதும், விற்பனை செய்வதினதும் மற்றும் அடிதாங்கி கையிருப்பினதும் அமைப்பில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் (நெ.ச.ச.) ஊடாக பிரதானமாக நெல் சந்தைப்படுத்தலில் இலங்கை அரசாங்கம் தலையிடுகின்றது. 2008ஆம் ஆண்டில் நெ.ச.ச. மீள்தாபிக்கப்பட்டதுடன், தொழிற்பாடுகளும் ஆரம்பமாகின. இரண்டாம்நிலை தரவைப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கையின் நெல் சந்தைப்படுத்தலில் நெ.ச.சபையின் வகிபங்கினையும் செயற்றிறனையும் இந்த அறிக்கை பரீட்சிக்கின்றது. குறிப்பாக கொள்வனவு செய்தல் மற்றும் நெல்லின் கையிருப்புக்குப் பிந்திய முகாமைத்துவம் ஆகியவற்றில் அதன் பரந்த நோக்கத்தினை நெ.ச.சபை அடைந்துவிட்டதா என்பதை ஆய்வு ஆராய்வதுடன், அதன் சீர்திருத்தங்களுக்கான விருப்புக்களையும் வழங்குகின்றது. நியாயமான விலைகளில் தமது உணவுத் தேவையினைப் பெறுவதற்கு பாவனையாளர்களுக்கு நெ.ச.சபையின் முன்னெடுப்புக்கள் உதவிகரமாக இருந்த அதேவேளை, நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட நெல்லுக்கான அரசாங்கத்தின் உத்தரவாத விலைத் திட்டத்தின் ஊடாக அவர்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு கமக்காரர் சனசமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் மீது அரசாங்கத் தலையீட்டின் முழுமையான சூழ்நிலையை மதிப்பாய்வதும், நடைமுறையிலான பிரச்சனைகளை அடையாளம்காண்பதுமே ஆய்வின் நோக்கமாகும்.

1. பண்ணையிலான விலைகளை ஸ்திரப்படுத்துமுகமாக நெல் கொள்வனவுத் நிகழ்ச்சித்திட்டத்தின் தாக்கத்தைப் பரீட்சித்தல்
2. நெ.ச.சபையினால் கையிருப்புக்குப் பிந்திய முகாமைத்துவ நடைமுறையைப் பரீட்சித்தல்
3. நெல் சந்தைப்படுத்தல் மீது அரசாங்கத்தின் தலையீட்டின் செயற்றிறனை அதிகரிப்பதற்கு அவசியமான முக்கிய கொள்கை முன்னெடுப்புக்களை அடையாளம்காணுதல்.
4. இரண்டாம்நிலைத் தரவுப் பகுப்பாய்வினதும் மற்றும் முக்கிய தகவல் அளிப்பவர் நேர்முகங்காணல்களினதும் மீதான அடிப்படையை இந்த ஆய்வு முற்றுமுழுதாகக் கொண்டுள்ளது.

**முடிவுகள்:**

2008இல் மொத்த நெல் உற்பத்தியின் 2%இலிருந்து 2013இல் அண்ணளவாக 5%க்கு நெ.ச.ச.இனால் நெல் கொள்வனவின் அளவு படிப்படியாக அதிகரித்தது. 2008இல் 51ஆக விளங்கிய நெ.ச.சபையின் களஞ்சியங்களின் எண்ணிக்கை 2013இல் 228,000 மெ.தொ. கொண்ட கொள்வனவுடன் 219க்கு அதிகரித்தது. எனினும், பாரிய உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களில் பிரதேசச் செயலாளர் மட்டத்தினால் பண்ணையிலான விலைகளின் பகுப்பாய்வானது உச்ச அறுவடை செய்யப்படும் காலங்களில் நெல்லின் பண்ணையிலான விலைகளை ஸ்திரப்படுத்துவதற்கு கொள்வனவுத் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக விளங்கவில்லை என பகுப்பாய்வு காட்டுகின்றது. உச்ச அறுவடை செய்யப்படும் மாதத்தின் போது நெல்லின் பிரதேச செயலாளர் பிரிவின் பண்ணையிலான விலைகளின் 50 சதவீதத்திற்கு மேற்பட்டது பெருமளவு மாவட்டங்களில் விசேடமாக அம்பாறையிலும், மட்டக்களப்பிலும் உத்தரவாத விலையை விட குறைவானதாகும். சகல பாரிய உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களில் சூழ்நிலையானது ஓரளவுக்கு ஒரே மாதிரியானதாகும்.

கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்து விலைகள் அதிகரித்ததுடன், அது கமக்காரர்களுக்கு ஊக்குவிப்பொன்றாகவும் விளங்கியது. இதன் மூலம் தரத்திலான நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அவர்களுக்கு ஊக்கமளித்தது. மேலதிகமாக, பெருமளவு பருவங்களில் நாட்டின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக நெல்லின் அடிதாங்கி கையிருப்புக்களின் குறைந்தபட்ச மட்டத்தை நெ.ச.சபையினால் பராமரிக்கக்கூடியதாக இருந்தது. 2012இலும், 2013இலும் கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் ஊடாக பிரதான நெல்/அரிசி

விற்பனை நடைமுறை இடம்பெற்றதுடன், இந் நடைமுறையிலிருந்து பாரிய இழப்பீடொன்று நெ.ச.ச.க்கு ஏற்படுகின்றது. குறைந்தபட்ச ஆகுசெலவுக்கு மேலான விலையொன்றில் நெல்லை விற்பனை செய்வதற்கு தவறியதன் காரணமாகவும், தனிப்பட்ட ஆலைச் சொந்தக்காரர்களிடமிருந்து வருமதிகளை அறவிடாததின் காரணமாகவும் அதன் வருமானங்களுடன் அதன் ஆகுசெலவுகளை உள்ளடக்குவதற்கு நெ.ச.சபை தவறியுள்ளது.

**பரிந்துரைகள்:**
நெல்/அரிசி சந்தைப்படுத்தல் முறைமையில் நெ.ச.சபையின் வகிபங்கின் மீள்-கரிசனையை மேற்படி பிரச்சனைகள் வேண்டுவதுடன், அதன் தொழிற்பாட்டிலான செயற்றிறனையும் மற்றும் நிதிசார் முகாமைத்துவத்தையும் மேம்படுத்துமுகமாக நெ.ச.சபையின் சீர்திருத்தமொன்றையும் அது வேண்டுகின்றது.

இந்த முக்கியமான விடயத்தில் பிரதான பங்காளர்களான கமக்காரர்களின் கருத்துக்களுடன் விரிவான ஆய்வினை இலக்கியம் வழங்கவில்லை. எனவே, அடிமட்டப் பிரச்சனைகளை அடையாளம்காண்பதற்காக மேலும் விரிவான ஆராய்ச்சி அவசியமானதாகும்.

அத்துடன், நெ.ச.சபையின் மீள்கட்டமைப்புக்காக உயர் மட்ட குழுவொன்றை அரசாங்கம் அமைக்கவேண்டுமெனவும் ஆய்வு சுட்டிச்சொல்கின்றது.

## நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்

### 1. திரவப் பாலுக்கும், பால் மாவுக்கும் பாவனையாளரின் வாங்கும் போக்கு, விருப்பு மற்றும் கிராக்கி

| | | | |
|---|---|---|---|
| **ஆராய்ச்சிக் குழாம்:** | திருமதி ருவீனி விதானபத்திரன | - | இணைப்பாளர் |
| | திருமதி ரோஷினி ரம்புக்வெல | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| | திரு.இ.எ.சி.பிரியங்கர | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லை:**
உற்பத்தியின் வருடாந்த அதிகரிப்புடனும், இறக்குமதிகளுடனும் நாட்டில் பாற்பண்ணைத் துறை சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. தற்போது, பாற்பண்ணை நுகர்வு பாங்குகளுக்கும், நாட்டில் குடித்தொகையியல் மற்றும் சமூக-பொருளாதாரக் காரணிகளுக்கு எவ்வாறு பாவனையாளர்களின் வாங்கும் நடத்தை செயற்படுகின்றது என்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட தரவுகள் அல்லது விரிவான ஆய்வு கிட்டுகின்றன. இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவில் DCD (டைசிடையாமைட்) கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் 2013இல் மிகவும் பாரதூரமான காலமொன்றின் ஊடாக பாற்பண்ணைத் துறை கடந்துள்ளது. இது பாவனையாளர்களின் வாங்கும் நடத்தை, அவர்களது மனோநிலைகள், பாற்பண்ணை உற்பத்திப்பொருட்களுக்கான தேவைகள் மற்றும் கிராக்கி ஆகியனவற்றில் குறிப்பிடத்தக்க விதத்தில் தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. 2012உடன் ஒப்பிடுகையில் 2013இல் மொத்த பால் மாவின் இறக்குமதி 16.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவில் DCD கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமது பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவைத் தெரிவுசெய்யும் போது, பாவனையாளர்கள் மேலும் மேலும் எச்சரிக்கையுடன் விளங்குகின்றார்கள். அதன் கருத்துருவை சந்தைப்படுத்தல் பரவலாக்கியுள்ளது; இடமாற்ற நடத்தையினதும், பாவனையாளரின் கொடுக்கல் வாங்கலின் நடத்தையினதும் ஆய்வினை சமகால சந்தைப்படுத்துவோர் உள்ளடக்குகின்றனர் (கொட்லர், 2002). பாற்பண்ணை உற்பத்திப்பொருட்களுக்கான பாவனையாளரின் வாங்கும் நடத்தை, அவர்களின் விருப்பு, மனோநிலைகள், தேவைகள் மற்றும் கிராக்கி ஆகியன மீதான

தகவலைக் கொண்டிருத்தல் பாற்பண்ணைத் துறையின் செயற்றிறனுக்கான முக்கியமான நிர்ணயக்கூறு காரணிகளாகக் கருதப்படுகின்றது. எனினும், பாற்பண்ணை உற்பத்திப் பொருட்கள் மட்டத்திற்கான பாவனையாளரின் வாங்கும் நடத்தை மற்றும் கிராக்கி அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவின் மாசுபடுத்தல் பிரச்சனைகளுடன் பாவனையாளர்கள் மீதான தாக்கம் ஆகியன மீதான தகவலுக்கு இலங்கையில் பாற்பண்ணைக் கைத்தொழில் பற்றாக்குறை உள்ளது. நுகர்வு பாங்குகளிலும், நுகர்வுப் போக்குகளிலும் மாற்றங்களின் பகுப்பாய்வு மிகவும் முக்கியமானது என்பதுடன், கொள்கை மாதிரிப்படுத்தல் நோக்கங்களுக்கு பிரயோகிக்கத்தக்கதுமாகும். பாற்பண்ணை உற்பத்திப்பொருட்களுக்கு செம்மையான பகுப்பாய்வொன்றையும், கிராக்கியின் சிறந்த மதிப்பீடுகளையும் கொண்டிருத்தல் இலங்கையின் பாற்பண்ணை துறையில் எதிர்கால முன்னேற்றத்தின் எதிர்வுகூறலுக்கு உதவும்.

துறையின் முன்னேற்றத்தில் அனேகமாக சந்தையும், கிராக்கியும் பாரிய வகிபங்குகளை ஆற்றும். ஆனால், பலதரப்பட்ட உற்பத்திக் காரணிகளுக்கு பாவனையாளர்களின் கிராக்கியினதும், விருப்புக்களினதும் மீது விரிவான தகவல் கிட்டவில்லை. வளர்ச்சியுறும் சந்தைகளிலிருந்து நன்மையைப் பெறுவதற்காக சந்தை முனைப்பிலான உற்பத்தியை எடுப்பதற்கு உற்பத்தியாளர்களுக்கும், சந்தைச் செயற்பாட்டாளர்களுக்கும் அத்தகைய தகவல் அவசியமாகும். இந்த அறிவு இடைவெளியை நிரப்புவதற்காக, பால் மற்றும் பால் மா ஆகியவற்றுக்கான பாவனையாளர் விருப்புக்களையும் மற்றும் நுகர்வில் போக்குகளையும் மற்றும் பாற்பண்ணை உற்பத்தியையும், சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களையும் நிர்ணயிப்பது மீது அவற்றின் தாக்கத்தையும் புரிந்துகொள்வதற்காக அளவீடொன்று நடத்தப்பட்டது.

**நோக்கங்கள்:**
பாவனையாளர் வாங்கும் நடத்தையையும், விருப்புக்களையும் மற்றும் புதிய சந்தைப் போக்குகளுடன் திரவப் பாலுக்கும், பால் மாவுக்குமான கிராக்கியையும் நிர்ணயிப்பதே இந்த ஆய்வின் முழுமையான நோக்கமாகும்.

1. திரவப் பாலையும், பால் மாவையும் நோக்கி நடைமுறையிலான நுகர்வுப் பாங்கினையும், வாங்கும் நடத்தையையும் மற்றும் விருப்புக்களையும் அடையாளங்காணுதல்.
2. பால் மாவையும் மற்றும் புதிய சந்தைப் போக்குகளையும் நோக்கி பாவனையாளர் வாங்கும் நடத்தையினதும், விருப்புக்களினதும் மீது மாசுபடுதல் பிரச்சனையின் தாக்கத்தை மதிப்பாய்தல்.
3. உடன் பாலினதும், பால் மாவினதும் கொள்வனவு மீது வேறுபட்ட காரணிகளின் செல்வாக்கினை மாதிரிப்படுத்தல்.

கொழும்பு, கண்டி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. நன்கு கட்டமைக்கப்பட்டதும், முன் சோதிக்கப்பட்டதுமான கேள்விக்கொத்தினைப் பயன்படுத்தி தனிப்பட்ட நேர்முகங்காணல் முறையினால் தெரிவுசெய்யப்பட்ட 400 குடித்தனங்களில் இருந்து ஆய்வுக்கு அவசியமான தரவு சேகரிக்கப்பட்டது.

## 2. இலங்கையில் வேறுபட்ட அரிசி இனங்களுக்கு பாவனையாளர் விருப்பு

| | | | |
|---|---|---|---|
| **ஆராய்ச்சிக் குழாம்:** | திருமதி ருவீனி விதானபத்திரன | - | இணைப்பாளர் |
| | திரு. துமிந்த பிரியதர்ஷன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| | திரு. நாலக விஜேசூரிய | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
இலங்கையின் உணவில் அரிசி ஒரு நிலையான உணவாகும். நடைமுறையில் ஒரு தொகையிலான அரிசி வகையையும், தரங்களையும் இலங்கையின் அரிசிச் சந்தை

கொண்டுள்ளது. தனிப்பட்ட பாவனையாளரின் விருப்பின் மூலம் வேறுபட்ட அரிசி இனங்களின் நுகர்வு நிர்ணயிக்கப்படுகின்றது. எந்தப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன, எந்தளவு தொகையில் செய்யப்படுகின்றன என்பதை நிர்ணயிக்கின்ற அடிப்படைப் பொருளாதார அலகாக பாவனையாளர் ஆராய்ச்சி மிக முக்கியமானதாகும். ஏனெனில் பாவனையாளர் வாங்கும் போக்கின் செல்வாக்கு செலுத்தும் காரணிகளின் அறிவும், உற்பத்திப்பொருளொன்றை நோக்கி பாவனையாளர்களின் விருப்பும் சந்தைப் பங்கினை அதிகரிப்பதற்கு உதவ முடியும். சந்தையில் உற்பத்திப்பொருட்களைச் சாதகமாக நிலைப்படுத்துவதிலும், உற்பத்திப்பொருட்களை பொருத்திப் பார்ப்பதில் உதவுவதிலும் பாவனையாளர் விருப்பினைப் புரிந்துகொள்வது பயனுள்ளதாகும். அரிசியில் இலங்கை சுய-நிறைவினை அடைந்துள்ளது. இச் சூழ்நிலையில், எதிர்கால அரிசிச் சந்தையில், பாவனையாளர் விருப்பு முக்கியமான செலுத்தியொன்றாகும். உற்பத்தி நடைமுறையில், விதையின் கிட்டுந்தன்மையையும், மற்றும் பூச்சிக்கும், நோய்க்கும் தாக்குப்பிடித்தல், விளைச்சல், அறுவடையின் இலகுவானதன்மை போன்ற பயிரின் சில காரணிகளையும் பொறுத்து நெல்லின் வகையைத் தெரிவுசெய்வதற்கு கமக்காரர் விரும்புவார். ஆனால், இதிலிருந்து பாவனையாளர் விருப்பு வித்தியாசப்படும். சந்தையில் ஒரு தொகையிலான அரிசி இனங்கள் உள்ளதுடன், அவை விருப்புக்களின் வேறுபட்ட காரணிகளையும், வேறுபட்ட மட்டத்தையும் கொண்டுள்ளன. வேறுபட்ட மாவட்டங்களில், வேறுபட்ட அரிசி இனங்களின் ஆளொருவருக்கான சராசரிப் பாவனையை குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களம் அறிக்கையிடுகின்றது. ஆனால், அந்த விருப்பு அதன் ஊடாக கவனத்திற்கு எடுக்கப்பட முடியாது என்பதற்கான உண்மையான காரணங்கள் எவை? அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக நாம் இந்த ஆராய்ச்சியை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளோம். மேலும், வேறுபட்ட அரிசி இனங்களுக்கான கிராக்கியின் விருப்பினதும், சிறந்த மதிப்பீடுகளினதும் மீதான செம்மையான பகுப்பாய்வொன்றைக் கொண்டிருத்தல் இலங்கையில் அரிசிச் சந்தையின் எதிர்கால முன்னேற்றத்தின் எதிர்வுகூறலுக்கு உதவும். அது எதிர்காலத்தில் விதை நெல் உற்பத்தித் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சரியான திசையைக் காட்டுவதற்கும் உதவும்.

**நோக்கங்கள்:**
வேறுபட்ட அரிசி இனங்கள் மீது பாவனையாளரின் வாங்கும் போக்கையும், விருப்புக்களையும் நிர்ணயிப்பதே இந்த ஆய்வின் முழுமையான நோக்கமாகும். திட்டவட்டமான நோக்கங்கள் வருமாறு:

- வேறுபட்ட அரிசி இனங்களுக்கு நுகர்வு பாங்கினையும், வாங்கும் நடத்தையையும் அடையாளங்காணுதல்
- மாவட்டரீதியாக பாவனையாளர் விருப்பின் நிர்ணயக் கூறுகளை மாதிரிப்படுத்தல்

### 3. சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பயனாளிகளின் வாழ்வாதார முன்னேற்றம்: மூலோபாயங்கள், விளைவுகள், தாக்கங்ககள் மற்றும் சவால்கள்

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி இந்திக எதிரிசிங்க - இணைப்பாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
இலங்கையில் வறுமையானது கிராமிய, நகரம் மற்றும் தோட்டம் என சகல மூன்று துறைகளிலும் பிரச்சனையொன்றாகும். எனினும், இது கிராமிய மற்றும் தோட்டச் சனத்தொகைகள் மீது மிகவும் ஆழமான நோக்கினைக் கொண்டுள்ளது. தேசிய கருத்து நோக்கிலிருந்து நகர வறுமையைப் பார்க்கையில், அது மிகவும் சாதகமான படமொன்றை வழங்குகின்றது. இலங்கையில் நகரத் துறையே மிகக் குறைந்த வறுமை வீதங்களைக் கொண்டுள்ளது. முற்றுமுழுதான எண்ணிக்கைகளில் சதவீதங்கள் குறைவானவை என்ற போதிலும், இலங்கையில் நகரங்களில்

நகர வறுமையானது ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சனையாகும். எனவே, நாட்டின் சகல மூன்று துறைகளிலும் வறுமை ஒரு பிரச்சனையாகும். வறுமையின் பிரச்சனையைக் கவனத்திற்கு எடுப்பதற்கும், அவர்களின் சமூக ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும், அவ்வாறாக வறுமையை ஒழிப்பதற்கும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு இளைஞரையும், பெண்களையும் மற்றும் அனுகூலமற்ற குழுக்களையும் ஒன்றுதிரட்டும் நோக்கத்துடன் 1995இல் *'சமுர்த்தி'* என்ற தேசிய வறுமைத் தணிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்குள், அவர்கள் 20 வருடங்களைக் கொண்ட தொழிற்பாடுகளை முடித்துக்கொள்கின்றார்கள். மூன்று அணுகுமுறைகளில் நிகழ்ச்சித்திட்டம் தொழிற்படுகின்றது. அவை பாதுகாப்பு வலை, கிராமிய அபிவிருத்தி மற்றும் நுண் நிதி மற்றும் வங்கியாடல் ஆகியனவாகும். பாதுகாப்பு வலை அணுகுமுறையின் கீழ் மானியங்கள் மற்றும் காப்புறுதித் திட்டம்/சமூக நலன்புரி அம்சங்கள் ஆகியன வருகின்றன. உட்கட்டமைப்பு, சமூக மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி அம்சங்கள் ஆகியனவற்றைக் கிராமிய அபிவிருத்தி அணுகுமுறை கொண்டுள்ள அதேவேளை, வைப்புச் சேகரிப்பு, நுண் கடன் மற்றும் சமூக அதிகாரமளிப்பு அம்சங்கள் ஆகியன நுண் நிதி மற்றும் வங்கியாடல் அணுகுமுறையின் கீழ் வருகின்றன.

இந்த ஆய்வு கிராமிய அபிவிருத்தி அணுகுமுறையின் வாழ்வாதார அபிவிருத்தி அம்சத்தின் மீது நோக்கினைக் கொண்டுள்ளது. வறியவர்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதில் அதன் பங்களிப்பினை அடையாளங்காண்பதற்கும் அத்துடன் இதன் மீது கணிசமானளவு தொகையிலான பணத்தை அரசாங்கம் செலவழிப்பதனால் எதிர்காலத்தில் நிகழ்ச்சித்திட்டத்தை சுருதி கூட்டுவதற்கு இந்த வியாபார முயற்சியாளர்களின் வளர்ச்சியினதும், முன்னேற்றத்தினதும் மீதான தடைக் காரணிகளையும், தடைகளையும் கண்டறிவதற்கும் இந்த தலையீட்டினை ஆய்வுசெய்வது மிகவும் முக்கியமானதாகும். மேலும், நிகழ்ச்சித்திட்டத்தின் இந்த அம்சம் தொடர்பில் கிட்டிய அண்மைக் காலத்தில் சுதந்திரமான மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. அதே வேளை, அமுல்படுத்துனர்களினாலும் ஆய்வை நடத்துவதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவர்களது வெற்றியைப் பாதித்த காரணிகளை அடையாளங்காணும் நோக்கத்துடனும் மற்றும் கிராமிய, தோட்டம் மற்றும் நகரம் என நாட்டில் சகல மூன்று துறைகள் தொடர்பில் வறுமையைத் தணிப்பதில் இந்தத் தலையீட்டின் பங்களிப்பினை அடையாளங்காணும் நோக்கத்துடனும், சமுர்த்தி வியாபார முயற்சியாளர்களின் தற்போதைய சூழ்நிலையை மதிப்பாய்வதே ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

## 4. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பருவமற்ற கால பெரிய வெங்காய உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்கால வாய்ப்புக்கள் மற்றும் தடைக்காரணிகள்

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி பி.ஜே.ஜயமினி சம்பிக - இணைப்பாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்:**
இலங்கையின் நாளாந்த உணவில் மிகவும் பிரசித்தமான உருசியூட்டல்களிலும், மரக்கறிகளிலும் ஒன்றாக பெரிய வெங்காயம் (*allium cepa*) விளங்குகின்றது. தற்போதைய சூழ்நிலையைப் பொறுத்தளவில், பருவமற்ற காலத்தில் (அதாவது ஜனவரியிலிருந்து மார்ச் வரை நீடிக்கின்ற பெரும் போகச் செய்கை) விதை நோக்கத்திற்கே பெரிய வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. எனவே, சிறு போகத்தின் உற்பத்தியினால் (மே முதல் ஓகஸ்ட் வரை நீடிக்கின்ற) தேசிய தேவைப்பாடு முழுதுமாக நிறைவேற்றப்படுகின்றது. எனினும், சிறு போகத்தின் போது கிட்டுகின்ற அறுவடையானது தேசியத் தேவைப்பாட்டின் 35%ஐ மட்டுமே நிறைவேற்ற போதுமானதாகும். எனினும், 2016இல் இந்தத் தொகையை 50%க்கு அதிகரிப்பதற்கு அரசாங்கம் உத்தேசத்தைக் கொண்டுள்ளது. குறிக்கப்பட்டுள்ள இலக்கினைச் சாதிப்பதற்கு சுமார் 55,000

மெ.தொன்னினால் உற்பத்தியை அதிகரிப்பது நாட்டுக்கு அவசியமாகும். இது 3,500 ஹெக். அதிகரிப்புக்கு சமமானதாகும் (பெரும் போகத்தின் உற்பத்தித்திறன் சிறு போகத்திற்கும் சமமானது என அனுமானித்து). ஒரு தொடரிலான வெளிக்களச் சோதனைகளை நடத்துவதன் மூலம், பாவனை நோக்கங்களுக்கு பருவமற்ற காலத்தில் (பெரும் போகம் - ஜனவரி முதல் மார்ச் வரை) பெரிய வெங்காயத்தைச் செய்கைபண்ணுவதற்கு மிகவும் பொருத்தமான அமைவிடங்களாக ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களை கமத்தொழில் திணைக்களம் அடையாளங்கண்டுள்ளது.

2014இல் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2,000 ஹெக். கொண்ட காணியில் செய்கையை ஆரம்பிப்பது என இலக்குப்படுத்தப்பட்ட போதிலும், சாதனையானது 2014 பெரும் போகத்தின் இறுதியில் சுமார் 350 ஹெக். என இலக்கினை விட மிகவும் குறைவானதாகும். அட்டவணைப்படுத்தப்பட்ட நேரச்சட்டத்தில் தேசிய இலக்கினைச் சாதிப்பதற்கு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் இலக்கினைச் சாதிப்பது மிகவும் முக்கியமானதாகும். எனவே, கமப்பொருளியல் பொருத்தத்தன்மை மட்டுமன்றி, ஆனால், சமூக-பொருளாதார ஏற்றுக்கொள்ளும்தன்மையும், நிதிசார் சாத்தியவளமும், நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைத்திருக்கும்தன்மையைச் சாதிப்பதற்கு சமவளவில் முக்கியமானதாகும். அவ்வாறாக, மாவட்டத்தினுள் பெரிய வெங்காயச் செய்கையின் மேலதிக விஸ்தரிப்புக்கான சமூக-பொருளாதாரத் தடைகளை அடையாளங்காண்பதற்கு இந்த ஆராய்ச்சி உத்தேசத்தினைக் கொண்டுள்ளது.

**பிரதான நோக்கம்:** ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் பருவமற்ற கால பெரிய வெங்காய உற்பத்தியின் எதிர்கால வாய்ப்புக்களையும், தடைக் காரணிகளையும் மதிப்பாய்தல்

**திட்டவட்டமான நோக்கங்கள்:**

1. நாட்டில் பெரிய வெங்காய உற்பத்தியை அதிகரிப்பதில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பருவமற்ற கால பெரிய வெங்காய உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் எந்தளவு தூரத்திற்கு வெற்றிகரமானது என்பதை மதிப்பிடுதல்.
2. பருவமற்ற கால பெரிய வெங்காய உற்பத்தியின் நிதிசார் செல்லுபடிதன்மையை மதிப்பாய்தல்.
3. பெரிய வெங்காய உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் காரணமாக, மாவட்டத்தின் காணி உபயோகப் பாங்கிலும், பயிர்செய்கைப் பாங்கிலும் உள்ள மாற்றங்களை எதிர்வுகூறுதல்.
4. பருவமற்ற கால பெரிய வெங்காயத்தின் மேலும் விஸ்தரிப்புக்கான தடைகளை ஆய்தல்.
5. நிகழ்ச்சித்திட்டத்தின் நீண்ட கால நிலைத்திருக்கும்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஆலோசனைகளைச் செய்தல்.

**நடைமுறையிலான முன்னேற்றம்**

பெரலிஹெல, வீரவில, அம்பலாந்தோட்டை, பண்டகிரிய, லுனாம, ஜோதா கண்டிய, மீகஹஜந்துர மேற்கு, மீகஹஜந்துர கிழக்கு மற்றும் வீரகெட்டிய ஆகிய தெரிவுசெய்யப்பட்ட கமநல சேவைகள் பிரிவுகளில் ஒன்றில் 2013 பெரும்போகத்தில் அல்லது 2014 பெரும்போகத்தில் பெரிய வெங்காயத்தின் செய்கையில் ஈடுபடுகின்றதும், ஈடுபடாததுமான கமக்காரர்களின் இரு வகுதிகளின் மாதிரி அளவீடொன்றின் ஊடாக ஆரம்பநிலை தரவு சேகரிக்கப்பட்டது. மாதிரியின் மொத்த எண்ணிக்கை 280 கமக்காரர்களாவர். தரவுப் பகுப்பாய்வு முடிக்கப்பட்டுள்ளதுடன், அறிக்கை எழுதுதல் நடந்து கொண்டிருக்கின்றது.

# மனித வளங்கள், நிறுவனரீதிசார் அபிவிருத்திப் பிரிவு

கமநல மற்றும் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஈடுபட்டுள்ள வயது வந்தவர்களின் அறிவையும், மனோநிலையையும் மற்றும் திறன்களையும் அபிவிருத்தி செய்வதும், அவ்வாறாக இலங்கையில் பயிர்ச்செய்கைச் சனசமூகத்தின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துவதுமே ஹெ.க.ஆ.ப.நிறுவகத்தினால் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கமாகும்.

ஹெ.க.ஆ.ப.நிறுவகத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் வாடிக்கையாளர்கள் பரந்த வீச்செல்லையொன்றைச் சார்ந்தவர்கள் என்பதுடன், இது இலங்கையில் கிராமியத் துறையிலும், பயிர்ச்செய்கைச் சனசமூகத்திலும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ள அரசாங்கத்தினதும், அரச சார்பற்ற தாபனங்களினதும் வெளிக்கள அலுவலர்களையும், உயர் அதிகாரிகளையும் உள்ளடக்குகின்றது.

மனித வளங்கள், நிறுவனரீதிசார் அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளன:

1. பயிர்ச்செய்கை சனசமூகத்தின் தேவைகளினதும் அத்துடன் தேசிய அபிவிருத்தித் நிகழ்ச்சித்திட்டத்தினதும் மீதான அடிப்படையில் பொதுவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் தயாரித்தல்
2. கமநலத் துறைக்குத் தொடர்பான பலதரப்பட்ட தாபனங்களின் வேண்டுகோளின் பேரில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல் அத்துடன் தயாரித்தல்.
3. வேறு வேண்டுகோள்விடுக்கும் தாபனங்களுக்கு பயிற்சி நிபுணத்துவத்தை வழங்குதல்.
4. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், செயல் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் நடத்துதல்

தேசிய மற்றும் சர்வதேசப் பயிற்சிகளுக்குப் புறம்பாக, வேறு தேசிய மற்றும் சர்வதேச தாபனங்களுடனான கூட்டுமுயற்சியுடன் கருத்தரங்குகளும், செயலமர்வுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒருங்கிணைக்கப்படுகின்றன.

2015ஆம் ஆண்டின் போது மனித வளங்கள், நிறுவனரீதிசார் அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வருமாறு:

### 01. கிராமிய சனசமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களின் திட்டமிடலுக்கும், முகாமைத்துவத்திற்கும் பங்கெடுப்புத் தொழில்நுட்பங்கள் (RRA, PRA, PCM) மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| | | |
|---|---|---|
| **பயிற்சிக் குழாம்:** | திரு.ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ | - ஆ.இ. /க.கொ.க.ம. (இணைப்பாளர் |
| | திரு.எஸ்.எம்.எ.சமரக்கோன் | - தலைவர் /ம.வ.நி.அ. |
| | திரு.பி.சி.ஜே. டி சில்வா | - சி.ஆ.உ./ம.வ.நி.அ. |
| | திரு.எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - சி.ஆ.உ./ம.வ.நி.அ. |
| | திரு.எஸ்.அபாசிங்க | - ஆ.உ./க.வ.மு.பி. |

துரித கிராமிய மதிப்பீடு (RRA) மற்றும் பங்கெடுப்பு கிராமிய மதிப்பீடு (PRA) ஆகியன சார்புரீதியில் புதிய தொழில்நுட்பங்களாகும். இவை அதிகளவு செம்மையானதும், புத்தம்புதியதுமான தரவைச் சேகரிப்பதற்கு பயன்படுத்தப்பட முடியும். இன்று விரைவான தன்மையொன்றிலும், குறைந்த ஆகுசெலவொன்றிலும் கிராமிய நிலைமைகள் மீதான தரவும், தகவலும், தரவு சேகரிப்புக்கு மட்டுமன்றி ஆனால் கருத்திட்ட அடையாளங்காணல், திட்டமிடல், அமுலாக்கல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்தல் ஆகியன உட்பட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பலதரப்பட்ட கட்டங்களை வெற்றிகரமாக முடிப்பதற்கும் பெருமளவு துறைகளில் பயன்படுத்தப்படுகின்றது.

அபிவிருத்திப் பணியில் மக்களின் பங்கெடுப்பினைப் பெறுவதற்காக பிரசித்தமான தொழில்நுட்பமொன்றாக PRA விளங்குகின்றது. இந்த உணர்வில், இது முதலாவதாக மக்களின் கருத்துக்களையும், மனோநிலைகளையும் மற்றும் விருப்பார்வங்களையும் அடையாளம் காண்பதற்கான முறையொன்றாகவும், இரண்டாவதாக அதிகாரமளிக்கும் மாதிரியாகவும் தொழிற்படுகின்றது. எனவே, RAA/PRA தொழில்நுட்பங்களின் பிரயோகம் மீதான போதியளவு அறிவின் ஏற்பாடானது கிராமிய சலுகைகள் பற்றி செம்மையான தகவலின் சேகரிப்புக்கள் தமது விருப்பார்வங்களுடன் பொருந்தக்கூடிய செயற்பாடுகளில் மக்களின் பங்கெடுப்பினைப் பெறுதல் மற்றும் பயனாளிகளை அதிகாரமளித்தல் போன்ற ஒரு தொகையிலான தகுதிகளை கிராமிய அபிவிருத்தியில் சம்பந்தப்பட்டுள்ள சகலருக்கும் வழங்கும்.

மக்களின் பங்கெடுப்பின் பெறுமதி பற்றி பங்கெடுப்பாளர்களைச் சௌகரியப்படுத்துவதே இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்நாட்டு மட்டத் திட்டமிடலையும், முகாமைத்துவத்தையும் பொறுத்தளவில் PRA/RRA தொழில்நுட்பங்களை மேற்கொள்வதற்கான அவர்களது அறிவையும், திறனையும், தகுதியையும் மேம்படுத்துவது ஊடாக சொல்லப்பட்ட குறிக்கோளைச் சாதிப்பதற்கு அவர்களுக்கு உதவுவதேயாகும்.

2015ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை ஒன்று என்பதுடன், 30 கமக்காரர் பயனாளிகள் பயிற்றுவிக்கப்பட்டனர். இயற்கையான மூலவள முகாமைத்துவ மாதிரிக் கிராமமொன்றின் மீது கொத்மலை பிரதேச செயலகத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு அறிவூட்டுவதும், முன்னோடிக் கருத்நிகழ்ச்சித்திட்டமொன்றாக பகுதியில் அமுல்படுத்தப்படும் இயற்கை மூலவள மாதிரிக் கிராமத்திற்கு சனசமூகச் செயல் திட்டத்தைத் தயாரிப்பதுமே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

## 02. சமூக ஒன்றுதிரட்டல் மீது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| | | |
|---|---|---|
| **பயிற்சிக் குழாம்:** | திரு.எஸ்.எம்.எ.சமரக்கோன் | - தலைவர் /ம.வ.நி.அ. (இணைப்பாளர்) |
| | திரு.பி.சி.ஜே. டி சில்வா | - சி.ஆ.உ./ம.வ.நி.அ. (உ.இணைப்பாளர்) |
| | திரு.எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - சி.ஆ.உ./ம.வ.நி.அ. |
| | திரு.எச்.ஜே.சி.ஜயசூரிய | - ஆ.உ./சூ.நீ.வ.மு. |

ஏதேனும் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் மக்களின் ஆகக்கூடுதலான பங்கெடுப்பினைப் பெறுமுகமாக, அபிவிருத்தி நடைமுறையில் தீவிரமாகப் பங்கெடுப்பதற்கான வாய்ப்பொன்று பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

மேலும் முன்னேற்றத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் மீது சனசமூகத்தின் புரிந்துணர்வை உயர்த்துவதே ஏதேனும் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இது அபிவிருத்தி நடைமுறையில் எந்த வழிகளில் பிரவேசிக்கலாம் என்பதைக் காட்டுகின்றது. அபிவிருத்தி ஊழியர்களின் அறிவுத் திறனினதும், போக்குகளினதும் மட்டம் மீது அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றி தங்கியுள்ளது.

எனினும், மக்களின் பாரம்பரியமான போக்குகள், திட்டமான போக்கிலான மாற்றத்தின் பற்றாக்குறை, தலைமைத்துவப் பிரச்சனைகள், தொடர்பாடல் பலவீனங்கள், முகாமைத்துவப் பிரச்சனைகள், தொழில்நுட்பவியல் பாய்வின் பலவீனங்கள் மற்றும் துரித கிராமிய அபிவிருத்தி நடைமுறையில் கிராமியப் பங்கெடுப்பில் பலவீனங்கள் ஆகியன கிராமிய அபிவிருத்தி நடைமுறையில் நேரடியாக செல்வாக்கு செலுத்துகின்றன.

சமூக ஊக்குவிப்பாளர்களாக கமநல மற்றும் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ள கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அலுவலர்களுக்கு இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் பிரதானமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சமூக ஒன்றுதிரட்டலிலும், பங்கெடுப்பிலான முன்னேற்றத்திலும் பங்கெடுப்பாளர்களின் கோட்பாட்டிலானதும், செயன்முறையிலானதுமான அறிவை மேம்படுத்துவதும், பலப்படுத்துவதுமே இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

2015ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை ஒன்றாகும். அனுராதபுரத்தில் நொச்சியாகம பிரதேசச் செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சைச் சேர்ந்த அலுவலர்களுக்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டதுடன், அண்ணளவாக 40 பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

### 03. ஆரோக்கியமான சந்ததிக்கு கமத்தொழில் மீது ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| | | |
|---|---|---|
| **பயிற்சிக் குழாம்:** திரு.எஸ்.எம்.எ.சமரக்கோன் | - | தலைவர் /ம.வ.நி.அ. (இணைப்பாளர்) |
| திரு.பி.சி.ஜே. டி சில்வா | - | சி.ஆ.உ./ம.வ.நி.அ. (உ.இணைப்பாளர்) |
| திரு.எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - | சி.ஆ.உ./ம.வ.நி.அ. |

தற்போது, கம இரசாயனத்தின் உயர்வான பாவனையின் காரணமாக விளைவிக்கப்பட்டுள்ள சுகாதார மற்றும் சூழல் பிரச்சனைகளுக்கு முகங்கொடுப்பதே இலங்கையின் கமத்தொழிலுக்கான பாரிய சவாலாகும். நாட்பட்ட சிறுநீரக நோயும், சில வேறு அடையாளங் காணப்படாத நோய்களும் நாட்டின் பெரும் பகுதிகளுக்கு துரிதமாக பரவுகின்றன. எனவே, சனசமூகத்தின் மத்தியில், சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும் உயர்வான போக்கொன்றுள்ளது.

அனுராதபுரம், பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு நாட்பட்ட சிறுநீரக நோய் பரவியுள்ளதுடன், கமநலச் சனசமூகத்தினுள் பலதரப்பட்ட சுகாதார, பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சனைகளை நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ஏற்படுத்தியுள்ளது.

நாட்பட்ட சிறுநீரக நோயின் சமூக-பொருளாதார தாக்கங்கள் மீது ஆராய்ச்சியொன்றை ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம் நடத்தியதுடன், அதன் தாக்கத்தைக் குறைந்தபட்சமாக்குவதற்கு பெருமளவு ஆலோசனைகளை முன்வைத்தது. கம இரசாயனப் பாவனை மீது கமக்காரர்களை அறிவூட்டுவது, மனித ஆரோக்கியம் மீது கம இரசாயனங்களின் தாக்கம், சிறுநீரக நோயின் முன்கூட்டிய குணங்குறிகள் மற்றும் முன்கூட்டிய கட்டங்களில் நோயை அடையாளங்காண்பதன் முக்கியத்துவம் ஆகியனவே கண்டுபிடிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சில உண்மைகளாகும்.

சிறுநீரக நோய் தொடர்பில் அதி மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் விசேட கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. எனவே, ஆரோக்கியமான சந்ததிகளை உருவாக்குவதற்கும், கமத்தொழிலில் இருந்து ஆகக்கூடுதலான நன்மைகளைப் பெறுவதற்கும் கமக்காரர்களையும், கமக்காரர் தாபனங்களையும் அறியச்செய்வது சமகாலத் தேவையொன்றாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இந்த விழிப்பியல் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவதற்கு கமக்காரர் தலைவர்களை அதிகாரமளிப்பதும், கமக்காரர் தாபனங்களைப் பலப்படுத்துவதும் அத்துடன் கமத்தொழிலிலிருந்து ஆகக்கூடுதலான நன்மைகளைப் பெறுவதுமே இந்த ஒரு நாள் விழிப்பியல் பயிற்சித் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

2015ஆம் ஆண்டின் போது, நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை 39 ஆகும். அனுராதபுரம், மற்றும் பொலன்னறுவை ஆகிய இரு மாவட்டங்களில் மட்டுமே இந்த நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

அனுராதபுரம் மாவட்டத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் விபரங்கள்

| கமநல அபிவிருத்தி நிலையம் | நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை | பங்கெடுப்பாளர்களின் எண். |
|---|---|---|
| பதவிய<br>கெப்பிட்டிகொலாவ<br>எதகட<br>புனாவ | 04 | 122<br>88<br>72<br>82 |
| மதவாச்சி<br>ரபவெவ<br>பறங்கிய வாடிய<br>ஹொறப்பத்தான<br>கபுகொல்லாவ | 05 | 122<br>58<br>74<br>60<br>104 |
| கஹட்டகஸ்திகிலிய<br>ரத்மல்கஹவெவ<br>தந்திரிமலை<br>விலாச்சிய | 04 | 59<br>89<br>63<br>50 |
| கம்பிரிகஸ்வெவ<br>ரணோரவ<br>நொச்சியாகம<br>இளையபபத்துவ | 04 | 115<br>40<br>35<br>58 |
| ராஜாங்கனை | 01 | 90 |
| மதுருகம<br>முறிய கடவ்த<br>பளுகஸ்வெவ<br>கெக்கிராவ | 04 | 75<br>110<br>88<br>85 |
| கொன்வெவ<br>கலன் பிதுநுவவ<br>திறப்பனை<br>மரதன்கடவல | 04 | 75<br>140<br>63<br>112 |
| **மொத்தம்** | **26** | **2,149** |

பொலன்னறுவை மாவட்டத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் விபரங்கள்

| கமநல அபிவிருத்தி நிலையம் | நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை | பங்கெடுப்பாளர்களின் எண். |
|---|---|---|
| பக்கமுன<br>ஹிங்குராகொட<br>செவகம<br>சிறிபுர<br>மன்னம்பிட்டிய | 05 | 80<br>56<br>103<br>65<br>40 |
| வலிக்கந்த<br>நவனகரய<br>கிரிதலே<br>புலஸ்திகம | 04 | 67<br>35<br>94<br>108 |
| அபகஸ்வெவ<br>கலமுன<br>மெதிரிகிறிய<br>மெதிரிகிறிய / அபகஸ்வெவ | 04 | 95<br>105<br>97<br>90 |
| **மொத்தம்** | **13** | **935** |

நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கமைப்புச் செயற்பாடுகளில் அனுராதபுரத்திலும், பொலன்னறுவையிலும் உள்ள கமநல அபிவிருத்தியின் மாவட்ட அலுவலகங்கள் முழுமையாக உதவியளித்தன. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கமத்தொழில் திணைக்களமும், மாகாண சுகாதாரத் திணைக்களமும் வள நபர்களை வழங்கியது.

## 04. கமநல மற்றும் கிராமிய அபிவிருத்திக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உபயோகம் மீது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

**பயிற்சிக் குழாம்:** திரு.எச்.எம்.ஜே.கே.ஹேரத் - சி.ஆ.உ./ம.வ.நி.அ. (இணைப்பாளர்)

துரித தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் 21ஆவதது நூற்றாண்டில் நாட்டின் அபிவிருத்தியின் முக்கிய காரணியாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட முடியும். இவ்வாறாக, நாடொன்றின் துரிதமான அபிவிருத்திக்கு அந்தத் துறையின் அபிவிருத்தி நேரடியாகப் பங்களிப்பதுடன், இன்று தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மேம்பாட்டின் காரணமாக உலகளாவிய கிராமமொன்றாக உலகம் விளங்குகின்றது. இந்தத் தொழில்நுட்பத்தின் உபயோகத்திலிருந்து பெருமளவு சமூக நன்மைகளை மக்களால் அனுபவிக்க முடியும். இன்டர்நெற்றின் ஆயிரக்கணக்கான இணையதள பக்கங்கள் ஊடாக அரசியல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு ஆகியன மீது உலகம் பூராவிலுமான செய்தியைப் பங்கிடுகின்றது. மேலும், கமத்தொழில், கைத்தொழில், சுகாதாரம், வியாபாரம் மற்றும் பொருளாதாரம் ஆகியன மீது இது செல்வாக்கு செலுத்துகின்றது. நாடொன்றின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் முக்கியமான வகிபங்கொன்றைத் தகவல் தொழில்நுட்பம் ஆற்றுகின்றது என்பதை இது காட்டுகின்றது.

எனவே, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வசதிப்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் அவசியமானதாகும். இவ்வாறாக, சமூகத்திற்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக அரசாங்கத்திற்கும், தனியார் துறைக்கும் இடையில் தோதான தொடர்புகளை அது தாபிக்க முடியும்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் இணைப்புடன் கிராமிய அபிவிருத்தியை உயர்த்துவதற்காக இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நிருவாகரீதியிலான பணிகளில் பரந்த தொழில்நுட்பவியல் பங்களிப்பினை வழங்குவதுடன், நாட்டின் பொதுவான அபிவிருத்தியை பலப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தியில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உபயோகம் மீது கோட்பாட்டிலானதும், செயன்முறையிலானதுமான அறிவை உயர்த்துவதே இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

2015ஆம் ஆண்டுக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை மூன்று (3) என்பதுடன், சுமார் 88 அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்

| இல. | பங்கெடுத்தோர் | நிகழ்ச்சித்திட்டத்தின் எண். | பங்கெடுத்தோரின் எண். |
|---|---|---|---|
| 01. | கன்னொருவவில் கமத்தொழில் பாடசாலையின் விரிவுரையாளர்கள் | 01 | 18 |
| 02. | மாத்தளையில் ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களத்தின் அலுவலர்கள் | 01 | 32 |
| 03. | புத்தளத்தில் மாவட்டத் திட்டமிடல் திணைக்களத்தின் அலுவலர்கள் | 01 | 28 |
| | மொத்தம் | 03 | 88 |

## 05. வேறு வேண்டுகோள் விடுத்த தாபனங்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி நிபுணத்துவம்

| இல. | அலுவலரின் பெயர் | ஆற்றப்பட்ட விரிவுரைகள் | விரிவுரைகளின் எண். | தாபனம் |
|---|---|---|---|---|
| 01. | எச்.எம்.ஜே.கே. ஹேரத் | கமத்தொழிலுக்கும், கிராமிய அபிவிருத்திக்கும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உபயோகம் | 02 | ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம், மாத்தளை |
| 02. | எச்.எம்.ஜே.கே. ஹேரத் | - அதே - | 03 | மாவட்ட சுகாதார திணைக்களம், கண்டி |
| 03. | பி.சி.ஜே. டீ சில்வா | சமகால கமத்தொழில் நாட்பட்ட சிறுநீரக நோயின் பிரச்சனைகள் மற்றும் சவால்கள் | 01 | கமக்காரர் தாபனம், பதவிய, அனுராதபுரம் |
| 04. | எஸ்.எம்.எ.சமரக் கோன் | அதிகாரமளிப்பு மற்றும் சமூக ஒன்றுதிரட்டல் | 01 | CIC, கொழும்பு |
| 05. | எச்.ஜே.சி.ஜயசூரிய | விஸ்தரிப்பு உத்தியோகத்தரின் வகிபங்கு | 01 | CIC, கொழும்பு |

## நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்

### 01. மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளி கமத்தொழில் குடித்தனங்களின் வருமானத்தை அதிகரிக்கும் ஆற்றலளவுகளைக் கண்டறிதல்

**பயிற்சிக் குழாம்:** திரு.எஸ்.எம்.எ.சமரக்கோன் - தலைவர் /ம.வ.நி.அ. (இணைப்பாளர்)

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லை:**
காலநிலை காரணமாகவும், வேறு கமப்பொருளியல் காரணமாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கமத்தொழில் உற்பத்தித்திறன் குறைவானதாகும் என்பது ஓர் உண்மையாகும். இது மாவட்டத்தின் சனத்தொகையின் பெரும்பான்மையானோரின் வருமானம் வறுமைக் கோட்டின் கீழ் சென்றுள்ளதை விளைவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் கமத்தொழில் குடித்தனங்களின் வருமான மூலங்களின் குறைந்தளவு பரவலாக்கமும் இதற்கு பங்களித்துள்ளதாகத் தோன்றுகின்றது. இலங்கையில் கிராமிய மற்றும் கமத்தொழில் பகுதிகளில் வறுமைக்கான பிரதான பங்களிக்கும் காரணமொன்றாக வருமான மூலங்களின் குறைந்தளவு பரவலாக்கம் குறிப்பிடப்பட முடியும். குறிப்பாக கொழும்பு மற்றும் கம்பஹா போன்ற அதிகளவு நகரமயமாக்கப்பட்டதும், குறைந்தளவு கமத்தொழிலைக் கொண்டதுமான மாவட்டங்களில் வறுமை குறைவாகவுள்ள அதேவேளை, மொனராகலை மற்றும் மட்டக்களப்பு போன்ற அதிகளவு கமத்தொழில் மாவட்டங்களில் வறுமை உயர்வானதாகும். அத்துடன் மறுதலையாக இதே மாவட்டங்களில் பிரதேச செயலகப் பிரிவுகளின் மத்தியில் இதே சூழ்நிலைகளை காண முடியும். ஊதாரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் முறையே 45.1% மற்றும் 37.7% என்றவாறு உயர்வான வறுமை நிலவுகின்ற அதேவேளை, காத்தான்குடி பிரதேசச் செயலாளர் பிரிவு உயர்ந்தளவில் நகரமயமாக்கப்பட்டுள்ளதுடன், 2012/13க்கான வறுமையின் மதிப்பிடப்பட்ட தலை கணக்கு காட்டி குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபர திணைக்களத்தினால் 5.26% என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டத்தில் நிலவிய மூன்று தசாப்தங்களைக் கொண்ட யுத்தமானது மாவட்டத்தில் சமூக-பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு வெளிப்படையாகவே ஊறுவிளைவித்துள்ளது. வாழ்வாதாரங்களைப் பொறுத்தளவில் வருமானத்தின் புதிய வழிவகைகள் தோன்றுவதற்கு யுத்தம் அனுமதிக்கவில்லை என்பதுடன், தமது பாரம்பரிய வாழ்வாதாரங்களிலிருந்து அல்லது தமது வாழ்வாதாரங்களை முன்னேற்றும் வழிவகைகளிலிருந்து மக்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் இழக்கச் செய்துள்ளது. இந்த உண்மை நிலையானது மாவட்டத்தில் குறைந்த வருமானத்தின் தற்போதைய நிலையிலும், வறுமையின் உயர் மட்டத்திலும் அதன் பங்கினைக் கொண்டுள்ளது.

கமத்தொழில் துறையிலும் யுத்தத்தின் தாக்கமானது குறிப்பிடத்தக்கவிதத்தில் வெளிப்படையானதாகும். கமக்காராக்ளுக்கு புதிய அறிவையும், தொழில்நுட்பத்தையும் பரப்புவதும் அநேகமாக நிலவவில்லை. யுத்த காலத்தின் போது திறன் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களிலிருந்து அல்லது விழிப்பியலின் பயிற்சியின் அல்லது வேறு வழிவகைகளின் ஊடாக புதிய அறிவை அடைவதற்கான வாய்ப்புக்களிலிருந்து அலுவலர்களையும் அத்துடன் கமக்காரர்களையும் இது இழக்கச்செய்துள்ளது. மாவட்டத்தில் கமநல சனசமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது தொடர்பில் கொள்கைவகுப்போருக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும் அவசியமான புதிய அறிவையும், தகவலையும் கொண்டுவரும் ஆராய்ச்சி ஆய்வுகளும் ஆண்டுக்கணக்கில் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன.

இவை எல்லாம் ஒன்றுசேர மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர்வான வறுமைக்கு பங்களிக்கும் குறைந்த வருமானமொன்றுக்கு கமத்தொழில் குடித்தனங்களை நேரடியாக அல்லது மறைமுகமாக விளைவித்துள்ளது. இதன் விளைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கமத்தொழில் குடித்தனங்களின் வருமானத்தைத் மேம்படுத்தும் திசையில் அவசரமான முன்னெடுப்புக்கள் எடுக்கப்படுவதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இது மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான சனத்தொகையின் சமூக மற்றும் பொருளாதாரச் சேமநலனுக்கு கணக்கு காட்டுகின்றது. கமத்தொழில் குடித்தனங்களின் வருமானத்தை மேம்படுத்துவதன் கருத்து என்னவெனில் மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான குடித்தனங்களின் வருமானத்தை

மேம்படுத்துவதாகும். மாவட்டத்தில் வறுமை என்ற உள்பிரச்சனை ஒன்றுக்காக தீர்வுகளை கண்டறிவதை நேரடியான குறிக்கோளைக் கொண்டுள்ள இத்தன்மையிலான ஆராய்ச்சியானது மிகவும் முக்கியமமானதாகும்.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரும்பான்யைமான சனத்தொகை வறுமையானது என்பதுடன், தமது வாழ்வாதாரத்திற்காக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளது. மாவட்டத்தில் வறுமையைக் குறைப்பதற்கான விளைவொன்றாக கமத்தொழில் குடித்தனங்களின் வருமானத்தை அதிகரிப்பது மிகவும் முக்கியமானதாகும். எனவே, மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்த வருமானத்திலான கமத்தொழில் குடித்தனங்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு என்ன ஆற்றலளவுகள் உள்ளன என்பதை இந்த ஆய்வு பார்க்கின்றது.

**பிரதான நோக்கம்**
மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளி கமத்தொழில் குடித்தனங்களின் குடித்தன வருமானத்தை அதிகரிக்கும் ஆற்றலளவுகளை கண்டறிவதே ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

**வேறு நோக்கங்கள்**

- குடித்தனச் செலவினத்தை மதிப்பிடுதல்
- குடித்தனங்களினால் செய்கை பண்ணப்படும் பிரதான பயிரின் உற்பத்தி ஆகுசெலவைக் கணக்கிடுதல்
- கமக்காரர்களினால் முகங்கொடுக்கப்படும் கமத்தொழில் தொடர்பான பிரச்சனைகளை கண்டறிதல்.
- மாற்று வருமான வழிவகைகளுக்கு குடித்தனங்களின் விருப்பினையும், ஆற்றலளவுகளையும் கண்டறிதல்
- பகுதியில் மாற்று வருமான வழிவகைகள் கிட்டுவதற்கான வாய்ப்புக்களைப் பார்த்தல்

தற்போதைய முன்னேற்றம்: தரவுப் பகுப்பாய்வு

## வேறு செயற்பாடுகள்

### வெளியீடுகள் மற்றும் சமர்ப்பணங்கள்

திரு.டபிள்யு.எ.என்.விஜேசூரிய, 2014 ஜுலை 5 அன்று பேராதனை பல்கலைக்கழகத்தில் சர்வதேச ஆராய்ச்சி அமர்வில் □அறுவடைக்கு முந்திய பண்ட சந்தைப்படுத்தலாக முன்னோக்கிய ஒப்பந்தங்கள்: இலங்கையில் சோளம் முன்னோக்கிய ஒப்பந்தங்களின் விடயம்□ என்ற தலைப்பிலான கட்டுரையை சமர்ப்பித்தார்.

திரு.டபிள்யு.எச்.எ.ஷாந்த, அயனமண்டல கமத்தொழில் மற்றும் அபிவிருத்தியின் வருடாந்த கருத்துக்கோர்வையில் இலங்கையின் மலை-சார்ந்த பிராந்தியத்தில் மலைநாட்டுப் பயிர்ச்செய்கை முறைமையின் கீழ் வருடாந்த மண் இழப்பின் வீதத்தை மதிப்பிடுதல் மீதான கட்டுரையொன்றை சமர்ப்பித்தார், 14 - 15 மார்ச் 2015 ஜப்பான், துஸ்குபா.

திரு. எச்.ஜே.சி. ஜயசூரிய, 2015 நொவம்பர் 19-20இல் இலங்கை, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட சர்வதேச மகாநாட்டில் இலங்கையில் மரக்கறி கமக்காரர்களின் மத்தியில் ஒன்றிணைந்த பூச்சி முகாமைத்துவத்தில் ஏற்றுக்கொள்ளுதலினதும், ஏற்றுக்கொள்ளுதலை பாதிக்கும் காரணிகளினதும் மீதான கட்டுரையொன்றைச் சமர்ப்பித்தார்.

### 2. குழுவொன்றில் சேவையாற்றுதல்

திருமதி ஜி.ஜி.டீ எல்.டபிள்யு.சமரசிங்க, 2015இல் இலங்கை நீர் பங்காண்மைக்கான முன்னெடுத்தல் குழு உறுப்பினராகச் சேவையாற்றினார்.

திருமதி ஜி.ஜி.டீ எல்.டபிள்யு.சமரசிங்க, சூழல் அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட உத்தேசத்திலான துறைகள் மீது உத்தேசத்திலான தேசியரீதியில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புக்களுக்கான வரைவுக்கான உசாவுகைக் கூட்டத்தில் பங்கெடுத்தார்.

திரு. டபிள்யு.எச்.எ.ஷாந்த, இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆலோசனை குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட 2013க்கும், 2014க்குமான கமத்தொழில் துறையில் ஜனாதிபதி விருதுக்கான கண்டுபிடிப்புக்களின் மதிப்பாய்வுக்கான ஜுரியின் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றினார்.

திரு. டபிள்யு.எச்.எ.ஷாந்த, இலங்கைக் கண்டுபிடிப்பாளர் ஆலொசனைக் குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட 2013க்கும் 2014க்குமான உணவுத் தொழில்நுட்பத் துறையில் ஜனாதிபதி விருதுக்கான கண்டுபிடிப்புக்களின் மதிப்பாய்வுக்கான ஜுரியின் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றினார்.

திரு. எச்.ஜே.சி.ஜயசூரிய, பேரழிவு முகாமைத்துவ அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலங்கைக்கான வரட்சி அபாயக் குறைப்பு மூலோபாயங்களினதும், நிகழ்ச்சித்திட்டத்தினதும் முன்னேற்றத்திற்கான தொழில்நுட்பச் செயல் குழுக் கூட்டத்தில் பங்கெடுத்தார்.

### 3. விசேட அறிக்கைகள்

திரு.டபிள்யு.எ.என்.விஜேசூரிய, □2014 ஜனவரி காலத்தின் போது அசாதாரண அரிசி விலை அதிகரிப்பினை பாதித்த அடிப்படைக் காரணிகள்□ என்ற தலைப்பில் கௌரவ கமத்தொழில் அமைச்சருக்கு அறிக்கையொன்றைத் தயாரித்தார்.

திரு.டபிள்யு.எ.என்.விஜேசூரிய, 2014 டிசம்பரில் □அரிசி சந்தையின் தற்போதைய சூழ்நிலை□ என்ற தலைப்பில் கமத்தொழில் அமைச்சுக்கு அறிக்கையொன்றைத் தயாரித்தார்.

## 4. பயிற்சி

திரு.எஸ்.அபாசிங்க, 2015 செப்ரெம்பர் 21 முதல் 23 வரை கொத்மலையில் கமத்தொழில் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பங்கெடுப்பிலான கிராமிய மதிப்பீட்டுத் நிகழ்ச்சித்திட்டத்திற்கு வள நபர் ஒருவராகப் பங்களித்தார்.

திரு.எஸ்.அபாசிங்க, 2015 நொவம்பரில் ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களத்தில் நடைபெற்ற இஞ்சி மற்றும் மஞ்சள் உற்பத்தியின் தற்போதைய சூழ்நிலையும், பிரச்சனைகளும் மீதான கொள்கைக் கலந்துரையாடலுக்குப் பங்களித்தார்.

திருமதி ஜி.ஜி.டீ எல்.டபிள்யு. சமரசிங்க, செல்வி எம்.ரி.பத்மாஜனி மற்றும் திரு.எச்.ஜே.சி. ஜயசூரிய ஆகியோர் கமத்தொழில் பொருளியலில் ஹெ.க.ஆ.ப.நிறுவகத்தினாலும், கொழும்பு பல்கலைக்கழகத்தினாலுமான உத்தேசமான பட்டத் திட்டத்திற்கான பயிற்சிநெறி மொடியூல்களைத் தயாரித்தனர்.

திரு.எச்.ஜே.சி.ஜயசூரிய, நொச்சியாகம பிரதேசச் செயலகப் பகுதியில் அடிமட்ட அலுவலர்களுக்கான சமூக ஒன்றுதிரட்டல் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் வள நபர் ஒருவராகச் சேவையாற்றினார்.

திரு.டபிள்யு.எ.என்.விஜேசூரிய, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூன்றாவது வருட பீ.எ. (பொருளியல்) மாணவர்களுக்காக □புத்தாயிரமாமாண்டு அபிவிருத்திக் குறிக்கோள்கள்□ மீதான விரிவுரையொன்றை ஆற்றினார்.

திரு.டபிள்யு.எ.என்.விஜேசூரிய, சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஜூனில் வட மேல் மாகாணத்தின் கமத்தொழில் அலுவலர்களுக்கும், கமத்தொழில் போதனாசிரியர்களுக்கும் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட வெளிக்கள அலுவலர்களுக்கும் □இலங்கையில் நெல்/அரிசி சந்தையின் ஒழுங்கமைப்பும், தொழிற்பாடும்□ மீது விரிவுரையொன்றை ஆற்றினார்.

## தரவு, தகவல் முகாமைத்துவ (த.த.மு.) அலகு

இந்தப் பிரிவில் இரண்டு அலகுகள் அடங்குகின்றன. விவசாயத் தரவுத் தள அலகு, தரவுகள் படிமுறைப்படுத்தல் முதலிய அலகுகளாகும். தரவுத் தளம் விவசாயத் துறையில் அபிவிருத்திற்கான கொளகை ஆக்கல், சமூக விஞ்ஞான ஆராய்ச்சித் நிகழ்ச்சித்திட்டமிடல் ஆகியவற்றுக்கான ஒரு வசதிகள் தளமாக அமைந்துள்ளது. தரவுத் தளத்தின் தாபிப்புக்கான முக்கிய அடிப்படைக் கோட்பாடுகள் பின்வருமாறு:

1 ஏற்கனவே காணப்படும் தரமான தரவுகளுக்கான உடனடியான சமவாய்ப்புப் பிரவேசத்திற்கு வசதியளித்தல். அத்தகைய தரவுத் தளங்களை மைய ரிதியில் அமையச்செய்தல், அத்தகைய சேவைகளை தானியக்கப்படுத்துதல்.

2. தகவல்களிலும் தேவையான புதிய தகவல்களிலும் நிலவும் இடைவெளிகளைக் கண்டறிவதற்கும் புதிய தரவுகள் உருவாக்கத்தை செயலூக்கப்படுத்துவதற்கும் உரிய தரமான தரவுகள் தொடர்பில் ஒரு ஒருங்கிணைப்பு முகவராண்மையாக தொழிற்படுதல்.

3. விசேட மதிப்பாய்வுகள் மற்றும் ஆய்வுகள் என்பவற்றினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களை அந்தத் தகவல்களின் சேகரிப்பு நோக்கத்திற்கு மேலதிகமாக பல நோக்கங்களின் நிமித்தம் அவற்றை பயன்படுத்துதல். ஆதலால் இன்றும் மற்றும் எதிர்காலத்திலும் அத்தகைய தகவல்களை சமூக விஞ்ஞானிகளுக்கான பெறுமதிமிக்க வளங்களாக ஆக்குதல். தரவுகளின் பண்புகள் தொடர்பான தகவல்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கும் போதும் தரவுகளின் பெறுமதி அதிகரிக்கப்படுதல்.

ஆராய்ச்சியாளர்கள் பல தரப்பட்ட தகவல் மூலங்களில் இருந்து தகவல்களைச் சேரிக்கக்கூடிய ஆராய்ச்சி சூழல் அடிப்படையிலான ஒரு சமூக விஞ்ஞான விடயத்தினுள் தரவுத் தளம் பொருத்தமான விதத்தில் அமைக்கப்படுதல் மற்றும் தமது சொந்த ஆய்வுகளில் இருந்து தகவல்களை உருவாக்கிக் கொள்ளல். குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களம், விவசாயத் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் மத்திய வங்கி என்பன தற்பொழுது தகவல்கள் சேகரிக்கப்படுகின்ற முக்கிய தகவல் மூலங்களாக விளங்குகின்றன. தரவுத் தளத்துடன் சம்பந்தமான செயற்பாடுகள் பின்வரும் ஆறு வகுதிகளின் கீழ் உள்ளடங்கியிருக்கும்.

i. தரவு சேகரித்தல்
ii. குறியீடு இடுதல்
iii. உறுதிப்படுத்தல்
iv. களஞ்சியப்படுத்தல்
v. தேவையான போது மீளப்பெற்றுக்கொள்ளல்
vi. பகுப்பாய்வுசெய்தல்

அந்தந்த நிறுவனங்களினால் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள், நூல்கள் மற்றும் அவற்றின் இணையத்தளங்கள் போன்ற மேற்குறித்த தகவல் மூலங்களிலிருந்து தகவல் சேகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. உணவு நுகர்வுப் பொருட்களின் விலைகள் தொடர்பான தரவுகள் ஹெ.க.ஆ.ப.நி. உணவுக் கொள்கை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவிலிருந்து சேகரிக்கப்படுகின்றது.

ஆண்டின் போது கணனி அடிப்படையிலான தகவல் முறைமையானது சூழலையும் சிறந்த செயற்றிறனையும் நிருவகிப்பதற்காக மேலும் அமுல்படுத்தப்பட்டது. கமநல தரவின் நியம அலகுகளின் மாற்றலும் சரிபார்த்தல்களும் சமமான தட்டை அமைப்பொன்றுக்கு கொண்டுவருவதை அலகுகள் இயலச் செய்வதற்காக தெரிவுசெய்த பண்டங்களுக்காக செய்யப்பட்டன. கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தின் செயற்றிறனை அதிகரிப்பதற்காக காட்டிகளின் மீள்தோற்றுவிப்புடன் சேர்த்து தரவு சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட தரவு கிடைக்கச்செய்வதை உறுதிப்படுத்துவதற்காக ஆண்டு இறுதியிலான பாதுகாப்புக்கான சேமிப்பு நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. ஆண்டின் போது பின்வரும் காட்டிகள் புதுப்பிக்கப்பட்டன.

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 05 ஆம் இலக்க ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2016 மே 26 ஆந் திகதி நிறுவகத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் விடுமுறை தின சம்பளங்களை உரித்தாக்கி 2006 சனவரி முதல் 2011 திசெம்பர் வரை ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பினை கணிப்பீடு செய்யும்போது ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 10 சதவீத பெறுமானமான ரூபா 5,134,370 உரிய ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டிராததுடன் அது நிறுவகத்தின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டினுள் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் என்பன பிரதிபலிக்கும் வகையில் செயற்பாடுகளை இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிராததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்காக காசாக பெறப்பட்ட முதலீட்டு வருமானம் ரூபா 258,365 ஆக இருந்ததுடன், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 435,112 தொகையான காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நேரில் முறையில் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும்போது ஆண்டின் பற்றாக்குறைக்கு சீராக்கப்படும் கணக்குப் பதிவுகளின் கீழ் முதலீட்டு வருமானம் ரூபா 435,112 கழிக்கப்பட வேண்டுமெனினும் அது கூட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிலிருந்து செயற்படு நிலையிலுள்ள உயிரியல் வாயு கூறின் நிர்மாணத்திற்காக 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ரூபா 1,020,200 மற்றும் ரூபா 225,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கழிவுப் பொருள் கொள்கலனொன்றின் செலவினத்தை மூலதனமாக்குவதற்குப் பதிலாக ஆண்டின் செலவினமாக கருதப்பட்டிருந்தது. மூலதனத் தன்மையிலான செலவினமொன்றான இந்த சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தன.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதியிலான நுகர்வுப் பொருட்களின் மீதி ரூபா 1,755,811 ஆக இருந்ததெனினும், அதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலையின் பிரகாரம் ரூபா 1,681,024 ஆக இருந்தமையால் ரூபா 74,787 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத் தொகை முறையே ரூபா 20,005,156 மற்றும் ரூபா 947,652 ஆக இருந்ததுடன், அம்மீதிகளைத் தீர்ப்பதற்குப் பயனுள்ள வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 15,840,332 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 10,364,363 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,475,969 நலிவு ஏற்பட்டிருந்தது. அரச மானியங்கள் ரூபா 27,761,167 இனால் அதிகரித்தமையும், சம்பளமும் படிகளும் ரூபா 36,240,444 இனால் அதிகரித்தமையும், பெறுமானத் தேய்வு ரூபா 2,713,095 இனால் அதிகரித்தமையும், பயிற்சிச் செலவினங்கள் ரூபா 5,829,137 இனால் குறைவடைந்தமையும் நிதி நிலைமையின் நலிவுக்கு பிரதான தாக்கமாகின. மீளாய்வாண்டினதும் முன்னைய நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது நிதி விளைவில் பற்றாக்குறை நிலவிய போதிலும், ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின்

தேய்மானத்தைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 79,477,329 ஆக இருந்த பங்களிப்பு மீளாய்வாண்டில் ரூபா 14,913,921 வரை 79 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிறுவகத்தை தாபித்தமைக்கான பிரதான நோக்கங்கள் பின்வருமாறு,

(i) கமநல ஆராய்ச்சிகளை போசித்தல், ஒத்துழைப்பு வழங்குதல், பலப்படுத்தல் மற்றும் கட்டியெழுப்புதல்.

(ii) அரச திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்படும் விவசாய ஆராய்ச்சிகளை ஒருங்கிணைத்தல்.

(iii) விவசாய அபிவிருத்திக்குத் தாக்கம் விளைவிக்கும் நிறுவன ரீதியான விடயங்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளல் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளல்.

(iv) விவசாய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பொருளாதார ரீதியாக பயனுள்ள விதத்தில் நிலத்தினைப் பயன்படுத்தல் தொடர்பில் விசாரணை செய்தல், ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் கற்கைகளை மேற்கொள்ளல்.

(v) விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பில் சமூக பொருளியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

(vi) இலங்கை அல்லது வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அல்லது நிறுவகத்தினூடாக மாத்திரம் விவசாய ஆராய்ச்சிகளுடன் தொடர்புடைய பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்தலும் டிப்ளோமா, பட்டப்படிப்பு, வெகுமதி மற்றும் உயர் விருதுகளை வழங்குதல்.

(vii) உள்நாட்டு, வலய மற்றும் சர்வதேச மட்டத்திலான கருத்தரங்குகள், கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகளை நடாத்துவதற்கு அனுசரணை வழங்குதல்.

(viii) ஆசிய நாடுகளின் ஒத்துழைப்பின் அடிப்படையில் வலய தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு கமநல நடவடிக்கைகள் கட்டமைப்பினுள் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளல் மற்றும் கமநல நடவடிக்கைகளுக்குரிய பிரச்சினைகள் தொடர்பில் தகவல் சேகரித்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு நிலையமாக செயற்படல்.

(ix) இலங்கை தொடர்பில் விசேட அவதானம் மற்றும் பொதுவாக ஏனைய ஆசிய நாடுகளின் விவசாய அபிவிருத்திக்கும் நவீனமயப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்துதல்.

(அ) 1972 ஆம் ஆண்டிலிருந்து நிறுவகம் அமுலிலுள்ள போதிலும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) வலய மற்றும் சர்வதேச மட்டத்திலான கருத்தரங்கு, கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் போன்றவற்றை நடாத்துவதற்கு அனுசரணை வழங்குதல்.

(ii) ஆசிய நாடுகளின் ஒத்துழைப்பின் அடிப்படையில் வலய தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு கமநல நடவடிக்கைகள் கட்டமைப்பினுள் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளல் மற்றும் கமநல நடவடிக்கைகளுக்குரிய பிரச்சினைகள் தொடர்பில் தகவல் சேகரித்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு நிலையமாக செயற்படல்.

(iii) ஏனைய ஆசிய நாடுகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல் புதுப்பித்தல் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்துதல்.

(ஆ) நிறுவகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நடைமுறைப்படுத்தும்போது குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டதுடன், 2010, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ரூபா 11,571,000 செலவிடப்பட்டிருந்த 21 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் அறிக்கைகள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியளவிலும் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. கமநலத்துறை தொடர்பான ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கை தாமதமடைந்தமையின் அடிப்படையில் ஆராய்ச்சிகளிலிருந்து கிடைக்கும் விளைவுகளை உரிய துறை பெற முடியாமையால் ஆராய்ச்சிகள் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டினுள் 14 ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியளவில் அவற்றுள் 12 ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த செயற்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 7,672,000 ஆக இருந்ததுடன் ரூபா 7,297,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகத்தின் அடிப்படைப் பணிகளாகிய ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவித்தல், ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவித்தல் குழுவின் பரிந்துரைகள், முன்மொழிவுகள் மற்றும் மதிப்பாய்வுகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டின் குழுக்கூட்டமொன்றும் 2015 ஆம் ஆண்டில் 02 குழுக்கூட்டங்களும் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தமையால் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழுவின் பிரதிநிதித்துவத்தில் பங்களிப்பினை ஏற்படுத்த தவறியிருந்தது.

(உ) நிறுவகத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் திட்டமிடப்பட்டிருந்த 80 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 43 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வெளித்தரப்பினர் குடியேறியுள்ளதுடன் மீளாய்வாண்டினுள் தொலைபேசி மற்றும் நீர் கட்டணங்களுக்காக நிறுவகத்தினால் ரூபா 73,543 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிதி ஒழுங்கீனங்கள் காரணமாக உதவிப் பதிவாளர் (நிர்வாகம்) வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள போதிலும் அவர் மீள சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் நடாத்தப்பட்ட பிரதான விசாரணைகள் இரத்துச் செய்யப்பட்டு புதிதாக ஆரம்ப விசாரணையொன்றினை மேற்கொள்ளுமாறு கட்டுப்பாட்டுச் சபையினால் கட்டளையிடப்பட்டிருந்தது. நிதி மோசடிக்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஒழுக்காற்றுப் பரிசோதனையொன்று நடாத்தப்படாமல் மீள சேவையிலமர்த்துதல் தாபன விதிக்கோவையின் தொகுதி 2 இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31 ஆம் பிரிவுக்கு முரணாவதுடன், பரிசீலனை நடவடிக்கைகளை தடைகளின்றி நடாத்துவதற்கு இயலாதுள்ள நிலைமையொன்றும் அதன்மூலம் உருவாவது அவதானிக்கப்பட்டது.

(இ) வங்கி நடைமுறைக் கணக்கொன்றிலிருந்த ரூபா 12,499,876 மீளாய்வாண்டு முழுவதும் முதலீடு செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனமொன்று 2013 ஆம் ஆண்டில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்காக ரூபா 116,628 செலுத்தப்பட்டிருந்ததெனினும், 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியளவிலும் வாகனம் பழுதுபார்க்கப்பட்டு நிறுவகத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(உ) நிறுவகத்திற்குச் சொந்தமான விடுதியின் அறைக் கட்டணங்களை அறவிடாது வெளித் தரப்பினருக்கு வழங்கியமையின் காரணத்தால் மீளாய்வாண்டினுள் நிறுவகத்திற்கு ரூபா 1,287,655 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.

## 4.3 மனதவள முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) நிறுவகத்தின் பதிவாளர் பதவி 2011 சனவரி 03 ஆந் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2016 ஏப்ரல் 22 ஆந் திகதி வரை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) நிறுவகத்திற்கு சிரேஷ்ட புள்ளிவிபரவியல் உத்தியோகத்தரொருவர் மற்றும் ஐந்து ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக 2014 யூலை 20 ஆந் திகதி ரூபா 247,296 செலவிடப்பட்டு புதினப் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், புள்ளி விபரவியல் உத்தியோகத்தர் பதவிக்கு 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு விண்ணப்பதாரரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தாரெனினும், 2016 ஏப்ரல் 20 ஆந் திகதியளவிலும் இந்த ஆட்சேர்ப்பு இடம் பெற்றிருக்கவில்லை. ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையொன்றினை நடாத்துவதற்கு 2016 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக்கட்டுப்பாடு

ஆண்டிறுதியில் உள்ளவாறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2015 திசெம்பர் 05 ஆந் திகதி பாதீடு திருத்தப்பட்டுள்ளமையால் பாதீட்டினை நிறுவகத்தின் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தல் கைவிடப்பட்டிருந்தது.

### 5.2 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் கொள்வனத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன், தயாரிக்கப்பட்டிருந்த திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவுமில்லை.

(ஆ) தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனிகளைச் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு திட்டத்தில் நிதியேற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(இ) ரூபா 1,726,780 பெறுமதியான 16 கணனிகளைக் கொள்வனவு செய்யும் போதும் ரூபா 2,152,441 தொகையான கட்டிட மேம்படுத்தல் ஒப்பந்தங்களை கையளிக்கும் போதும் விலைமனுக்களைத் திறப்பதற்கான குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 1,726,780 தொகைக்கான கணனிகளைக் கொள்வனவு செய்யும்போது தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழுவினால் ஆகக் குறைந்த கூறு விலையினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்தின் உற்பத்திகளை தேசிய ரீதியில் சேகரித்தல் மற்றும் வழங்குனர் சமர்ப்பித்த பொருட்களின் தொடர்பாகவும் கடந்த 6 ஆண்டு விற்பனை நன்மதிப்பு அனுபவத்தினை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகளை முன்வைக்காத காரணத்தாலும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு புறக்கணித்த நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவுகள் இடம்பெற்றிருந்தன. இந்த கணனிகளில் குறைபாடுகள் உள்ளமையும் சேவை நிபந்தனைகளுக்கமைய குறிப்பிட்ட காலப்பகுதியினுள்

சேவை நடவடிக்கைகள் இடம்பெறாமையும் கணனிகள் வழங்கப்பட்ட பிரிவுகளால் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(உ) தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு, கொள்வனவுக் குழு மற்றும் கேள்வி மனுக்களைத் திறத்தல் போன்றவற்றுக்காக ஒரேயொரு உத்தியோகத்தர் தொடர்புபட்டிருந்தார்.

**5.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக உணவுச் செயற்திட்டத்குரிய வாகனமொன்று 2011 ஆம் ஆண்டு நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், வாகனத்தின் சட்டரீதியான உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பின் படிப்பைப் பயின்ற உடன்படிக்கை மீறிய 10 புலமைப்பரிசில் பெறுனர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன், அதில் 06 புலமைப்பரிசில் பெறுனர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,539,799 தொகையை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுவதாக முகாமைத்துவத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**5.4 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.51 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகக் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்பு, சுருக்கமாக |
|---|---|---|
| (அ) | நிதி நிர்வாகம் | கடனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | ஆராய்ச்சிச் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய கட்டுப்பாடு | திட்டமிடப்பட்ட பிரகாரம் நடைமுறைப்படுத்தாமை மற்றும் அறிக்கைகளை வெளியிடுவதில் தாமதம் நிலவுகின்றமை. |
| (இ) | சொத்துக்கள் நிர்வாகம் | நிதியைப் பயனுள்ள விதத்தில் நோக்கங்களை அடைவதற்காக பயன்படுத்தாமையும் வாகன முகாமைத்துவத்தில் நலிவுகள் காணப்படுகின்றமையும். |
| (ஈ) | புதவியணியினர் நிருவாகம் | நீண்ட கால பதிற் கடமை நியமனத்திற்காக நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிக்காமை, நியமனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஊழியர்களை ஆரம்ப ஒழுக்காற்று விசாரணை இல்லாது மீளச் சேவையிலமர்த்துதல். |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

Fin/Aud/Qry/16 **AGL/D/HARTI/1/15/04** 2016.10.04

கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
இலக்கம் 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல.

**2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியினால் வெளியிடப்படும் கணக்காய்வு அறிக்கை**

**2016.07.30 ஆம் திகதிய மேற்குறித்த அறிக்கை தொடர்பான விளக்கங்கள் இத்துடன் முன்வைக்கப்படுகின்றன.**

**2. நிதிக் கூற்று**

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீது கருத்துக்களை வெளிப்படுத்துதல்**

**2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்**

(a) ஊழியர்களின் சேமலாப நிதியைச் செலுத்தும் போது எமது நிறுவகம் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து 10% வீதத்தைக் கழித்துச் செலுத்துகின்ற அதே நேரம், நிறுவகம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15% வீதத்தைப் பங்களிப்புச் செய்கின்றது. ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 10 - (1) ஆம் இலக்க ஏற்பாட்டின் பிரகாரம், ஊழியர் அவரது மொத்த ஊதியத்திலிருந்து 10% வீதத்தை ஊழியர் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். 10- (2) ஆம் இலக்க ஏற்பாட்டின் பிரகாரம், தொழில்தருநர் தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதி நாளில் அல்லது அதற்கு முன்னர் அந்த மாத காலப் பகுதியில் குறித்த ஊதியத்திலிருந்து வரும் ஊழியரின் அத்தகைய மொத்த ஊதியத்தின் 15% வீதத்திற்கு சமனான ஒரு தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தக் கடமைப்பட்டவராக இருப்பார்.

தொழில்தருநர் தனது ஊழியர்களுக்கு சம்பளங்களைச் செலுத்துகின்ற போது செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையைக் கழித்துச் செலுத்த வேண்டும்.

தொழில்தருநர் உரிய படிவங்களைப் பூரணப்படுத்தி, ஊழியர் சார்பாக அவர் செலுத்த மொத்தப் பங்களிப்பு தொகையை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டும்.

தொழில்தருநர் ஊழியரின் சம்பளத்திலிருந்து குறித்த பங்களிப்புத் தொகையைக் கழிக்கவில்லையென்றால், குறித்த சட்டம் அந்த ஊழியரின் சம்பளத்திலிருந்து கழிக்கக் கூடிய சாத்தியம் பற்றிக் குறிப்பிடவில்லை.

ஆகையால், தொழில்தருநர் நிதியத்திற்கான மொத்தப் பங்களிப்புத் தொகையையும் உடனடியாகச் செலுத்த வேண்டும். தொழில்தருநர் அவர் ஊழியர் சார்பாக செலுத்தும் மொத்தப் பங்களிப்புத் தொகையையும் அவரே பெறுப்பேற்க வேண்டும். ஆகையால், எமது நிறுவகம் நிதியத்திற்கான மொத்தப் பங்களிப்புத் தொகையும் செலுத்தியுள்ளது. நிதியத்திற்கான குறித்த பங்களிப்புத் தொகை 2013 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து ஊழியர்களின் சம்பளத்திலிருந்து உரிய முறையில் கழித்து செலுத்தப்பட்டு வருகின்றது. தொழிலாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட சட்ட ஆலோசகரிடமிருந்து இது தொடர்பான விளக்கங்களைக் கோருகின்ற எழுத்திலான கோரிக்கையொன்று அனுப்பி வைக்கப் பட்டடுள்ளது. இது வரைக்கும் எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. இது தொடர்பில் மேலும் ஒரு நினைவூட்டல் கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(b) (i) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

காசு வடிவில் கிடைக்கும் முதலீட்டு வருமானத்தை மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்குமாறு குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
எதிர்வரும் ஆண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(c)

- உயிர் எரிவாயு அலகானது ஒரு முன்னோடிக் கருத்திட்டமாகத் தாபிக்கப்பட்டது. சமையலறையிலிருந்து வரும் கழிவைப் பயன்படுத்தி உயிர் எரிவாயுவை உற்பத்தி செய்வதும், நிறுவகத்தின் பாகத்தினது/சமையலறையினது மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அந்த எரிவாயுவைப் பயன்படுத்தும் சாத்தியத்தைக் கண்டறிவதும் இந்த அலகு தாபிக்கப்பட்டதன் முக்கிய நோக்கமாக விளங்குகின்றது.
- இது ஒரு ஆராய்ச்சிக் கருத்திட்டம் (R-404) எனப் பெயரிடப்பட்டது. காலத்திற்குக் காலம் மேம்படுத்தப்பட்டதால் இந்தச் சொத்து மூலதனமாக்கப்படவில்லை. இது ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மட்டத்தில் காணப்பட்டது.
- தற்பொழுது இது இயக்க மட்டத்தில் காணப்படுவதால், கணக்காய்வாளர் அதிபதி முன்வைத்த அவதானிப்புகளுக்கு இணங்க, 2016 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கப்படுகின்ற போது இந்தச் சொத்தை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- மருத்துவ அதிகாரிகளின் அலுவலகம், சமையலறைக்கு அருகிலுள்ள குப்பை கூழங்கள் அறையை 21 நாட்களுக்குள் அகற்றுமாறு 2015.06.16 ஆம் திகதி எழுத்தில் அறிவித்திருந்தது. குப்பை கூழங்கள் சம்பந்தமான பிரச்சினையைக் கையாளும் பொருட்டு, இந்தக் கழிவுக் கொள்கலன் 2016.07.22 ஆம் திகதி 249,700 ரூபா

விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது குறித்த ஆண்டின் செலவாகக் கருதப் பட்டுள்ளது. இது ஒரு மூலதனச் செலவினம் என்பதால் 2016 ஆம் ஆண்டில் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.2. விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

நுகர்வுப் பொருட்கள்:
முன்னாள் களஞ்சியக் காப்பாளர் திரு என்.எஸ். விக்ரமஆராச்சியின் பதவி காலத்தில் அறிக்கையிடப்பட்டிருந்த களஞ்சியப் பொருட்களில் காணப்பட்ட வித்தியாசமே இந்த வித்தியாசத்திற்கு முக்கிய காரணமாகும். அவரது நிதிக் கூற்றில் உள்ளடக்கியதன் மூலம் இந்த வித்தியாசம் அவரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது.

### 2.3 கிடைக்கவும் செலுத்தவும் வேண்டிய கணக்குகள்

மொத்தக் கடன் பற்றுக்களிலிருந்து வரும் புலமைப்பரிசில் கடன் பற்றுக்களின் நிலுவை மற்றும் 5 வருடங்களுக்கும் அதிகம் பழைமை வாய்ந்த கடன் நிலுவைகள் 19,593,320.10 ரூபா தொகையாகக் காணப்பட்டன. நிறுவகம் அந்த நிலுவைத் தொகைகளை மீளறவிடுவதற்கு சரியான நடவடிக்கையை எடுத்துள்ளது. சேவையை விட்டும் விலகிச்சென்ற அந்த ஊழியர்களிடமிருந்து வரவேண்டிய 286,532.75 ரூபா நிலுவைத் தொகைகளை மீளறவிடும் பொருட்டு அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, மொத்தம் 121,085.91 ரூபா பற்றுக்கள் மற்றும் கடன் நிலுவை புலனாய்வு செய்வதற்காக எஞ்சியிருக்கின்றது. எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5 வருடங்களுக்கும் அதிக காலம் பழைமையான கடன் பற்றுக்கள் மற்றும் கடன் பற்று நிலுவைகள் ஆகியவற்றிலிருந்து 646,965.00 ரூபா தொகையொன்று திரண்ட நிலுவையாக எஞ்சியிருக்கின்றது. இது செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் என இனங்காணப்பட்டுள்ளது.

மேலும் 150,015 ரூபா தொகையொன்று நிறுவகத்தின் முன்னாள் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு ரவிச்சந்திரன் என்பவருக்கு செலுத்தப்படவுள்ளது. திருமதி சத்குணராஜாவுக்கு புலமைப்பரிசில் பற்றுக்கான பிணை உத்தரவாதத் தொகையாக இருப்பதால் இந்தத் தொகை கணக்குகளில் இருக்க வேண்டிய தொகையாகும். சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளரான திரு உபதிஸ்ஸ பரணமான்ன என்பவர் வழங்கும் உணவு வழங்கல் சேவைகளுக்கான 50,000 ரூபா வைப்புத் தொகையும் கணக்குகளில் இருக்க வேண்டிய தொகையாகும். அதற்கிணங்க, 100,671.91 ரூபா தொகை மாத்திரமே கடன் பற்றுக்களிலிருந்தும் 5 வருடங்களுக்கு அதிக காலம் பழைமையான கடன் நிலுவைகளிலிருந்தும் தீர்ப்பனவு செய்யப்படவுள்ளது. எதிர்காலத்தில் இதனைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி சார்ந்த பெறுபேறுகள்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வேதனங்கள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள் என்பவற்றிலிருந்த அதிகரிப்பும், வருடாந்தத் தேய்மானத்திலிருந்த அதிகரிப்பும் நிதி சார்ந்த பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்துள்ளன.

## 4. இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றுகை

(a) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் எமது நிறுவகம் அது தாபிப்புப் பெற்ற நாளிலிருந்து பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான மாநாடுகள், கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலையரங்குகள் என்பவற்றை நடத்துதுகின்ற ஒரு மத்திய நிலையமாக விளங்கியுள்ளது என்பதற்கு சான்றாக அமையும்.

(i) **நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிராந்திய மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கல்விச் சுற்றுலாக்கள்**

1. இந்த நிறுவகம் விவசாயத் துறையின் அபிவிருத்தியும் மற்றும் ஆராய்ச்சியும் பற்றிய சர்வதேச பாடநெறியின் கீழ் சர்வதேச பயிலுநர்களுக்கு களப் பயிற்சி அனுபத்தை வழங்குவதற்கான ஒரு பயிற்சி நிலையமாக உதவியுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம் நெதர்லாந்து வெகனிஞ்ஜன் விவசாயப் பல்கலைக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் 1984 ஆம் ஆண்டு முதல் 4 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டப்பட்டு வந்தது.
2. ஆசிய பிராந்திய உற்பத்தித்திறன் அமைப்பின் உதவியுடனும் மற்றும் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் கூட்டொத்துழைப்புடனும் இந்த நிறுவகத்தினால் 1986 ஆம் ஆண்டில் ஒற்றோபர் மாதம் 3 முதல் 31 ஆம் திகதி வரை 'கிராமியக் கருத்திட்ட அபிவிருத்தி' என்ற தலைப்பில் ஒரு சர்வதேசப் பபயிற்சிப் பாடநெறி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
3. இந்த நிறுவகத்தினால் 'விவசாய சந்தைப்படுத்தல் மற்றும் தகவல்கள்' என்ற தலைப்பில் ஒரு பாடநெறி தயாரிக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களுக்காக நடத்தப்பட்டதுடன் ஒரு கல்வி சார்ந்த சுற்றுலாவும் ஏற்பாடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.
4. இந்த நிறுவகத்தினால் கிராமிய அபிவிருத்தித் திட்டமிடலிலுள்ள பங்குபற்றல் அணுகுமுறைகள் தொடர்பான ஒரு சர்வதேசப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (RRA/PRA PCM) பங்காளதேசத்திலுள்ள ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான (CIRDAP) ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி நிலையத்தின் கூட்டொத்துழைப்பில் தயாரிக்கப்பட்டு 2005 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.
5. நிறுவகம், இந்தியாவிலுள்ள கிராமிய அபிவிருத்தித் தேசிய நிறுவகம் (NIRD) மற்றும் CIRDAP ஆகியவற்றின் கூட்டொத்துழைப்பில், கிராமிய அபிவிருத்தியில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு பற்றிய ஒரு சர்வதேசப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைத் திட்டமிட்டு நடத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டம் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 முதல் 23 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.

6. இந்தியாவிலுள்ள கிராமிய அபிவிருத்தித் தேசிய நிறுவக (NIRD) நிபுணர்களுக்கு இந்த நிறுவகத்தினால் 2011 ஆம் ஆண்டில் ஒரு கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிராமிய நீர் விநியோக முறைகள் பற்றி ஆராய்வது இந்த கல்விச் சுற்றுலாவின் நோக்கமாகவிருந்தது.
7. ஆசிய பசுபிக் பிரந்தியத்திற்கான ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி பற்றிய நிலையமும் (CIRDAP) மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகமும் (HARTI) கூட்டாக இணைந்து 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 முதல் 20 ஆம் திகதி வரை 'பழங்களினதும் மரக்கறி வகைகளினதும் விநியோகச் சங்கிலியில்' ஏற்படும் அறுவடைக்குப் பிற்பட்ட கால இழப்புகள் பற்றிய ஒரு சர்வதேச வேலையரங்கை ஏற்பாடு செய்திருந்தன.
8. பங்காளதேசத்தின் கிராமிய அபிவிருத்தி நிறுவகத்திடமிருந்து எமது நிறுவகம் ஒரு வேண்டுகோளை விடுத்ததையடுத்து, இந்தியாவின் கிராமிய அபிவிருத்தி நிலையத்தினது நிபுணர்களுக்கு ஒரு கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையின் கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இந்த வெற்றிகரமான சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏனைய ஆசிய நாடுகளினது விவசாய அபிவிருத்தியும் புனாநிர்மாணமும் சம்பந்தப்பட்ட பிராந்திய தேவைப்பாடுகளையும் விடயங்களையும் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் விவசாய செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய (ii)/(iii) ஆய்வுகள் ஆசிய நாடுகளின் ஒத்துழைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுகள் மேற்குறித்த விடயங்கள் சம்பந்தமாக CIRDAP, ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றின் கூட்டொத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகளாகும்.

01. விவசாய மறுசீரமைப்பும் கிராமிய அபிவிருத்தியும் பற்றிய ஆசிய பிராந்திய மதிப்பாய்வு - 1973
02. ஆசிய பிராந்தியத்தில் கிராமிய அமைப்புகளினதும் கிராமிய அபிவிருத்தியினதும் பங்களிப்பு - 1976
03. CIRDAP அனுசரணை வழங்கிய விவசாய மறுசீரமைப்பும் நிருவாகமும் பற்றிய பிராந்திய ஆய்வின் உள்நாட்டு ஆய்வு - 1977
04. ஹவாய் ஈஸ்ட்-வெஸ்ட் நிலையம் ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்த பிராந்திய ஆய்வு - 1980: இது இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பச சந்தைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான ஆய்வாக விளங்கியது.
05. இந்த நிறுவகம் CIRDAP நடத்திய ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தியில் மக்கள் பங்குபற்றலை ஊக்குவிப்பதற்கான தொழிற்பாட்டு ஆராய்ச்சியில் இணைந்து கொண்டது. இந்த ஆராய்ச்சி எல்லா 14 CIRDAP உறுப்பு நாடுகளினதும் பங்குபற்றலுடன் இரண்டு கட்டங்களில் (1984 மற்றும் 1990) மேற்கொள்ளப்பட்டது.
06. சிறியளவான பண்ணை முறைமைகளின் தொழில் மீதான உற்பத்தித்திறனும் மற்றும் பயன்களும் தொடர்பில் CIRDAP நடத்திய ஆய்வில் இந்த நிறுவகமும்

பங்குபற்றியது. இந்த ஆய்வு எல்லா CIRDAP உறுப்பு நாடுகளினதும் பங்குபற்றலில் 1985 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

07. எல்லா உறுப்பு நாடுகளுக்குமென 1989 ஆம் ஆண்டில் CIRDAP மூலம் சிறு விவசாயிகளுக்காக 'தொழிற்படும் விவசாய சேவைகளின் அமைப்பும் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளும்' பற்றிய ஆய்வில் இந்த நிறுவகம் பங்குபற்றியது.

08. ஈந்த நிறுறுவகம், சிறு அளவான நீர்ப்பாசனத் திட்டத்தைச் செயற்படுத்துதல் மற்றும் கிராமிய மக்கள் மீது அதன் தாக்கமும் பற்றி CIRDAP மூலம் 1990 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தெற்காசிய நாடுகளிலுள்ள வாய்ப்புகள் தொடர்பான பின்னூட்டல் தொழிற்பாட்டு ஆராய்ச்சியில் பங்குபற்றியது.

09. இந்த நிறுவகம், 1992 ஆம் ஆண்டிலிருந்து எல்லா CIRDAP உறுப்பு நாடுகளிலும் CIRDAP மூலம் நடத்தப்பட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்திக் கருத்திட்ட (MVRD) ஆய்வில் பங்குபற்றியது.

10. இந்த நிறுவகம், 1994 -1998 ஆம் ஆண்டுகளிலிருந்து எல்லா உறுப்பு நாடுகளிலும் CIRDAP மூலம் நடத்தப்பட்ட சிறு விவசாயிகளுக்கான விவசாய சேவை விநியோக முறைமைகளை வலுப்படுத்துவது பற்றிய ஆய்வுகளில் பங்குபற்றியது. அந்த ஆய்வுகள் இரண்டு கட்டங்களில் நடத்தப்பட்டன.

11. 2008 ஆம் ஆண்டில் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வறுமை தொடர்பான கொள்கை வகுத்தமைப்பு பற்றிய பேச்சுவார்த்தையில் இந்த நிறுவகம் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தியது.

இந்த நிறுவகம் 1980 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலிருந்தே விவசாய விடயங்கள் சம்பந்தமான தகவல்களை சேகரிப்பதிலும் பகிர்ந்தளிப்பதிலும் துல்லியமாக ஈடுபட்டு வருகின்றது. இந்த நோக்கத்தின் நிமித்தம், இந்த நிறுவகத்தில் USAID உதவியைக் கொண்டு ஒரு புள்ளிவிபரத் தரவு படிமுறைப்படுத்தல் நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வாளர்களுக்கு தேவையான தரவுகளை வழங்குவது இதன் குறிக்கோளாகும்.

இது தவிர, எமது நிறுவகம் இலங்கையில் வறுமை மற்றும் கிராமிய அபிவிருத்தி சம்பந்தப்பட்ட தகவல்களையும் CIRDAP கிராமிய அபிவிருத்தித் திட்ட அறிக்கையின் நிமித்தம் வழங்குகின்றது. அறிக்கையிலுள்ள தகவல்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவைவ இற்றைப்படுத்தப்படுகின்றன. குறித்த அறிக்கை விஷேடமான ஒரு கருப்பொருளில் வெளியிடப்படுகின்றது.

எமது நிறுவகத்திற்கு தகுதியும் மற்றும் திறனுமிருக்கின்ற பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த வெளிநாட்டு நிறுவனங்கள் எமது நிறுவகத்தை ஒரு வள நிலையமாகக் கருதியது. ஆகையால் அத்தகைய நிறுவனங்கள் எமது நிறுவக உதவியை நாடியிருந்தன. உதாரணங்கள் பின்வருமாறு:

01. நெதர்லாந்து வெகனிஞ்ஜன் விவசாயப் பல்கலைக்கழகம் இலங்கையில் 1979 ஆம் ஆண்டு விவசாயத் துறையைத் திட்டமிடுவது தொடர்பான தனது ஆய்வை மேற்கொள்வதற்கு எமது நிறுவகத்துடன் இணைந்துள்ளது.

02. ஐக்கிய இராச்சியத்தின் கற்கைநெறிப் பல்கலைக்கழகம் 1979 ஆம் ஆண்டில், நீர் பாவனை பற்றிய ஒரு ஆய்வை மேற்கொள்ளும் பொருட்டு எமது நிறுவகத்தின்

உதவியைப் பெற்றுக்கொண்டது. 1979 ஆம் ஆண்டில், உலர் வலயத்திலுள்ள பண்ணை அம்சங்கள் தொடர்பான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர, பின்வரும் உதாரணம், இந்த நிறுவகம் நூலகத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு நிலையமாகத் தொழிற்படுகின்றது என்பதற்கு சான்றாக விளங்கும்.

1. ஒரு சர்வதேச நூலகத் தகவல் சேவை நிலையம் என்ற ரீதியில், ஆசிய பசுபிக் சமூக விஞ்ஞானத் தகவல் வலையமைப்பு நூலகம் 1970-80 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் நூலகங்களைப் பிரதிநிதிப்படுத்தும் நிமித்தம் எமது நூலகத்தை ஒரு நிலையமாகப் பயன்படுத்துவதற்கு கருத்திற்கொண்டுள்ளது.
2. இந்த நிறுவகம் விஞ்ஞானத் தொழில்நுட்பத் தகவல்களுக்கான ஒரு ஆசிய பசுபிக் வலையமைப்பு நிலையமாகத் தொழிற்பட்டுள்ளதுடன் 1987 ஆம் ஆண்டில் UNESCO ஆரம்பித்த நிலையத்துடன் அனுபவத்தையும் பகிர்ந்துள்ளது.

**(b)** 2010-2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிடுவதற்கெனத் திட்டமிடப்பட்டு மேமற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி ஆய்வுகளில், இது வரை 12 அத்தகைய ஆய்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதிகளவான ஆய்வுகள் வெளியீட்டு நடபடிக்கையின் நிமித்தம் ஆராய்ச்சியாளர்கள் வெளியீட்டு அலகுக்கு அனுப்பி வைத்துள்னர். எனினும், வெளியீட்டுப் பிரிவில் வெற்றிடங்களை நிரப்புவதில் நிலவிய தாமதம் இந்த அறிக்கைகளை வெளியிடுவதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.

2010-2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடத்தப்பட்டதும் வெளியிடுவதற்கும் எனத் திட்டமிடுவதற்குமான ஆய்வுகள் பற்றிய முன்னேற்ற விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| தற்போதைய முன்னேற்றம் | தொகை | விகிதம் |
|---|---|---|
| 1. வெளியிடப்பட்ட ஆய்வுகள் | 12 | 41 |
| 2. வெளியிடப்படுவதற்கு ஆயத்தமாகவுள்ள ஆய்வுகள் (ஒத்தீட்டு வாசிப்பு) | 8 | 28 |
| 3. மொழிப் பதிப்பு | 2 | 7 |
| 4. வெளியக மீளாய்வுகளினதும் கருத்துரைகளினதும் உள்ளடக்கம் | 4 | 14 |
| 5. வெளியக மீளாய்வுக்காக அனுப்பப்பட்ட ஆய்வுகள் | 2 | 7 |
| 6. மேலும் மேம்படுத்தப்பட்ட ஆய்வுகள் | 1 | 3 |
| மொத்தம் | 29 | 100 |

மேற்குறிப்பிடப்பட்டதும் மற்றும் வெளியிடுவதற்கெனத் திட்டமிடப்பட்டதுமான சில ஆய்வுகள், அத்தகைய ஆய்வுகள் தயாரிக்கப்பட்டு கொள்கை ஆக்குநர்களுக்கு

அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் கொள்கை ஆக்குநர்களின் கவனத்தை சிறந்த முறையில் ஈர்த்துள்ளன. ஆகையால் அத்தகைய ஆய்வுகள் சில கொள்கைத் தீர்மானங்களின் போதும் உதவியுள்ளன. உ-ம்: குறித்த ஆய்வினது முடிவுவுகளின் அடிப்படையில், நக்லஸ் காட்டுப் பகுதிகளில் ஏலக்காய்களைப் பயிரிடுபவர்கள் தொடர்பில் முக்கியமானதொரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(C)** கௌரவ அமைச்சரின் கருத்துரைகளுடன் திட்டத்திற்கு மேற்கொள்ளப்படவிருந்த மாற்றங்களின் காரணமாக 2015 ஆராய்ச்சித் திட்டத்திற்கான அங்கீகாரம் 2015.05.12 ஆம் திகதி பெறப்பட்டது. அதற்கிணங்க, அறிக்கை தொகுக்கும் பணியை தாமதித்து ஆண்டு இறுதியில் களப் பணி ஆய்வுகளை நிறைவு செய்ய வேண்டியிருந்தது. இரண்டு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் குறித்த ஆண்டு ஆரம்பத்தில் நிறுவகத்தை விட்டு விலகியமையும் அதே நேரம் குறித்த ஆண்டு நடுப் பகுதியில் மேலும் அத்தகைய இரண்டு உத்தியோகத்தர்கள் உயர் கல்விற்காக நாட்டை விட்டுச் சென்றமையும் இந்தத் தாமதத்திற்கு காரணமாகவிருந்த முக்கிய காரணிகளாகும். குறித்த ஆய்வுகள் 2016 ஆம் ஆண்டிற்காக ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் அறிக்கை தயாரிக்கும் விடயம் தாமதிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி ஆய்வுகளின் முன்னேற்றம் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தற்போதைய முன்னேற்றம் | தொகை | விகிதம் |
|---|---|---|
| 1. வெளியிடப்பட்ட ஆய்வுகள் | 1 | 7 |
| 2. நிறைவு செய்யப்பட்டு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கைகள் | 2 | 13 |
| 3. வெளியக மீளாய்வுகளுக்கு அனுப்பப்பட்ட ஆய்வுகள் | 1 | 7 |
| 4. முதலாவது நகல் அறிக்கை நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகள் | 6 | 40 |
| 5. முதலாவது நகல் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்ற ஆய்வுகள் | 5 | 33 |
| மொத்தம் | 15 | 100 |

**(D)** குறித்த ஆண்டு காலப் பகுதியில் இரண்டு ஆராய்ச்சிப் பயிற்சிக் கூட்டங்கள் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தாலும் கூட, தேவையான போது அந்த குழுவிடமிருந்து ஆலோசனைகளும் அறிவுரைகளும் தொடர்ச்சியாகப் பெற்று கொள்ளப்படுகின்றன. சகல ஆராய்ச்சி அறிக்கைகளும் குழு உறுப்பினர்களினால் மீளாய்வு செய்யப்படும். ஆராய்ச்சிக் குழுவில் தகவுடைய நிபுணர் ஒருவர் இல்லையெனும் பட்சத்தில் மாத்திரம் ஆராய்ச்சி அறிக்கைகள் வெளியக மீளாய்வுக்காக அனுப்பப்படுகின்றன அத்தகைய அறிக்கைகளும் கூட முதலில் மீளாய்வு செய்யப்பட்டு, வெளியக

மீளாய்வுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் குறித்த குழுவின் மூலம் சிபாரிசுகள் பெறப்படுகின்றன.

மாதிரிகளைத் தெரிவுசெய்தல் மற்றும் ஏனைனய ஆலோசனைகள் தொடர்பில் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியம் ஏற்படுகின்ற போது குறித்த குழு உறுப்பினர்கள் தொடர்ச்சியாகக் கூடுவார்கள். குறித்த ஆண்டு ஆரம்பத்திலும் மற்றும் நடுப்பகுதியிலும் ஆராய்ச்சிப் பிரேரணைகள் மற்றும் பிரேரணைகளுக்கான மேம்பாடுகள் ஆகியன தொடர்பில் குழு உறுப்பினர்களிடமிருந்து அறிவுரைகளும் மற்றும் மீளாய்வுகளும் பெறப்படுகின்றன. எப்பொழுதும் அவர்கள் அதிக வேலைப் பளுவாக இருப்பதால் அவர்கள் கூடுவது கஷ்டமானதாகும்.

(E) 2015 ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட சகல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் செயல் திட்டத்தை அங்கீகரிப்பதில் நிலவிய தாமதத்தின் காரணமாக மேற்கொள்ள முடியவில்லை. ஆகையால், அனைத்து ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் தத்தமது ஆராய்ச்சிக் கருத்திட்டங்களில் கருசனை செலுத்தினர். ஆதலால், அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தும் வகையில் அந்தக் குழு உறுப்பினர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆதலால், ஆராய்ச்சிப் பிரிவினது உத்தியோகத்தர்கள் அவர்களாகவே அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த வேண்டியிருந்தது.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

(a) பணிப்பாளரின் உத்தியோகபூர்வ பங்களாவில் தங்கியிருந்த அலுவலரிடமிருந்து தொலைபேசிக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதிக் கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து கிடைத்த அறிவித்தலின் பிரகாரம், உத்தியோகபூர்வ பங்களாவிலிருந்து அந்த அலுவலரை வெளியேறச் செய்யுமாறு கோரி அமைச்சுக்கு அறிவிக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(b) 351-வது சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

(c) நிறுவகத்தின் பழைய வாகனங்களின் விற்பனையிலிருந்து வரும் வருமானமும் நிறுவகத்தின் சம்பாத்தியங்களும் 2323317 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எமது நிறுவகம் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்தது. ஆகையால், குறித்த நோக்கத்தின் நிமித்தம் அங்கீகாரத்தைக் கோரி அமைச்சினூடாக 2015 ஆம் ஆண்டில் திறைசேரிக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. குறித்த ஆண்டு காலப் பகுதியில் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெறாததால் உத்தேசித்தவாறு வாகனங்களைக் கொள்வனவு செய்யவில்லை. எனினும், 2016 ஆம் ஆண்டிலும் மீண்டும் குறித்த அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரம் வழங்கப்படும் வரை அந்தப் பணம் 7 நாள் கடன் வைப்புகளாக தற்காலிக அடிப்படையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

(d) ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த 32-5590 ஆம் இலக்க வாகனத்தின் பராமரிப்புப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப உத்தியோகத்தரும் ஏற்கெனவே வாகனத்தை சோதனையிட்டுள்ளார்.

அந்த வாகனத்தின் பராமரிப்பு தொடர்பான கொடுப்பனவு எற்கெனவே ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரிக்கு செலுத்தப்பட்டிருந்தது. தனித்தனியான பழுதுபார்ப்பு நிமித்தம் அந்த ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரிக்கு மற்றொரு கொடுப்பனவு செலுத்தப்படுவதற்கு இருந்தாலும், கொடுப்பனவைச் செலுத்துவதற்கும் மற்றும் 32-5590 ஆம் இலக்க வாகனத்தை நிறுவகத்திற்கு எடுத்து வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(e) இந்தத் தொகையைச் செலுத்துமாறு அமைச்சின் பாதுகாப்புப் பிரிவுக்கு அறிவிக்கப் பட்டது. அந்தப் பிரிவின் அறிவுரைகளுக்கு இணங்க, ஒரு கோரிக்கை அனுராதபுர பொலிஸ் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பொலிஸ் பிரிவின் பதில் கிடைத்தவுடன் அதற்கேற்ப மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

(a) இதன் நிமித்தம் செய்திப்பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரித்ததன் மூலம் பல தடவைகள் விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டன. ஆனால், குறித்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க, அந்தப் பதவிற்கு பொருத்தமான ஒரு நபரை ஆட்சேர்த்துக் கொள்ள முடியவில்லை. இந்த வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு தற்பொழுது ஆட்சேர்ப்பு நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(b) **சிரேஷ்டப் புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்**

இந்த வெற்றிடத்திற்கு பொருத்தமான தகுதிவாய்ந்த ஒரு நபரை உள்ளக ரீதியில் நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து அறிவுரைகள் கோரப்பட்டு வருகின்றன.

ஆராய்ச்சி உத்தியோகத்தர்

விண்ணப்பங்கள் அழைக்கப்பட்ட பின்னர் எழுத்துமூலப் பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. <u>பொறுப்புக்கூறும் தன்மையும் நல்லாட்சியும்</u>**

**5.1 வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடு**

மதிப்பீடுகளுக்கும் ஏற்கெனவேயிருக்கின்ற பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**5.2 கொள்வனவும் ஒப்பந்தமும்**

(a) கொள்வனவுத் திட்டம் மாதாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றது. இந்தத் திட்டம் அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல் தொடர்பான ஆவணத்தின் 4.2.1. ஆம் பந்திற்கு இணங்க தயாரிக்கப்படுகின்றது.

(b) இந்த வித்தியாசம், கொள்வனவுத் தேவைப்பாட்டிலிருந்த மாற்றங்களின் காரணமாக ஏற்பட்டது. ஆதலால் மதிப்பிடப்பட்ட வீதத்தைப் பார்க்கிலும் குறைந்த வீதத்தில் கொள்வனவு செய்ய முடிந்திருக்கின்றது.

(c) அரசாங்கத்தின் கொள்வனவு தொடர்பான வழிகாட்டல் ஆவணத்தின் 6.3.3 ஆம் பிரிவுக்கு இணங்க, கேள்வி விலை மனுக்களைத் திறக்கும் குழுவுக்கு மூன்று உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(d) அரசாங்கத்தின் கொள்வனவு தொடர்பான வழிகாட்டல் ஆவணத்தின் 7.8 ஆம் பந்திற்கு இணங்க, சேவை வழங்கும் தரப்பு குறித்த துறையில் 6 வருட கால அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனை ஒரு கேள்வி விலை மனு தாரர் தரப்பின் ஒரு கேள்வி விலை மனுவை நிராகரிப்பதற்கு முக்கிய காரணம் என்பது குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்த நிராகரிப்புக்கு அறிவுபூர்வமான காரணம் ஏதுமில்லை. ஆகையால், திணைக்களக் கொள்வனவுக் குழு ஆகக்குறைந்த விலையில் கணனிகளைக் கொள்வனவு செயவதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. கமத்தொழில் அமைச்சிலிருந்து ஆலோசனையைப் பெற்ற பின்னர் இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. அதே கம்பனியிலிருந்தே அத்தகைய கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், எந்தவித முறைப்பாடுகளும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.
உரிய சேவை வழங்கும் தரப்பு அந்தக் கணனிகள் பற்றி அறிவித்துள்ளது. அந்தக் கம்பனியினால் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தக் கணனிகள் தொடர்பில் எந்தவித தவறான கருத்துக்களும் அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை.

(e) பதிவியிலிருந்து கணக்காளர் பதவி விலகிய நேரத்தில் அரசாங்கத்தின் கொள்வனவு தொடர்பான வழிகாட்டல் ஆவணத்தின் 2.9.1 ஆம் பந்திற்கு இணங்க, ஒரு பிரதியீட்டு உறுப்பினராக உதவிக் கணக்காளர் அவர்களினால் பங்குபற்ற முடிந்திருந்தது. எதிர்காலக் கொள்வனவுச் செயற்பாடுகளில் மற்றொரு அலுவலரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 5.3 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

(a) எமது வேண்டுகோளின் பேரில் அரசாங்கம் சுங்கத் தீர்வையை 325,000/ ரூபா வரை குறைத்துள்ளது. உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் வரியைச் செலுத்தி எமது நிறுவகத்திற்கு உரித்துடமையை மாற்றிக் கொடுப்பதற்கான நடபடி முறையிலிருந்தது. எனினும், நாம் உரித்துடமையைப் பெற்றுக்கொள்ளும் நடபடிமுறையிலிருக்கும் அதே நேரத்தில், அரசாங்கம் இந்தத் தொகையை பத்து மடங்குகளால் அதிகரித்துள்ளது. உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் இந்தத் தொகையை செலுத்துமாறு கோரி தனது நாட்டுப் பிரதிநிதிக்கு பணித்துள்ளது. WFP இந்தத் தொகையைச் செலுத்தவில்லையெனில் இந்த

நிறுவகத்தினால் இந்தத் தொகையைச் செலுத்தி, உரித்துடமையைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

(b) வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்புக் கற்கைகளைக் கற்பதற்காக புலமைப்பரிசில்களைப் பெற்று குறித்த ஒப்பந்தங்களிலுள்ள நிபந்தனைகளை மீறிய 10 நபர்களுக்கு எதிராக 1998-2008 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. புலமைப்பரில்களைப் பெற்ற அந்த 10 நபர்களிடமிருந்தும் கிடைத்த பெறுகைகள் மற்றும் சட்ட அந்தஸ்து என்பன தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- புலமைப்பரிசில்களைப் பெற்ற 04 நபர்களுக்கு எதிரான வழக்கில் எமது நிறுவகத்திற்கு சார்பாக நீதிமன்றத் தீர்ப்பு கிடைத்தது. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர், இந்த நபர்களில் ஒருவர் செலுத்த வேண்டிய தொகையை ஒரு ஒப்பந்தத்தின் பேரில், செலுத்தி வருகின்றார். ஏனையவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளனர்.
- புலமைப்பரிசில்களைப் பெற்ற 06 நபர்களின் தற்போதைய முகவரிகள் கிடைக்காத காரணத்தினால் நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டது.

புலமைப்பரிசில்களைப் பெற்ற 06 நபர்களுக்கு எதிராக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- வரவேண்டிய தொகை பிணையுத்தரவாதத் தரப்புகளிடமிருந்து அறிவிடப் பட்டுள்ளது.
- குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- பதிவு தொடர்பான தகவல்கள் பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.
- இலங்கையிலுள்ள அவுஸ்திரேலியா உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அறிவித்தல் (தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன மற்றும் அதிகமானவர்கள் அவுஸ்திரேலியாவில் வசிக்கின்றனர்.) விடுக்கப்பட்டுள்ளது.
- குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு (கு.பு.பி.) அறியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகையால், புலமைப்பரிசில்களைப் பெற்ற அந்த 06 நபர்களின் முகவரிகள் கண்டுபிடிக்கப்படாத காரணத்தினால் அவர்களிடமிருந்து வரவேண்டிய ரூபா 8,539,799 தொகை மீளறவீடு சந்தேகத்திற்கிடமான நிலையிலுள்ளது.

5.4 **கணக்குகள் சமர்ப்பணம்**

பணிப்பாளர்கள் சபைக்கும் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவுக்கும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தங்களுக்கு 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை முன்வைப்பதில் 35 நாட்கள் தாமதம் ஏற்பட்டன. எதிர்காலத்தில், உரிய நேர காலத்திற்கு நிதிக் கணக்குகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6. **முறைமையும் கட்டுப்பாடுகளும்**

(a) **நிதிக் கட்டுப்பாடு**

நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் சரியான கட்டுப்பாட்டு முறையியல்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அதற்கிணங்க இயங்குகின்றது.

(b) **ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்**

ஆராய்ச்சி அறிக்கையை திட்டமிட்டபடி தாமதமின்றி வெளியிடும் வகையில் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கு கட்டுப்பாட்டு முறையியல்கள் காணப்படுகின்றன.

(c) **ஆதனங்கள் கட்டுப்பாடு**

சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், சொத்துக்களைப் பராமரித்தல் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகிய விடயங்களில் கட்டுப்பாட்டு முறையியல்கள் செயல்நடவடிக்கையிலுள்ளன.

(d) **பதவியணி நிருவாகம்**

பதவியணியிலுள்ள வெற்றிடங்கள் நிறுவகத்தின் செயலாற்றுகை சார்ந்த குறிக்கோள்களை அடையும் பொருட்டு நிரப்பப்படும்.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர்

பிரதிகள்: 01. செயலாளர், கமத்தொழில் அமைச்சு
02. செயலாளர், நிதி அமைச்சு